விலை: 30.00
பக்கங்கள் : பன்னிரண்டு + 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 05 ஞாயிற்றுக்கிழமை (21.11.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 337

## நாட்டில் மீண்டும் இரத்தக்கறையை உருவாக்கவே அரசு விரும்புகிறது

### எதிர்க்கட்சி எம்.பி ரோஹினி குற்றச்சாட்டு



(கொழும்பு)

உலக நாடுகள் யுத்த நினைவுத் தூபிகளை அகற்றி அன்பை வளர்க்கும் சூழலில், இங்கு யுத்த நினைவுச் சின்னங்களை உருவாக்கி இன விரோதத்தையும் கோபத்தையும் உருவாக்கவே அரசாங்கம் முயற்சிக்கின்றது,

நாட்டில் யுத்தமோ அல்லது இன முரண்பாடுகளோ இல்லை 11

### மாவீரர் நினைவேந்தலுக்கு

## சாவகச்சேரி நீதிமன்றமும் 21 பேருக்கு தடை விதிப்பு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி பிரதேசத்தின் சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மாவீரர் நினைவேந்தலை முன்னெடுக்க தடை விதிக்கக்கோரி சாவகச்சேரி பொலிஸார் முன்வைத்த கோரிக்கைக்கு அமைய 11

### மாவீரர் வாரம் இன்று ஆரம்பமாகும் நிலையில்

# வடக்கு, கிழக்கு தமிழர் தாயகத்தில் பொலிஸ், இராணுவ கெடுபிடிகள்

### துயிலும் இல்லங்களுக்கு முன்பாக மற்றும் வீதிகளில் சோதனைச் சாவடிகள் அமைப்பு

*(யாழ்ப்பாணம்)*

**மாவீரர் வாரம் இன்று ஆரம்பமாகும் நிலையில் வடக்கு - கிழக்கு தமிழர் பிரதேசங்களில் பொலிஸ், இராணுவ மற்றும் புலனாய்வாளர்களின் கெடுபிடிகள் அதிகரித்துள்ளதாக அரசியல் அவதானிகளால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

தமிழ் மக்களின் விடிவுக்காக தமது உயிர்களைத் தியாகம் செய்த வீரமறவர்களை நினைவுகூரும் முகமாக நவம்பர் 21 தொடக்கம் 27 வரை மாவீரர் வாரமாக வடக்கு - கிழக்கு தமிழர் தாயகத்திலுள்ள தமிழ் மக்களாலும் புலம்பெயர் நாடுகளிலுள்ள ஈழத் தமிழ் மக்களாலும் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

கடந்த நல்லாட்சியில் மாவீரர் தின நினைவேந்தல் நிகழ்வுகள் அனுஷ்டிக்கப்பட்டபோதிலும் இந்த ஆண்டு கோட்டாபய அரசாங்கத்தினாலும் நீதிமன்றங்களினாலும் இந்த நிகழ்வுக்கு தடை விதிக்கப்பட்டது.

இதையடுத்து, வடக்கிலுள்ள மாவீ 11

### கொரோனா

மரணம் — **22**

தொற்று — **725**

(கொழும்பு)

நாட்டில் மேலும் 22 பேர் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர். 11

## இதயங்களில் நினைவுகூர்ந்து வாழுமிடங்களில் விளக்கேற்றி ஆத்ம கடன் நிறைவேற்றுவோம்

### தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

இறந்த எம்மை விட்டுப் பிரிந்த ஆத்மாக்களை நினைவுகூரும் முகமாக அமைதியாக எம், வாழுமிடங்களில், நம் இதயங்களில் நினைவுகூர்ந்து விளக்கேற்றி ஆத்ம கடன் நிறைவேற்றுமாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா தெரிவித்தார்.

குறித்த விடயம் தொடர்பாக அவர் அனுப்பியுள்ள 11

## கிளாலியில் வீடு புகுந்து வாள்வெட்டுக் குழு அராஜகம்

### வீட்டின் ஜன்னல், கதவுகள் கொத்தி உடைப்பு

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்டம் பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கிளாலிப் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற வாள்வெட்டு வன்முறைச் சம்பவத்திலிருந்து குடும்பஸ்தர் ஒருவர் தனிநபராகப் போராடி குடும்பத் 11

## அரசிலிருந்து வெளியேற சுதந்திரக் கட்சி தயார்!

### அமைச்சர் மகிந்த அமரவீர

(கொழும்பு)

அரசாங்கத்திலிருந்து விலகுவது என ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு உடனடியாக தீர்மானித்தாலும், அதற்குத் தயாராக இருப்பதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் 11

### வெடிபொருட்களுடன்

## மன்னாரில் இருவர் கைது

(மன்னார்)

மன்னார், சாந்திரபுர கடற்கரை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனையின்போது சட்டவிரோத வெடி பொருட்களுடன் இரு 11

### கிளிநொச்சியில்

## கோவிட்டால் 50 வயதுடைய நபர் மரணம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் உயிரிழந்த 50 வயதுடைய நபருக்கு கொரோனாத் தொற்று 11

## பொருளாதார நெருக்கடிக்கு கொரோனா காரணமல்ல

### அமைச்சர் கம்மன்பில கண்டுபிடிப்பு

(கொழும்பு)

நாடு தற்போது எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடியை தாம் மிகச் சரளமாக தெளிவுபடுத்துவதாக எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திடம் ரூபாய் மற்றும் டொலர் இல்லாததே தற்போது காணப்படும் பிரச்சினை எனவும் 11

## தீயில் எரிந்த குடும்பப் பெண் சிகிச்சை பலனின்றி மரணம்

### அல்வாய்ப் பகுதியில் பரிதாபம்


(யாழ்ப்பாணம்)

தீயில் எரிந்த குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் திக்கம் அல்வாய்ப் பகுதியைச் சேர்ந்த பரமநாதன் சசிகலா (வயது-47) என்ற 5 பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த குடும்பப் பெண் கடந்த 13ஆம் 11

உ
சிவமயம்



# பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகசபைத் தெரிவும் - 2021

## அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம்

A9 வீதி, கிளிநொச்சி

எமது ஆலயப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகசபைத் தெரிவும் எதிர்வரும் 2021.12.07 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு ஆலய அன்னதான மண்டபத்தில் நடைபெற இறையருள் கைகூடியுள்ளது. ஆலய யாப்பின் பிரகாரம் பொதுச்சபை உறுப்பினர்கள் யாவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்பாக வேண்டுகின்றோம்.

**நிகழ்ச்சி நிரல்**

* தேவாரம்
* ஆலய பிரதம குரு உரை
* ஏனைய சமயப் பெரியார் உரை
* தலைமையுரை
* செயலாளரினால் சென்ற வருட பொதுக்கூட்ட அறிக்கை சமர்ப்பித்தல்.
* வருடாந்த கணக்கறிக்கை சமர்ப்பித்தல்
* கணக்காய்வாளரின் கருத்துரை
* ஏனைய விடயங்கள்
  1). அன்னதான மண்டப திருப்பணி
  2). ஆலய பாலஸ்தானம் சம்பந்தமானது
  3). ஏனைய திருப்பணி சம்பந்தமான கலந்துரையாடல்கள்.
* கிராம அலுவலரின் உரை
* கலாசார உத்தியோகத்தரின் உரை
* புதிய பரிபாலன சபை உறுப்பினர் தெரிவு
* நன்றியுரை – செயலாளர்
* தேவாரம்

குறிப்பு :- அனைவரது நேரத்தையும் கருத்தில் கொண்டு குறித்த நேரத்திற்கு சமுகமளிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

நன்றி

ஆலய பரிபாலன சபை சார்பில்

ச. ஸ்ரீ கௌரிபாலா
தலைவர்

மா. சிவராசா
செயலாளர்

சு. வரதராசா
பொருளாளர்,

(C-3051)

021 228 3745 21.11.2021

## மணமகன் தேவை

யாழிந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976 ஆம் ஆண்டு பிறந்த குடும்பப்பாங்கான ஆசிரியையாக கடமை புரியும் மணமகளிற்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். (8682)

☎-070 640 5951
e-mail : engchelvam@gmail.com

## காணி தேவை

நுணாவில் சாவகச்சேரி A9 பிரதான வீதியில் 1 தொடக்கம் 4 பரப்புள்ள நிலம் தேவை.
நல்ல விலை கொடுக்கப்படும். (8708)

077 887 6969

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

# கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் அபிவிருத்திப் பணிகளில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து செயலாற்றி வருகின்ற கனடா பழைய மாணவர் சங்க உப தலைவர் திரு. **சு. மாதவன் ஐயா** அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி ராஜலக்சுமி சுப்பிரமணிய ஐயர்

(ராஜாம்பாள்)

அவர்கள் இறைபதம் அடைந்தமையை இட்டு யா / வைத்தீஸ்வராக் கல்லூரி சமூகத்தினர் ஆகிய நாம் கண்ணீர்ப் பூக்களைத் தூவி அஞ்சலி செலுத்துகின்றோம்.

*கனத்த செய்தி காற்றோடு*
*கல்லூரி எங்கும் பரவியது*
*தோற்றுப் போனது அன்னையவள்*
*தூய ஆன்மா உலகை விட்டு*
*குடும்ப விளக்கின் மறைவில் நாங்கள்*
*அஞ்சலி செலுத்தி நிற்கின்றோம்.*

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வைத்தீஸ்வரப் பெருமானின் பாதங்களைப் பணிந்து பிரார்த்திக்கின்றோம்.

(8705)

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்**
யா / வைத்தீஸ்வராக் கல்லூரி

# அந்தியேட்டிதின அஞ்சலியும் நன்றி நவிலலும்



தாய் மடியில்
28
03
1938

சிவன் அடியில்
21
10
2021

இளவாலை

## சைவப்புலவர் சுப்பிரமணியம் செல்லத்துரை

(ஓய்வுநிலை அதிபர்)

*அறவாழ்வு வாழ்ந்து அரும்பணிகள் புரிந்து*
*உறவோடு உயர்ந்து உரமிட்டு உழைத்து*
*சிறந்தோங்கிப் பலர் வாழ சிறப்புக்கள் பல செய்து*
*வற்றாத ஊற்றாய் வள்ளல் குணங்கள்*
*சொத்தாகப் பெற்று வாழ்வாங்கு வாழ்ந்து*
*எம் உள்ளத்துள் உறையும் தெய்வமாய் ஆன*
*எங்கள் தந்தையை என்றும் தொழுதிடுவோம்*
*சிவனடி சேர்ந்தவரை நிதமும் வணங்கிடுவோம்.*


எங்கள் தந்தையின் பிரிவின்போது தேடிவந்து துயர் பகிர்ந்தும் பல்வேறு வழிகளில் உதவி செய்தும் ஆறுதல் தந்த அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

(8672)

வேல வளவு,
ஏழாலை மேற்கு, சுன்னாகம்.

மைந்தர்கள்
செல்லத்துரை நாவரசன்
செல்லத்துரை மாவிரதன்
குடும்பத்தினர்

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்
21.02.1946

மறைவு
23.10.2021

கடந்த 23.10.2021 அன்று இறைபதம் அடைந்த எமது அன்புத் தெய்வம்

## அமரர் திருமதி மனோன்மணி பாலசுப்பிரமணியம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (20.11.2021) சனிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. நாளை (22.11.2021) திங்கட் கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறவுள்ள மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

அன்னார் இறைபதம் அடைந்த செய்திகேட்டு நேரில்வந்து ஆறுதல் கூறிய உற்றார், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்களுக்கும் துண்டுப்பிரசுரம் மற்றும் பதாதைகள், மலர்வளையம் செலுத்தியோர்களுக்கும் மற்றும் வெளிநாட்டில் இருந்து தொலைபேசி அழைப்பை எடுத்து துக்கம் விசாரித்தவர்களுக்கும் இறுதிக் கிரியையில் கலந்துகொண்டவர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று இவ் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.**

(8706)

இல. 286, செம்மணி றோட்,
நாயன்மார்கட்டு.

குடும்பத்தினர்

# எம்மை ஒருபோதும் வீழ்த்த முடியாது

## சவால் விடும் கோட்டா

(கொழும்பு)

**"எதிர்க்கட்சியினரின் ஆர்ப்பாட்டங்களால் பலமிக்க எமது அரசை ஒருபோதும் வீழ்த்தவே முடியாது. எம்மை ஆட்சியில் அமர்த்திய மக்கள் இப்போதும் எமது பக்கமே நிற்கிறார்கள்" என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.**

நாட்டின் தற்போதைய நிலவரம் தொடர்பில் ஆளும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் நேற்று முன்தினம் ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தினர்.

இதன் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"அரசுக்கு எதிராக நாடெங்கும் மக்கள் கிளர்ந்தெழுந்து விட்டார்கள் என்று சில ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டு வருகின்றன.

ஆனால், உண்மையில் அரசுக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழவில்லை.

எதிர்க்கட்சியினர் தான் அரசுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்துள்ளனர். அவர்கள் தான் ஆர்ப்பாட்டங்களை நடத்துகின்றனர்.

அவர்களின் ஆதரவாளர்கள் தான் அரசுக்கு எதிராகக் கூச்சலிடுகின்றனர்.

இந்த எதிர்க்கட்சியினரின் ஆர்ப்பாட்டங்களால் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலமுள்ள எமது அரசை ஒருபோதும் வீழ்த்தவோ - கவிழ்க்கவோ முடியாது. எம்மை ஆட்சியில் அமர்த்திய மக்கள் இப்போதும் எமது பக்கமே நிற்கின்றார்கள்.

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தலின் போது நாட்டு மக்களுக்கு நாம் வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றவில்லை என்பது உண்மை தான்.

கொரோனா பெரும் தொற்றே அதற்குக் காரணம். அந்த வாக்குறுதிகளை படிப்படியாக நிறைவேற்றி வருகிறோம்.



இந்தத் தொற்றுக் காலத்தைப் பயன்படுத்தி எமது ஆட்சியைக் கவிழ்க்கலாம் என்று எதிர்க்கட்சியினர் முட்டாள்தனமாகச் சிந்திக்கின்றனர்.

ஆட்சியைத் தீர்மானிப்பது எதிர்க்கட்சியினர் அல்லர் மக்கள் தான் முடிவெடுப்பார்கள்" - என ஜனாதிபதி தெரிவித்தார். (நி)

# கட்டடமொன்றில் வெடிப்புச் சம்பவம்



(கொழும்பு)

கொழும்பு - கறுவாத் தோட்டம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரீட் வீதியில் அமைந்துள்ள கட்டடமொன்றில் நேற்றுக்காலை வெடிப்பு சம்பவமொன்று இடம்பெற்றது.

பழைய குதிரை பந்தய திடலின் பார்வையாளர் அரங்கின், கீழ் தளத்தில் அமைந்துள்ள சர்வதேச உணவுத் தயாரிப்பு நிறுவனம் ஒன்றுக்கு சொந்தமான உணவு விடுதியில் ஏற்பட்ட எரிவாயுக் கசிவினால் இந்த வெடிப்புச் சம்பவம் ஏற்பட்டுள்ளதாக சந்தேகிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி)

# சோமாலியாவில் உணவின்றி 23 இலட்சம் பேர் அவதி

(சோமலியா)

ஆபிரிக்க நாடான சோமாலியாவில் நிலவும் கடும் வரட்சி காரணமாக சுமார் 23 இலட்சம்பேர்போதிய உணவு, குடிநீர் இன்றி அவதியுற்று வருவதாக ஐ.நா. சபை தெரிவித்துள்ளது.

சோமாலியாவில் தொடர்ந்து நான்காவது வருடமாக இந்த ஆண்டும் போதிய அளவுக்கு மழை பெய்யவில்லை. இதனால் நீர் நிலைகளில் அதிவேகமாக நீர் குறைந்து வறட்சி அதிகரித்து வருகிறது.

இதேவேளை, வறட்சி நீடிக்கு மானால் அடுத்த ஆண்டு, சுமார் 80 இலட்சம் பேர் உணவுப் பற்றாக்குறை பிரச்சனையை எதிர்கொள்ளலாம் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

சோமாலியாவில்கடந்த மூன்று தசாப்தங்களாக போர்கள் நடந்து வருகின்றன. அத்துடன், கடுமையான வறட்சி, வெள்ளம், பூச்சிகள் பயிரை அழிப்பது போன்ற பிரச்சினைகளையும் அந்நாடு எதிர்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)


**IELTS CLASSES**

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால் IELTS, A1 UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH

- Guaranteed to 7.5 in IELTS Exam.
- Pass in UK A1 Exam.
- Exam Registration center.

வகுப்புக்கள் குழுவாகவும் தனியாகவும் கற்பிக்கப்படும்.

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.

TP: 077 780 3970, 074 007 1970

(8439)


# வடக்கில் வாழும் மக்களுக்கு சுதந்திரம் மறுக்கப்படுகிறது

## சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன் விசனம்



(கொழும்பு)

வடக்கில் வாழும் மக்களுக்கு அவர்களது அடிப்படை உரிமைகளை அனுபவிப்பதற்கான சுதந்திரம் தொடர்ச்சியாக மறுக்கப்படுகிறது என இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் முன்னாள் ஆணையாளர் சட்டத்தரணியுமான அம்பிகா சற்குண நாதன், விசனம் வெளியிட்டுள்ளார்.

"அரசாங்கம் கூறுகின்ற நல்லிணக்கம் இது தானா?" என்றும் கேள்வி எழுப்பியுள்ளார். கார்த்திகை தீபத் திரு நாளன்று தீபங்களை ஏற்றியவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் குறித்து தனது கருத்தினை இவ்வாறு டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத் தின் பல்வேறு பகுதிகளிலும் கார்த்திகைத் தீபத்திருநாளை முன்னிட்டு மக்கள் தீபங்களை ஏற்றிக்கொண்டாடிய வேளையில், மாவட்டத்தின் சில இடங்களில் அதனைக் குழப்பும் இராணுவத்தினர் செயற்பட்டதாக அப்பகுதி மக்கள் விசனம் வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)


**வீடு விற்பனைக்கு**

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் மின்சாரநிலைய வீதியில் பிரதான பஸ்நிலையம், போதனா வைத்தியசாலை என்பவற்றுக்கு மிக அருகாமையில் 15 பேர்ச் காணியில் நான்கு அறைகள், சமையலறை, பெரிய விறாந்தை மற்றும் முன்பக்கம் சிறிய விறாந்தை இரண்டு குளியலறைகளுடன் கூடிய ஒரு பெரிய வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு- 076 3551082,071 9071540, 0779291959


# பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கனடா விஜயம்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர், எம்.ஏ.சுமந்திரன் கனடாவுக்கான தனது விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

கடந்த வாரம் அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் நியமிக்கப்பட்ட சட்ட நிபுணர்கள் குழு அங்கு பல சந்திப்புகளை மேற்கொண்டிருந்தது.

அந்தவகையில் தற்போது கனடா சென்றுள்ள எம்.ஏ.சுமந்திரனுடன் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியனும் இணைந்து கொள்வாரெனத் தெரிவிக்கப்படுகிறது.

அவர்கள் இருவரும் கனடாவில் தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து பல்வேறு கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளனர். (நி)


**துயர் பகிர்கிறோம்**

அமரர். வைரமுத்து கோவிந்தப்பிள்ளை



எமது கல்லூரியின் ஆசிரியர் கோவிந்தப்பிள்ளை ஜெயக்குமார் அவர்களின் அன்புத் தந்தை வைரமுத்து கோவிந்தப்பிள்ளை அவர்கள் 16.11.2021 அன்று காலமானதையிட்டு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திப்போமாக.

ஆசிரியர் கழகம், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

(8703)


# பைசர் தடுப்பூசி தொடர்பில் சந்தேகம் நிலவுகிறது

## வைரஸ் தொடர்பான விசேட நிபுணர் திஸ்ஸ எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் பைசர் தடுப்பூசி செலுத்துவதன் ஊடாக, தேவையற்ற பாதிப்புக்களை ஏற்படுத்தும் அபாயம் காணப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினரும், வைரஸ் தொடர்பான விசேட நிபுணருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண எச்சரிக்கை விடுத்தார்.

பைசர் தடுப்பூசியின் செயற்பாடு தொடர்பில் விஞ்ஞான ரீதியில் சந்தேகம் நிலவுவதாகவும் குறிப்பிட்ட அவர் கொரோனா பரவலுக்கு பின்னரான காலத்திலேயே முதல் தடவையாக பைசர் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதன்காரணமாகவே தனக்கு இந்த தடுப்பூசி குறித்து சந்தேகம் நிலவுவதாகவும் பைசர் தடுப்பூசியினை இறக்குமதி செய்வதனை இயலுமானளவு குறைத்துக் கொள்ளுமாறும், மாற்று தடுப்பூசிகளை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் அவர் கோரிக்கை விடுத்தார். (நி)

# தேசிய மட்ட கூடைப்பந்தாட்ட போட்டி இரு பிரிவிலும் யாழ். அணி சம்பியன்




மாவட்ட இளைஞர் அணிகளுக்கிடையிலான தேசிய மட்ட ஆண்கள் பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் இரு பிரிலும் யாழ். மாவட்ட இளைஞர் அணி சம்பியனாகி வரலாற்றுச் சாதனை படைத்தனர்.

33 ஆவது தேசிய மட்ட இளைஞர் மாவட்ட அணிகளுக்கிடையிலான ஆண்கள் பெண்களுக்கான கூடைப் பந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டங்கள் யாழ்ப்பாணம் பழைய பூங்கா கூடைப் பந்தாட்டத்திடலில் நடைபெற்றது.

ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ். மாவட்ட இளைஞர் அணியை எதிர்த்து கம்பகா மாவட்ட இளைஞர் அணி மோதியது.

சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய யாழ். மாவட்ட இளைஞர் அணி 72:55 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தை தமதாக்கிக் கொண்டனர்.

பெண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ் மாவட்ட இளைஞர் அணியை எதிர்த்து கொழும்பு மாவட்ட இளைஞர் அணி மோதியது.

ஆரம்பம் முதல் இறுதி வரை தமது அபாரமான ஆட்டத்தை வெளிப் படுத்திய யாழ். மாவட்ட இளைஞர் அணி 43:17 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தை தமதாக்கிக்கொண்டனர். (4-90)

## இருபது-20 இல் அதிக ரன்கள் விராட் கோலியை முந்திய கப்தில்



இருபது-20 கிரிக்கெட்டில் இந்திய அணியின் முன்னாள் கப்டன் விராட் கோலி, 87 போட்டிகளில் விளையாடி 3,227 ரன்கள் எடுத்து முதலிடம் வகித்தார். இதில் 29 அரை சதங்கள் அடங்கும்.

இந்நிலையில், இந்தியாவுக்கு எதிரான 2 ஆவது இருபது-20 போட்டியில் நியூசிலாந்து தொடக்க ஆட்டக்காரர் மார்ட்டின் கப்தில் 31 ரன்னில் அவுட்டானார். அவர் இருபது-20 கிரிக்கெட்டில் 107 போட்டிகளில் விளையாடி 3,248 ரன்கள் எடுத்துள்ளார். இதில் 2 சதம், 19 அரை சதங்கள் அடங்கும். இதன் மூலம் இருபது-20 கிரிக்கெட்டில் விராட் கோலியை முந்தி கப்தில் முதல் இடத்தைப் பிடித்துள்ளார். (4)

## டிம்பெய்ன் பதவி விலகல் கம்மின்ஸ் புதிய கப்டன்?

ஆஸ்திரேலிய டெஸ்ட் அணியின் கப்டன் டிம் பெய்ன் நேற்று முன்தினம் தனது பதவியை இராஜினாமா செய்தார்.

ஆசஸ் டெஸ்ட் தொடர் தொடங்கவுள்ள நிலையில் டிம் பெய்ன் பதவி விலகி உள்ளதால் புதிய கப்டனை தேர்வு செய்ய வேண்டிய நிலை ஆஸ்திரேலியாவுக்கு ஏற்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியா-இங்கிலாந்து அணிகள் மோதும் ஆஷஸ் டெஸ்ட் தொடர் மிகவும் முக்கியத்துவம் பெற்றது. முதல் போட்டி எதிர்வரும் 8 ஆம் திகதி யுடன் பிரிஸ்பனில்



ஆரம்பமாகவுள்ளது.

மொத்தம் 5 டெஸ்ட் போட்டிகள் நடைபெறுகிறது. ஜனவரி 18ஆம் திகதியுடன் டெஸ்ட் தொடர் முடிவடைகிறது.

ஆஸ்திரேலிய டெஸ்ட் கப்டனாக வேகப்பந்து வீச்சாளர் கம்மின்ஸ் தேர்வு செய்யப்பட அதிக வாய்ப்பு இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. முன்னாள் வீரர்கள் மார்க் டெய்லர், டென்னிஸ் லில்லி, ஸ்டீவ்வாக் ஆகியோர் அவரை வெகுவாக பாராட்டி இருந்தனர்.


இதனால் டிம் பெய்ன் இடத்தில் கம்மின்ஸ் கப்டன் ஆக அதிக வாய்ப்பு உள்ளது. 28 வயதான அவர் ஏற்கனவே துணை கப்டனாக பணிபுரிந்து உள்ளார். இன்னும் சில தினங்களில் ஆஸ்திரேலிய தேர்வுக்குழு புதிய கப்டனை அறிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (4-6)

# நியூஸிலாந்திற்கு எதிரான தொடரை கைப்பற்றியது இந்தியா

நியூஸிலாந்து அணிக்கெதிரான இரண்டாவது இருபது-20 போட்டியில், இந்தியக் கிரிக்கெட் அணி 7 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரை 2-0 என்ற கணக்கில், இந்தியா அணி கைப்பற்றியுள்ளது.

நேற்று முன்தினம் ராஞ்சியில் நடைபெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இந்தியா அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.



இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்துக் கிரிக்கெட் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில், 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 153 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, க்ளென் பிலிப்ஸ் 34 ஓட்டங்களையும், மார்டின் கப்டில் மற்றும் மேரில் மிட்செல் ஆகியோர் தலா 31 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இந்தியக் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், ஹர்சல் பட்டேல் 2 விக்கெட்டுகளையும் புவனேஸ்வர் குமார், தீபக் சஹார், அக்ஸர் பட்டேல் மற்றும் அஸ்வின் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து பதிலுக்கு களமிறங்கிய இந்தியக் கிரிக்கெட் அணி, 17.2 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது.

இதனால் இந்தியா அணி 7 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, கே.எல். ராகுல் 65 ஓட்டங்களையும் ரோஹித் சர்மா 55 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

நியூஸிலாந்துக் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், டிம் சவுத்தீ 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக, 2 விக்கெட்டுகளை வீழ்த்திய ஹர்சல் பட்டேல் தெரிவுசெய்யப்பட்டார். (4-6)

# இராசிபலன்

21.11.2021
கார்த்திகை 05, ஞாயிற்றுக்கிழமை.
துதியை முன்னிரவு 6.46 மணிவரை
ரோகினி காலை 7.33 மணிவரை
சுபநேரம் 9.10-10.40 மணிவரை
இராகுகாலம் 4.40-6.10 மணிவரை
சந்திராஷ்டமம்: அனுசம்

வளவன்


மேஷம்

வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும், தன்னம்பிக் கையுடன் செயற்படுவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.


ரிஷபம்

பல நாட்களாக பார்க்காமல் இருந்த உறவினர் ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்புண்டு, திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.


மிதுனம்

குடும்பப் பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.


கடகம்

அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் தேடி வரலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.


சிம்மம்

அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், உடல் நலன் சீராகும்.


கன்னி

பகை விலகி பாசம் கூடும் நாள், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப் புண்டு.


துலாம்

அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், பிரயாண பயமுண்டு.


விருச்சிகம்

இரவு-பகலாக பாடுபட்டதற்கேற்ப பலன் கிடைக்கும், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.


தனுசு

கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்ள முற்படுவீர்கள், இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.


மகரம்

உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வீட்டுத் தேவைகள் பூர்த்தி யாகும், வழிபாட்டால் குதூகலம் காணும் நாள்.


கும்பம்

மனதில் தோன்றுவதை செய்து முடிப்பீர்கள், தொலைபேசித் தகவல்கள் மகிழ்ச்சி தரும், வாகன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.


மீனம்

பொதுநல ஈடுபாட்டால் புகழ்பெறுவீர்கள், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், உறவினர்களின் ஆதரவு கிடைக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

சினம் கூர்மையான கத்தி போன்றது.

# மரண அறிவித்தல்

## திருமதி.இராசையா தங்கம்மா (மைனா)



மாவைகலட்டி கொல்லன் கலட்டியைப் பிறப்பிடமாகவும் டச்சு வீதி, உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.இராசையா தங்கம்மா (மைனா) அவர்கள் 20.11.2021நேற்று சனிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலம் சென்றவர்களான முருகன் இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலம் சென்றவர்களான பொன்னர் சின்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும் காலம் சென்ற இராசையாவின் பாசமிகு மனைவியும், காலம் சென்றவர்களான இராசாத்தி,வைரமுத்து, அன்னதேவி, மற்றும் செல்லம் ஆகியோரின் அன்பு சகோதரியும்,காலஞ்சென்ற நவமணி மற்றும் பத்மாவதி , காலம் சென்ற பொன்னுத்துரை, மற்றும் கந்தசாமி ஆகியோரின் அன்பு மைத்துனியும் தர்மகுலசிங்கம், காலம்சென்ற மனோகரராஜா மற்றும் பாசமலர், இன்பமலர், வினோதமலர், மோகனராஜா, ஜெகராஜா, ஜீவராஜா , அனுராஜ் ஆகியோரின் பாசமிகு தாயாரும் மகேஸ்வரி, பவானி, பரராஜாசிங்கம் , சிவானந்தராஜா , கிருபா ,சுதா , மேனகா, ஆன் , ஆஷா ஆகியோரின் அன்பு மாமியும் சர்மா, அனுஸ்ரன் , சரன்ராஜ், சாளினி, சதீபன், தாருஷன் ,தனுசியா, பாமினி, ஆதவன், அஜந்தன், வசித்திரன்,பரணி ,சஞ்சியன், பிருந்தன்,ஜெனார்த்தன்,சயித்தன், அபிஷாயினி, ஜதுஷாயினி, டெஸ்மி, ரொபின்சி , ஓர்நிலா ,ஜெனிலியா, வைஸ்ணவி, கேசிகன், டார்சி,லிண்டா, அபினயா,செல்வநந்தன், தர்மிகா உஷா, லக்ஷனா, நிரோஜா, பிரசாந்த், தர்ஷா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ,கோபிகா, சாயித்தியன், நிறஞ்சன், தியானன், தியானிகா, கேசிகா , டிவினேஸ், அபினேஸ், துஷாயினி, தனுஸ்ரன், சிவக்ஷன் ,யுவிசன், சேயுசன் ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 21.11.2021 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று கீரிமலை செம்மம் வாய்க்கால் இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் , நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (ஐ-3064)

மாவை கலட்டி,
கொல்லன் கலட்டி,
தெல்லிப்பழை.

தகவல்:
குடும்பத்தினர்.

# அந்தியேட்டிக் கிரியையும் நன்றி நவிலலும்

மண்ணில்
01 . 01 . 1945



விண்ணில்
23 . 10. 2021

அமரர்

## இராமநாதபிள்ளை குழந்தைவடிவேல்

வல்வெட்டித்துறை குச்சம் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும்,
அரசடி-தொண்டமானாற்றை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த
இ.குழந்தைவடிவேல்(குட்டியப்பா) அவர்கள் கடந்த 23.10.2021இல்
சிவபதமடைந்தார்.

எங்கள் குடும்பத் தலைவரின் 31ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியைகள்
22.11.2021 திங்கட்கிழமை காலையில் கீரிமலையில் நடைபெறும்.
தொடர்ந்து, பகல் வீட்டில் நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும்
மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும்
அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

எங்கள் குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தியறிந்து இல்லம் தேடிவந்து
ஆறுதல் வார்த்தை கூறிய அன்புள்ளங்கள், பல வழிகளிலும் ஒத்தாசை
புரிந்தவர்கள் மற்றும் தொலைபேசி சமூக வலைத்தளங்கள் மூலமாக
துயர் பகிர்ந்த உற்றார் ,உறவினர் அனைவருக்கும்
எமது உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அரசடி,
தொண்டமானாறு. (C-3052)

குடும்பத்தினர்

# இலங்கையின் தேசிய கொடி பதித்த முகக்கவசத்தை அணிந்து வந்த கிஹானி இன்பென்டினோ



(கொழும்பு)

சர்வதேச கால்பந்து சம்மேளனத்தில் தலைவர் கிஹானி இன்பென்டினோ, இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் நாட்டிற்கு வருகை தந்த கிஹானி இன்பென்டினோ, இலங்கை தேசியக் கொடியுடனான முகக்கவசமொன்றை அணிந்து வருகை தந்தார்.

ரேஸ்கோர்ஸ் மைதானத்தில் நடைபெறும் மகிந்த ராஜபக்ஷ கால்பந்து கிண்ணத்தின் இறுதிப் போட்டியில் விசேட விருந்தினராகக் கலந்துகொள்ளும் நோக்கிலேயே அவர் நாட்டிற்கு வருகை தந்துள்ளார்.

இந்த நிலையில், சர்வதேச கால்பந்து சம்மேளனத்தில் தலைவர் கிஹானி இன்பென்டினோ, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோரை சந்தித்து கலந்துரையாடல்களை நடத்தினர். (4)

# இளம் தொழில் முனைவோருக்கான நேர்முகத்தேர்வுப் பரீட்சை

(அராலி)

இளம் தொழில் முனைவோர்களை ஊக்குவிப்பதற்காக அரசாங்கக் காணிகளில் முதலீட்டு வாய்ப்புக்களை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வலி மேற்கு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட இளையோருக்கான தொழில் முயற்சி ஆற்றல் தொடர்பாக பரீட்சிக்கும் நேர்முகப்பரீட்சைக்கு காலங்கடந்து தபால் கிடைக்கப் பெற்றவர்கள் மற்றும் குறித்த திகதியில் சமூகமளிக்காதவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 24ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணியளவில் சங்கானை பிரதேச செயலகத்தில் நடத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இவ்வாய்ப்பை பயன்படுத்தி இளையோர் நேர்முகப்பரீட்சையில் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கானை பிரதேச செயலாளர் அறிவித்துள்ளனர். (4-104)

# உள்ளூராட்சி மன்றங்களுக்கிடையிலான தமிழ்மொழிமூல விவாதப் போட்டி

## வலி.தென் மேற்கு பிரதேச சபை முதலிடம்




(அராலி)

இலங்கையிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு இடையிலான தமிழ்மொழி மூலமான விவாதப் போட்டியில் அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தினை வலிகாமம் தென் மேற்கு - மானிப்பாய் பிரதேச சபையின் விவாத அணி பெற்றுக்கொண்டுள்ளது.

இரண்டாமிடத்தினை மட்டக்களப்பு மண்முனைப்பற்று பிரதேச சபை பெற்றதுடன் மூன்றாமிடத்தினை புதுக்குடியிருப்பு பிரதேசசபை பெற்றுக்கொண்டது. (4-104)

# வன்முறைக் கும்பல் அட்டகாசம்; உடைமைகள் சேதம்



(குப்பிழான்)

உடுவில் பகுதியில் அமைந்துள்ள வீடொன்றின் மீது வன்முறைக் கும்பலொன்று நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தாக்குதல் நடத்தி விட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, மோட்டார் சைக்கிளில் வந்த இனம்தெரியாத நபர்கள் சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உடுவில் பகுதியில் உள்ள வீட்டின் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

குறித்த தாக்குதலில் வீட்டின் யன்னல் கண்ணாடிகள், தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் ஏனைய உடமைகளுக்கு கடும் சேதம் ஏற்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாகச் சுன்னாகம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-18)

# 'கார்த்திகை வாசம் மலர் முற்றம்' ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

வடமாகாண மர நடுகை மாதத்தை முன்னிட்டு தமிழ் தேசிய பசுமை இயக்கம் தாவர உற்பத்தியாளர்களுடன் இணைந்து நடத்தும் கார்த்திகை வாசம் மலர் முற்றம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மலர் செடிகள் மரக்கன்றுகள் காட்சிப்படுத்தலும் விற்பனையும் நேற்றிலிருந்து எதிர்வரும் 26 ஆம் திகதி வரை காலை 8.30 மணிமுதல் இரவு 7மணி வரை நல்லூர் சங்கிலியன் பூங்காவில் இடம்பெறும். மலர் முற்றத்தை யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத் தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் திறந்து வைத்தார். இதன் ஆரம்ப நிகழ்வில் தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன், யாழ் மாநகர சபை உறுப்பினர் வ.பார்த்திபன், தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (4-33)

# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 05 . 12 . 1924

இறப்பு 13 . 11 . 2021



## அமரர்.திருமதி. ராஜலட்சுமி சுப்பிரமணிய ஐயர்

யாழ்/வைத்தீஸ்வரா கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினரும், கனடா பழைய மாணவர் சங்கத்தின் தற்போதைய நிர்வாகக் குழுவின் உப தலைவரும், கடந்த பல ஆண்டுகளாக கல்லூரியின் வளர்ச்சிக்கு பாடுபட்டு வருபவரும், கடந்த இரு ஆண்டுகளுக்கு மேலாக கல்லூரியின் கட்டட மற்றும் பௌதீக வள புனரமைப்புப் பணிகளில் நேரடியாகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவரும், covid-19 இன் ஆரம்ப காலத்தில் கல்லூரி மாணவர்களின் பசி தீர்க்க உலருணவு வழங்குவதற்கு முன்னின்றவரும், கல்லூரியின் வளர்ச்சிக்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்து கொண்டவரும், உலகம் முழுவதும் பரவிவாழும் பழைய மாணவர்களை ஒன்றிணைப்பதில் அக்கறை காட்டிய வருமான எமது நண்பன் **திரு.சு. மாதவனின்** தாயார் இறையடி சேர்ந்து விட்டார் என்கின்ற சோகச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் மீளாத்துயரும் அடைந்தோம்.

எமது கல்லூரியிலேயே தானும் பயின்று, ஈன்ற எல்லாப்பிள்ளைகளையும் நற்குணமிக்க ஒழுக்கமுள்ளவர்களாக வளர்த்து ஆளாக்கி இப்பாருக்குத் தந்த அன்னையவள் தன் இறுதிப் பயணத்தில் இறைவன் பாதம் சேர எல்லாம் வல்ல வண்ணை வைத்தீஸ்வரனை வேண்டிக் கொள்வதுடன், அன்னாரின் இழப்பினால் வாடும் குடும்பத்தினருக்கும் அவர் தம் உறவுகளுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் கவலைகளையும் யாழ் வைத்தீஸ்வரா கல்லூரியின் தாய்ச்சங்கம் சார்பாகவும், ஏனைய நாடுகளின் வைத்தீஸ்வரா கல்லூரியின் பழைய மாணவர் சங்கங்கள் சார்பாகவும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(8679)

**தகவல்:**
**பழைய மாணவர் சங்கம், வைத்தீஸ்வரா கல்லூரி, யாழ்ப்பாணம்.**

# பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பம் ஒன்றிற்கு பசுமாடு வழங்கி வைப்பு



(யாழ்ப்பாணம்)

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் "உயர்த்தும் கரங்கள்" செயற்றிட்டத்தின்கீழ் தந்தை முள்ளந்தண்டு பாதிக்கப்பட்டும் கண் பார்வை குன்றிய நிலையில் 2 பிள்ளைகள் பல்கலைக்கழகம் தெரிவாகி நலிவான பொருளாதார சூழலில் வாழும் குடும்பம் ஒன்றுக்கு 7 மாத சினை கொண்ட 10 லீற்றர் பால் வழங்கும் ரூபாய் 85 ஆயிரம் பெறுமதியான பசு மாடு வழங்கப்பட்டது. (4)

கலாநிதி லயன். சி. ஆனந்தராஜா அவர்களின்

# மணிவிழா சிறப்பிதழ்



## எல்லோராலும் போற்றப்படும் சமூகசேவையாளன்

கோண்டாவில் மத்திய கிராம அபிவிருத்திச் சங்கம், மத்திய சனசமூக நிலைய தலைவர் திரு.சின்னத்தம்பி ஆனந்தராஜா அவர்களின் மணிவிழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

"சேவை செய்வதே ஆனந்தம்" என்ற கோட்பாட்டின் அடிப்படையில் தனது கிராமத்தவருக்கு மட்டுமன்றி தான் சார்ந்த சமூகத்தவரின் வளர்ச்சிக்கு வித்திட்ட பெருந்தகை அவர் எனக்கூறினால் அது மிகையாகாது. பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய காலத்திலிருந்தே திரு.ஆனந்தராஜா அவர்களின் பல்வேறு சேவைகளையும் கண்டது மட்டுமன்றி அவர் முன்னெடுத்த கிராமம் சார்ந்த பல விழாக்களிலும் புங்குபற்றியிருக்கின்றேன். அவர் கிராம மக்களின் வளர்ச்சியில் அதுவும் பிள்ளைகளது கல்வி வளர்ச்சியில் காட்டிய அக்கறையைப் பாராட்டாமல் இருக்க முடியாது. அவர் எப்பொழுதுமே வறிய பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டிற்காக உழைக்க வேண்டும் என்ற சிந்தனையுடன் இயங்கியதைக் கண்டு நான் வியந்திருக்கின்றேன். தனது கிராமத்தின் சிறார்களுக்கு கல்வி மேம்பாட்டிற்காக நிதியுதவி செய்வதைப் போன்றே யாழ்ப்பாணத்தின் வேறு பல கிராமங்களின் வறிய பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டுக்கு அவரது நிதியுதவி கிடைத்து வருகின்றமை பாராட்டுக்குரியதாகும்.

கோண்டாவில் கிராமத்தின் அதுவும் தில்லையம்பதிப் பிரதேசத்தின் இளைஞர்களை ஒன்றுதிரட்டி பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளில் திரு. ஆனந்தராஜா ஈடுபடுவதைப் பார்த்திருக்கின்றேன். அவர் இப்பிரதேச மக்களின் "விடிவெள்ளி" எனக்கூறினால் அதுமிகையாது. இவர் வெளிநாட்டில் பணியாற்றும் புலம்பெயர் தமிழர்களின் நம்பிக்கை நட்சத்திரம் என்பதனால் இவர் ஊடாகவே பல அபிவிருத்திப் பணிகளை வெளிநாட்டவர் ஆற்றி வருகின்றனர். ஆண்டுதோறும் போட்டிப் பரீட்சைகளை நடாத்தி அதனூடாக மேற்கொள்ளப்படும் பரிசளிப்புவிழாவில் பல மாணவர்கள் கௌரவிக்கப்படுவது மட்டுமன்றி அப்பிரதேச முதியவர்கள் , இளைஞர்கள் ஆகியோரும் கௌரவிக்கப்பட்டு வருகின்றமை பாராட்டுக்குரியதாகும்.

திரு.ஆனந்தராஜா என்றுமே கல்வி அபிவிருத்தியிலும் அக்கறை கொண்டவர் என்பதாலே அவரிடம் பல கடமைகளை மக்கள் ஒப்படைத்துள்ளமையைக் காண முடிகின்றது. பல சங்கங்களின் தலைவர் பொறுப்பை அவர் ஏற்றிருப்பதே அவரது கடமையுணர்வை வெளிப்படுத்துவதாக உள்ளது. அவர் தனது வாழ்வில் மணிவிழாவைக் காண்பது போன்றே பவள விழா, நூற்றாண்டு விழா ஆகியவற்றைக் கொண்டாடுவதற்கு இறைவன் நல்ல உடலாரோக்கியத்தையும் மனவலிமையையும் கொடுக்க வேண்டுமென எல்லாம் வல்ல தில்லையம்பதி அம்பாளை இறைஞ்சுவதுடன் அவர் வாழ்வில் எல்லாவளங்களும் பெற்று மகிழ்வுடன் வாழ என வாழ்த்தினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**"வாழ்க வளமுடன்" என வாழ்த்தும்**
**போராசிரியர் க.தேவராஜா**
**முன்னாள் பீடாதிபதி முகாமைத்துவ கற்கைகள்**
**வணிக பீடம் யாழ்.பல்கலைக்கழகம்**




## அகமகிழ்ந்து வாழ்த்துகின்றேன்

கோண்டாவில் மத்தியினைச் சேர்ந்த திரு. சின்னத்தம்பி ஆனந்தராஜா அவர்களது மணிவிழா நன்னாளில் அவரினை வாழ்த்துவதோடு அவரின் "ஆனந்த தீபம்" மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். திரு.சி. ஆனந்தராஜா அவர்கள் கோண்டாவில் மண்ணுக்குக் கிடைத்த ஒரு சொத்து. அவரது சேவையினால் கோண்டாவில் மத்தி மண் இன்று கல்வி, கலை, கலாசாரம், பண்பாடு, விளையாட்டுத்துறை போன்ற பல துறைகளில் முன்னேறி இருப்பது கண்கூடு. ஆனந்தராஜா அவர்களினை "ஆனந்தராஜா அண்ணன்" என்று உரித்தோடு தான் நான் அழைப்பதுண்டு. ஏனெனில் கிராம வளர்ச்சிக்காக இரவு பகல் பாராது உழைப்பவர். நான் நல்லூர் பிரதேச சபை உறுப்பினராக 2018 ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்டதும் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டு ஆனந்தமடைந்தவர். நான் 2020 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் நல்லூர் பிரதேசசபையின் தவிசாளர் தெரிவின்போது களமிறங்கியதும் பேரானந்தம் கொண்டு வாழ்த்தியவர். எனது வெற்றி இரு வாக்குகளால் தவறியபோது மனமுடைந்து கொண்டவர். நான் தெரிவாகினால் இந்த கோண்டாவில் மண் அபார அசுர அபிவிருத்தி கண்டிருக்கும். துரதிஷ்டவசமாக நிகழாமல் போய் விட்டது என கவலை கொண்டவர். அப்படியாக எனது தனிப்பட்ட மகிழ்ச்சியினை இந்தப் பிரதேசத்தின் வளர்ச்சியாகக் கருதியவர். அவர் இன்று மணிவிழா காண்பதில் நான் பலமடங்கு பேரானந்தம் கொள்கின்றேன். கிராம அபிவிருத்திகள் தொடர்பாக அடிக்கடி அழைப்பெடுத்து கேட்பார். அப்படியாக தன் மண்ணின் அபிவிருத்தி கல்வி வளர்ச்சி பணிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி கொண்டவர்.

அதனால் அவர் மீது எனக்கு அன்பும் அதிகமாகவே உள்ளது. கோண்டாவில் மத்தி "தில்லையம்பதி" என அழகாக அழைக்கப்படும் கிராமத்தின் பெருவளர்ச்சிக்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்தவர். கோண்டாவில் மத்திய கிராம முன்னேற்றச் சங்கம், கோண்டாவில் மத்தி சனசமூக நிலையம், மத்தி படிப்பகம், தில்லையம்பதி ஆலயம் போன்றவற்றில் தலைவர், பொருளாளர், செயலாளர், ஆலோசகர் போன்ற பல பதவிகளில் இருந்து அவர் கடமையாற்றிய காலங்களிலேயே கோண்டாவில் மத்தி (தில்லையம்பதி) மிகப்பெரும் வரலாற்று எழுச்சியினை அனைத்துத் துறைகளிலும் அடைந்தது. இன்னும் பல நிறுவனங்களில் இடம்பெறும் தன் சமூகப் பணிகளினை இப்போதும் சளையாது முன்னெடுத்தே வருகிறார். இன்று தில்லையம்பதி மண் எழுச்சி கண்டு நிற்பதற்கு இவரது அர்ப்பணிப்புடன் கூடிய சேவைகளே மிகவும் காத்திரமான பங்கினை வகிக்கின்றன என்றால் அது மிகையாகாது. அவர் தன் பெயருக்கு ஏற்றாற்போல தன்னையும் குடும்பத்தினையும் தன் சுற்றத்தோரினையும் ஆனந்தமாக வைத்திருக்கும் ராஜா என்பதில் இரண்டாம் கருத்துக்கே இடமில்லை. அவர் இன்னும் பல்லாண்டுகள் உடல், மன ஆரோக்கியத்துடன் மனைவி, மக்களோடு அவரது பெயருக்கு ஏற்றாற்போல ஆனந்தமாக வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்தோடு அவரது சேவைகள் இந்த மணிவிழாவோடு முடங்காது இன்னும் வீச்சு பெற்று தன் கிராம வளர்ச்சிக்காக இன்னும் சளைக்காமல் செயற்படும் மனமார வாழ்த்துகின்றேன்.

**கு.மதுசுதன்,**
**உறுப்பினர், நல்லூர் பிரதேச சபை,**
**அமைப்பாளர் தமிழீழ விடுதலை இயக்கம்,நல்லூர் தொகுதி.**



**முழுப்பெயர்:**
கலாநிதி லயன். **சின்னத்தம்பி ஆனந்தராஜா**

**பிறந்த திகதி:** 17.03.1961

**ஆரம்பப் பாடசாலை:** பரஞ்சோதி வித்தியாசாலை, கோண்டாவில் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை

**இடைநிலைப் பாடசாலை:** இராமகிருஸ்ண மகா வித்தியாலயம், கோண்டாவில் தரம் 6 தொடக்கம் தரம் 10 வரை

**உயர்தரப் பாடசாலை:** முத்துதம்பி மகா வித்தியாலயம், திருநெல்வேலி (A/L, கலை)
மாணவத் தலைவர், இல்லத் தலைவர், உயர்தர மாணவ ஒன்றியத் தலைவர்)

**வகித்த பதவிகள்:**

மத்திய கிராம அபிவிருத்திச் சங்கம், தலைவர், செயலாளர்.
மத்திய சனசமூக நிலையம் தலைவர், செயலாளர்
மத்திய கல்வி மேம்பாட்டுப் பேரவை தலைவர், செயலாளர்
அறநெறிப் பாடசாலை, தில்லையம்பதி, தலைவர்
வள்ளுவன் மேம்பாட்டுக் கழகம், தலைவர், செயலாளர் (தன்னார்வத் தொண்டு நிறுவனம், இலங்கை)
சைவ வித்தியா அபிவிருத்திச் சங்கம், திருநெல்வேலி, ஆயுட்கால அங்கத்தவர்
லயன்ஸ் கழகம், நல்லூர் அங்கத்தவர்
சர்வமதப் பேரவை, யாழ்ப்பாணம் அங்கத்தவர்
நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க பொதுச் சபை உறுப்பினர்

**பட்டங்கள்**

கலாநிதிப் பட்டம்- குளோபல் யுனிவெர்சிட்டி ஒவ் அமெரிக்கா
சமூக ஒளிப்பட்டம்: மத்திய கிராம அபிவிருத்திச் சங்கம்
சமூகஜோதி (K.T.C)

## மணிவிழா வாழ்த்துப் பாமாலை

அகிலம் போற்ற வந்துதித்தவனே
ஆளும் தன்மையுடையவனே
இன்னல் தீர்க்கும் இகபரனே - உன்
ஈகையினால் அக மகிழ் கொள்கின்றனர்.

பங்குனித் திங்களே அம்மனின் நன்னாளே
பார்புகழ் போற்றும் இன்னாளே
ஆனந்தராஜா என்னும் நாமத்தோடு
17.03.1961 இல் வந்துதித்தோனே

தன்னலமில்லாத சேவை தனை
நானிலம் போற்றச் செய்தவனே
ஈது உதவியென்று கேட்குமுன்
தீதின்றிச் செய்திடும் ஆனந்தராஜாவே

பற்பல சேவைகள் செய்த தங்களை
எச்சேவை சொல்லி நான் புகழ
அச்சேவைகளின் தன்மையினால் தானே
பட்டங்களின்றி பட்டங்கள் பல பெற்றாய்

கலாநிதிப் பட்டம் குளோபல் யூனிவர்சிற்றியினாலும்
சமூக ஒளிப்பட்டம் மத்திய கிராம அபிவிருத்திச் சங்கத்தினாலும்
சமூக ஜோதிப் பட்டம் K.T.C. கல்வி நிறுவனத்தாலும்
இன்னும் எத்தனை பட்டங்கள் பாராட்டலாம்

இத்தனை பட்டங்களும் பெற்ற ஆனந்தராஜாவிற்கு
அகவை தான் அறுபது அவரது சேவைக்கல்ல
நித்தியமும் நின்சேவை நிலை பெற
சத்திய வாழ்வினை வாழ்ந்தவரே வாழி!

மணிவிழா நாயகனே மாண்புடன் வாழி! வாழி!
மங்கலம் பொங்கிடும் நாயகனே வாழி! வாழி!
வந்தனத்தோடு வரவேற்கும் பண்புடையானே வாழி! வாழி!
பல்லாண்டு"காலம் நல சுகத்தோடு வாழி! வாழி!
வாழிய! வாழிய! வாழியவே

**ஆசிரியர்,**
**இ.மதிகரன்,**
**கோண்டாவில் கிழக்கு.**



## மணிவிழா நாயகனின் பதிவுகளும், சேவைகளினதும் ஒரு கண்ணோட்டம்

ஆனந்த குணம் படைத்த ஆனந்தராஜா
ஆவல் மீதூர அன்பு அகத்தூர
ஆனந்தராசாவின் விழாவின்
சமூகசேவை மிக உணர்ந்து செய்யும் பாராட்டு சேவைக்கு அளிக்கும் திருப்தி விழாவாகும்.

கலாநிதி லயன் சின்னத்தம்பி ஆனந்தராஜா அவர்கள் தில்லையம்பதியில் 17.03.1961 இல் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை (1-5) பரஞ்சோதி வித்தியாசாலையிலும், இடைநிலைக்கல்வியை கோண்டாவில் இராமகிருஸ்ண மகா வித்தியாலயம் (6-10) கல்வி பயின்று க.பொ.த. உயர்தரத்தை முத்துதம்பி மகா வித்தியாலயத்தில் கற்று அப்பாடசாலையில் மாணவத்தலைவராக, இல்லத் தலைவராக உயர்தர மாணவ ஒன்றியத்தலைவராகவும் கல்லூரியில் பிரகாசித்துள்ளார். பின்பு யாழ்.பல்கலைக்கழகத்தில் உத்தியோ கத்தராக 1992 தொடக்கம் இன்று வரை கடமையாற்றியுள்ளார். இவரின் திறமையான சேவையை கருத்திற்கொண்டு பல்கலைக்கழகம் மேலும் ஒரு வருட சேவையை நீடித்துள்ளமை இவரின் சேவைக்கு ஒரு மகுடமாகிறது. மத்திய கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர், செயலாளர், மத்திய சனசமூக நிலையம் தலைவர், செயலாளர், மத்திய கல்வி மேம்பாட்டுப் பேரவைத் தலைவர், செயலாளர், அறநெறிப்பாடசாலை தில்லையம்பதி தலைவர், வள்ளுவன் மேம்பாட்டுக் கழகம் தலைவர், செயலாளர் (தன்னார்வ தொண்டு நிறுவனம் இலங்கை), சைவ வித்தியா அபிவிருத்திச்சங்கம், திருநெல்வேலி, ஆயுள்கால அங்கத்தவர், லயன்ஸ் கழகம், நல்லூர் அங்கத்தவர், சர்வமதப் பேரவை, யாழ்ப்பாணம் அங்கத்தவர், ந.ப.நோ.கூ.ச பொதுச்சபை உறுப்பினர், கலாநிதிப்பட்டம் - குளோபல் யூனிவேர் சிற்றி ஒப் அமெரிக்கா, சமூக ஒளிப்பட்டம் - மத்திய கிராம அபிவிருத்திச் சங்கம், ஆனந்தஜோதி - போன்ற பதவிகளை வகித்து தனது ஊர் மக்களுக்கு சேவையாற்றியுள்ளார். இவரின் சேவையை அறிந்த குமாரசாமி உதயரூபன் (லண்டன்) வள்ளுவன் மேம்பாட்டுக் கழகத்தை உருவாக்கி அதன்மூலம் கற்கோவளம், வேலணை ஐயனார் போன்ற இடங்களில் (1-A/L) வரை மாலைநேரப் பாடசாலையை உருவாக்கி பின்தங்கிய மாணவர்களுக்கு சேவையாற்றி வருவதை நான் அக்கல்லூரியில் மாணவர் தேர்ச்சி அறிக்கை வழங்கும் நிகழ்வில் விருந்தினராக கலந்து கொண்ட போது அறிந்து மகிழ்ச்சியடைந்தேன். இவரது இத்தகைய சேவையை பாராட்டி கலாநிதிப் பட்டம்,.சமூக ஒளிப்பட்டம் போன்றவை இவரது சேவைக்கு சான்றாகும். இவர் எமது நிறுவனத்தில் (K.T.C) பேராசிரியர் க.தேவராஜா அவர்களினால் இவரது கல்விச்சேவையை பாராட்டி ஆனந்தஜோதி எனும் விருது வழங்கப்பட்டதை குறிப்பிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

ஒருவர் வாழ்கின்ற காலத்தில் அவரது சேவையை பாராட்டி விழா எடுப்பது சாலச்சிறந்ததாகும். அந்தவகையில் மணிவிழா சபை அமைத்து ஆனந்தராஜாவுக்கு விழா எடுப்பது சேவைகளுக்கும் விழாவாகும். இவரது மணிவிழா சிறப்புற எமது குடும்பத்தின் சார்பிலும் K.T.C நிறுவனத்தின் சார்பிலும் எமது வாழ்த்துக்கள்.மேலும் பவள விழா, அமுத விழா, நூற்றாண்டு விழா கொண்டாட எல்லாம் வல்ல தில்லையம்பதி அம்மையின் அருள் வேண்டி வாழ்க வளமுடன் என வாழ்த்துகின்றோம்.

**ஞான.திருக்கேதீஸ்வரன்,**
**குடும்பத்தினர்**
K.T.C **கோண்டாவில்**



## மனிதநேயர் ஆனந்தராஜா

அறுபதாவது அகவை காணும் திரு. சின்னத்தம்பி ஆனந்தராஜாவின் மணிவிழா குறித்து வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

மானிட வாழ்வியலில் மிகப் பிரதானமான அங்கமான தொழில் வாழ்க்கை. அந்த வாழ்க்கையில் நேர்மை, கடமையுணர்வு , அர்ப்பணிப்பு, தியாகம், ஒன்றிணைந்து செயற்படல், நேரம் தவறாமை ஆகிய அனைத்து அம்சங்களிலும் சிறந்து விளங்கியவர்.

காலங்கள் மாறினாலும் கனமாய் நின்று உரைத்துக் கொண்டிருப்பவை ஒருவர் செய்த சேவையே.
கடின உழைப்பினாலும் விடாமுயற்சியினாலும் வாழ்க்கையில் உயர்ந்தவர்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பட்டப்பின் கல்வித் துறையின் சிறந்த பணியாளராக வேலை செய்தவர். கல்வித்துறை சார்ந்தவர்கள் எந்நேரத்தில் உதவி கேட்டாலும் மறுக்காமல் செய்து கொடுப்பவர்.
இவர் ஒரு சிறந்த தன்னலம் கருதாத சமூக சேவையாளர்.
வள்ளுவன் மேம்பாட்டுக்கழகத்தினால் வறிய மாணவர்களுக்கான கல்விச் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றார்.
நல்லூர் அரிமா கழகத்தில் நிர்வாக சபை உறுப்பினரான இவர் பல்வேறு செயற்திட்டங்களை ஆற்றி வருகிறார்.
தலைமைத்துவமும் ,சமநிலை ஆளுமையும் கொண்ட இவர் பொது வாழ்க்கையில் பல்வேறு தளங்களில் நின்று தன்னைச் சரியாக அடையாளப்படுத்திக் கொண்ட ஒரு நாணயமான விசுவாசி.
அன்பு,அமைதி,அகிம்சை,பணிவு,பொறுமை, மனிதநேயம், வகைகூறல் போன்றவற்றிற்குச் சொந்தக்காரன்.
நான்கு தசாப்தங்களுக்கு மேலாக இவரை நன்கறிவேன்.
ஒரு அரசு ஊழியரின் வாழ்வானது அவர் பணியிலிருந்து ஓய்வு பெறுவதுடன் முற்றுப் பெறுவதில்லை. சிறந்த சமூக சேவையாளரான இவர் சமூகப் பணியில் தனது செயல் ஆற்றலை வழங்க நிறைந்த ஆயுளும், உடல் ஆரோக்கியத்தையும் வேண்டிப் பிரார்த்திக்கிறேன்.
எனது இதயம் கனிந்த மணிவிழா வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

**கலாநிதி.திருமதி ஜெ.உதயகுமார்**
**தலைவர்,**
**நல்லூர் லயன்ஸ் கழகம்.**
**விரிவுரையாளர்,**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.**

**வாழ்த்துவோர்:**
**K.T.C. கல்வி நிலையம்**
**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்**
(C-3054)

# கால்நடைகளுக்கான தீவனத் தேடல்

வர்த்தனி சுஸ்ருதன்
விவசாயபீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(நேற்றைய தொடர்ச்சி....)

மேலதிக போசணைக்காக தாவரப் பாகங்களை அடுக்கும் போது சீனி, யூரியா, மொலாசஸ் (5 சத வீதம்) போன்றவற்றை பாத்திரத்தினுள் சேர்க்கலாம் (பச்சைப் புல்: சீனி: யூரியா: கனியுப்புக் கலவை = 100 : 1 : 0.5 : 0.5) என்ற விகிதத்தில் சேர்க்கலாம்).

தாவரப்பாகங்களை பாத்திரத்தினுள் மீண்டும் அழுத்தமாக அடுக்கிய பின் பாத்திரத்தை காற்று, நீர் மற்றும் விலங்குகள் உட்புகாதவாறு இறுக்கி மூடுதல் வேண்டும். இரண்டு மாதங்களின் பின்னர் இக் கலவையானது சைலேஜ் ஆகதயாராகிவிடும். பின் கால்நடைகளுக்கு வழங்கலாம்.

நொதித்தல் செயற்பாட்டினை விரைவுபடுத்த பக்றீரியா ஊக்கிகளை பயன்படுத்தலாம். சைலேஜ் உற்பத்தி செய்வதற்கு 3-4 நாட்களுக்கு முன், 500 கிராம் புல்லை 100 கிராம் சீனியுடன் சேர்த்து நன்றாக அரைத்து 1.5 லீற்றர் அளவு நீர் சேர்த்து கண்ணாடிப் போத்தலினுள் காற்றுப்புகாது மூடி குளிரான இடத்தில் வைப்பதன் மூலம் நுண்ணங்கி ஊக்கியினை உற்பத்தி செய்யலாம். சராசரியாக 01 லீற்றர் ஊக்கியானது 1000 கிலோகிராம் புற்களிற்கு போதுமானதாக அமையும்.

சிறந்த சைலேஜ் வெளிர் மஞ்சள் நிறமுடைய அமிலத் தன்மையானதாக (வினாகிரி போன்று) காணப்படும். கால்நடைகளுக்கு சைலேஜ் வழங்கும் போது அதனை படிப்படியாக ஏனைய உணவுகளோடு சேர்த்து வழங்க வேண்டும். தனியொரு உணவாகவும் வழங்கக்கூடாது. பூஞ்சணத் தொற்று அல்லது துர் நாற்றம் ஏற்படின் அவற்றை கால்நடைகளுக்கு வழங்கக்கூடாது.

### யூரியா பரிகரிக்கப்பட்ட வைக்கோல் உற்பத்தி

தற்காலத்தில் நம் நாட்டுப் பண்ணையாளர்கள் மத்தியில் மிகப் பிரபல்யமடைந்து வரும் யூரியா பரிகரிக்கப்பட்ட வைக்கோல் உற்பத்தியானது இலகுவாக அனைவராலும் மேற்கொள்ளப்படக் கூடியதொன்றா கும். ஆயினும், இம்முறையானது மிகவும் அவதானத்துடன் (சரியான அளவுகளில்) கையாளப்பட வேண்டும். காரணம் இங்கு பயன்படுத் தப்படும் யூரியாவின் செறிவானது அதிகரிக்குமாயின் அவை கால்நடைகளிற்கு பேராபத்தை தோற்றுவிக்கும்.

யூரியா பரிகரிக்கப்பட்ட வைக் கோலானது சமிபாடடையும் திறன் கூடியதாகவும் அதிகளவு புரதமற்ற நைதரசனுடையதாகும். இதனால் கால்நடைகள் அதிகளவில் உட்கொள்வதோடு மட்டுமன்றி அவற்றின் உற்பத்தித் திறனும் அதிகரிக்கும்.

யூரியா பரிகரிக்கப்பட்ட வைக்கோல் உற்பத்திக்கு தேவையா னவை, யூரியா (100 கிலோகிராம் நன்கு உலர்ந்த வைக்கோலிற்கு 4 கிலோ கிராம் யூரியா போதுமானது), தூய நீர் (90-100 லீற்றர் நீரானது 100 கிலோகிராம் உலர்ந்த வைக்கோலிற்கு போதுமானது), தரப்பாள், தெளிப்பான் மற்றும் பொலித்தீன்பை போன்றவை ஆகும்.

யூரியாவினை 100 லீற்றர் நீரினுள் முற்றாகக் கரைக்க வேண்டும். நன்றாகக் கரைக்கப்பட்ட யூரியா நீர்க் கலவையினை பரவப்பட்ட வைக்கோலின் மீது முழுமையாக தெளிக்க வேண்டும். பின், வைக்கோல் மற்றும் யூரியா நீர்க்கலவையினை வைக்கோலுடன் நன்றாகக் கலத்தல் வேண்டும். இறுதியாக யூரியா பரி கரிக்கப்பட்ட வைக்கோலானது காற்றின்றியவாறு 7-14 நாட்களிற்கு பொலித்தீன் பையினுள் அடைக்க வேண்டும். வைக்கோலானது பதனிடப்பட்டபின் (அதாவது 7-14 நாட்களின் பின்னர்) கால்நடைகளுக்கு உணவாக வழங்கலாம்.

யூரியா பரிகரிக்கப்பட்ட வைக் கோலானது கால்நடைகளுக்கு வழங் கும் போது அதனை படிப்படியாக ஏனைய உணவுகளோடு சேர்த்து வழங்க வேண்டும். மேலும் பொலித் தீன் பையிலிருந்து வெளியே எடுத்து கால்நடைகளுக்கு வழங்கமுன், 30 நிமிடங்கள் காற்றுப் படவிட வேண்டும். இதன்மூலம் அமோனியா மணம் குறைவடைவதினால் மாடுகள் அதிகளவு உட்கொள்ளும்.

சினைப்பட்ட பசுக்கள் மற்றும் 06 மாதங்களிற்கு குறைவான கன்றுகளிற்கு இதனை வழங்கக்கூடாது. மாறாக வழங்கின் அவை உயி ரிழப்பினைக் கூட ஏற்படுத்தும். பூஞ்சணத் தொற்று அல்லது துர்நாற்றம் ஏற்படின் அவற்றை கால்நடைகளுக்கு வழங்கக்கூடாது. மேலும் அதிகளவு அவரையினங்களோடு சேர்த்து வழங்கக்கூடாது. அத்துடன் தனியொரு உணவாகவும் வழங்கக்கூடாது (தவிடு அல்லது புண்ணாக்குடன் கலந்து கொடுக்கலாம்). ஒரு பசுவிற்கு சராசரியாக நாளொன்றிற்கு 20 கிலோகிராம் வரையில் வழங்கலாம்.

### கனியுப்புக்கல் தயாரித்தல்

கனியுப்புக்கல் தயாரித்தலானது பசுக்கள் மற்றும் மாடுகளிற்கு ஏற்படும் கனியுப்பு போசணைக் குறைபாட்டினை போக்க சிறந்த இலகுவான வழிகளில் ஒன்றாகும். கனியுப்புக்கல் தயாரிப்பதற்கு 2.1 கிலோ கிராம் கல்சியம் இரு பொசுபேற்று அல்லது 1.5 கிலோகிராம் கல்சியம் இரு பொசுபேற்றுடன் 0.6 கிலோ கிராம் சுண்ணாம்பு, 450 கிராம் கறியுப்பு, 450 கிராம் சீமெந்து, 8.5 கோப்பை நீர் மற்றும் சிறிதளவு கருப்பம் பாணி (மொலாஸஸ்) போதுமானது. கல்சியம் இரு பொசு பேற்றுடன் ஏனைய கனியுப்புக் களை நன்றாகக் கலக்க வேண்டும். பின்னர் நீரினை சிறிது சிறிதாக சேர்த்து நன்றாக கலந்து கூழ்பதத் திற்கு மாற்ற வேண்டும். இக் கூழினை மரப் பெட்டியினுள் ஊற்றி 02 தொடக்கம் 03 நாட்கள் நிழலில் காய விடுதல் வேண்டும். பின்பு இதனை தொழுவத்தினுள் கட்டி விடுவதன் மூலம் கால்நடைகளுக்கு இலகுவாக வழங்கலாம்.

தற்காலத்தில் ஏற்பட்டுள்ள தீவனத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்து, உற்பத்திச் செலவை குறைப்பதற்கு இவ் வழிமுறைகளைப் பின்பற்றுவது சாலச் சிறந்தது. பருவப் பெயர்ச்சிக் காலத்தில் கிடைக்கும் மழை நீரினை உபயோகப்படுத் துவதன் மூலம் அதிக புற்கள் மற்றும் அவரையினங்களை உற்பத்தி செய்யலாம். மேலும் பயன்பாட்டிற்கு எஞ்சியவற்றை நீண்டகாலப் பாவனைக்கு சேமிப்பதற்கும், இம்முறை கள் பெரிதும் உதவுகின்றன. எமது தேவையை நாமே பூர்த்தி செய்வோம், வளமோடு வாழ்வோம்.

(முற்றும்.)

தில்லையம்பதியாள் துணை

கோண்டாவில் தில்லையம்பதி மத்திய கிராம அபிவிருத்திச்சங்கம், மத்திய சனசமூக நிலையத் தலைவர்

லயன் சமாதான நீதவான் கலாநிதி திரு.சின்னத்தம்பி ஆனந்தராஜா அவர்களின்

மணிவிழா



காலம்: 21.11.2021 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: பிற்பகல் 3.00 மணி
இடம்: கோண்டாவில் தில்லையம்பதி திருமணமண்டபம்

தலைமை
திரு.மா.உதயகுமார்
(முன்னாள் தலைவர் ம.கி.அ.சங்கம்)

நிகழ்ச்சி நிரல்

- விழா நாயகனை கௌரவித்தல்
- ஆனந்த தீபம் மலர் வெளியீடு
- சிறப்பு விருந்தினர் உரை
- பிரதம விருந்தினர் உரை
- மதிப்பீட்டுரை
- ஏற்புரை: விழா நாயகன்
- நன்றியுரை

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(8698) மணிவிழாசபை, தில்லையம்பதி கோண்டாவில்

அறத்தின் வழி நில்! அஞ்ச வேண்டாம். உன் இலட்சியம் எல்லாம் உன் தேசத்தை, உன் கடவுளை, உண்மையைப் பற்றியதாகவே இருக்கட்டும்.
– ஷேக்ஸ்பியர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நாவலரின் சிலையை நிறுவுங்கள்

ஈழ மண்ணில் சைவமும் தமிழும் தழைத்தோங்க மூலகாரணமாக இருந்தவர் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்.

தனி மனிதராக நின்று அவர் ஆற்றிய பெரும் பணியால் சைவத் தமிழ் நிலைபேறடைந்தது.

அதேவேளை கிறிஸ்தவ மக்களுக்காக புனித விவிலியத்தை தமிழாக்கம் செய்து தந்த பெருந்தன்மையும் நாவலரையே சாரும்.

யாழ்ப்பாணக் கலாசாரம் கந்தபுராணக் கலாசாரம் எனப் பண்டிதமணி விதந்து போற்றுவார்.

இவ்வாறு கந்தபுராண கலாசாரத்தை நிறுவிய பெருமையும் நாவலரையே சாரும்.

ஈழத் தமிழ் மக்களின் அறிவுப்புலம் விரிந்து பரந்து செல்வதற்கு நாவலரின் புராண படனமும் பிரசங்கமும் அச்சுத்துறைப் பணியும் வித்திட்டதெனலாம்.

இதுதவிர, பஞ்சம் ஏற்பட்டபோது உணவளித்து பசியாற்றும் மிகப்பெரும் அறப்பணியை நாவலர் பெருமான் ஆற்றியதோடு, அப்பணியை ஆற்றுமாறு அவர் விடுத்த அழைப்பை சிரமேற்கொண்டு அதனைச் செவ்வனே நிறைவேற்றிய செம்மல்கள் நம் மண்ணில் நிறையவே இருந்தனர்.

இவ்வாறாக சைவத்தை – தமிழை – தமிழ் மானிடத்தை பாதுகாத்த நம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானை நம் தமிழ்ச் சமூகம் மறந்துவிட்டதோ அல்லது மறந்துவிடுமோ என்ற ஏக்கம் நாவலரின் பணியை அறிந்த பலரிடம் இருக்கவே செய்கிறது.

இந்நிலையில் நாவலர் பெருமானின் உருவச்சிலை யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் அகில இலங்கை சைவ மகா சபையால் நிர்மாணிக்கப்பட்டு யாழ்.மாநகர முதல்வரால் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு மனநிறைவைத் தருவதாக இருந்தாலும் நாவலரின் பெருமையை, அவர் சைவத் தமிழ் உலகுக்கு ஆற்றிய பணிகளை நம் எதிர்காலச் சந்ததியினர் அறிந்து கொள்வதற்கு வழிசெய்தாக வேண்டும்.

இவ்வாறு நல்லூர் நாவலர் பெருமானை நம் சந்ததி அறியவேண்டுமாயின் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நாவலர் பெருமானின் சிலை நிறுவப்படுவது அவசியமாகும்.

ஆம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தை ஈந்தளித்த சேர் பொன்.இராமநாதன் அவர்களின் அரசியல் ஆளுமைக்குப் பின்னால் ஆறுமுகநாவலரே இருந்தார் என்பதை அறிவார்ந்த தமிழ்ச் சமூகம் ஒருபோதும் மறந்துவிடாது.

எனவே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சேர் பொன்.இராமநாதனின் உருவச் சிலைக்கு அருகில் நல்லூர் ஆறுமுகநாவலரின் உருவச்சிலையை நிறுவுவதன் மூலம் எம் தமிழ் இனத்தின் அடையாளம் பேசப்படும் – பாதுகாக்கப்படும் – நினைவூட்டப்படும் என்பது நம் தாழ்மையான கருத்து.

இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் நாவலர் பெருமானின் உருவச் சிலை எழுகை பெறும்போது அதனைத் தொடர்ந்து நம் தாயகத்தில் உள்ள அத்தனை பாடசாலைகள், சமய நிறுவனங்கள் என எங்கும் ஆறுமுகநாவலரின் உருவப்படம் வழிபாட்டோடு வைக்கப்படும்.

அப்போதுதான் நாவலர் பெருமான் மீண்டு(ம்) எழுவார்.

# தமிழர் தேசத்தை அங்கீகரிக்கும் போதுதான் இந்தத் தீவு அழிவிலிருந்து மீண்டெழும்

## கஜேந்திரன் எம்.பி பாராளுமன்றில் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழர் தேசத்தை அங்கீகரிக்கும் போதுதான் இந்தத் தீவு அழிவிலிருந்து மீண்டெழும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் இடம் பெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டினுடைய வருமானம் பாதாளத்தில் வீழ்ச்சி அடைந்துள்ளதுடன் அந்நிய செலாவணி கையிருப்பும் தீர்ந்துள்ள கையறு நிலையில் நின்றவாறு இந்த வரவு - செலவுத் திட்டத்தை இந்த அரசு சமர்ப்பித்துள்ளது.

நாடு பிளவுபடுதலை தடுத்தல் என்ற போர்வையில் ஒற்றை ஆட்சியை பாதுகாக்கிறோம் என்ற கோசத்தோடு தமிழ்த் தேசத்தின் மீது நீங்கள் இன அழிப்பை மேற்கொண்டு போரை வென்றுவிட்டதாகவும் ஒற்றையாட்சியை பாதுகாத்து விட்டதாகவும் எகத்தாளம் இட்டு பிரகடனம் செய்து 12 ஆண்டுகளின் பின்னர் இந்த வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பித்துள்ளீர்கள்.

ஆனாலும் இன்று நாட்டினுடைய நிலைமை என்ன? நாடு கடனில் மூழ்கி உள்ளத்துடன் கழுதை தேய்ந்து கட்டெறும்பானது போல ஒட்டுமொத்த மக்களும் பட்டினிச்சாவை எதிர்நோக்கி உள்ள நிலையிலே, நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்து கிடக்கின்றது என்றார். (ஞா)

# வடமராட்சியில் மாணவிக்கு கொரோனாத் தொற்று

## ஆசிரியர் உட்பட 18 மாணவிகள் சுய தனிமைப்படுத்தலில்

(கரணவாய்)

வடமராட்சிப் பகுதியிலுள்ள கல்லூரி மாணவி ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து ஆசிரியர் உட்பட 18 மாணவிகள் சுய தனிமைப்படுத்தலில் வைக்கப்பட்டுள்ளனர்.

உடுப்பிட்டி இமையாணன் பகுதியைச் சேர்ந்த மாணவி மற்றும் அவரின் சகோதரிக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த மாணவி கடந்த புதன்கிழமை காய்ச்சல் காரணமாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற போது அவருக்கு அன்ரிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதில் நேற்று முன்தினம் குறித்த மாணவிக்கும் அவரின் தங்கைக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

க.பொ.த.உயர்தரத்தில் கல்வி பயிலும் குறித்த மாணவி கடந்த புதன்கிழமை கல்லூரிக்குச் சென்றுள்ளமை தெரிய வந்துள்ளது. இதனையடுத்து குறித்த மாணவியுடன் நேரடியாக தொடர்பு கொண்ட ஆசிரியர் ஒருவரும் 18 மாணவிகளும் சுய தனிமைப்படுத்தலில் வைக்கப்பட்டுள்ளனர். குறித்த மாணவியின் தங்கை 12 வயதாகையால் அவருக்கான பாடசாலைகள் ஆரம்பமாகவில்லை எனவும் தெரியவந்துள்ளது.

அத்துடன் மாணவி பயன்படுத்திய இடங்கள் தொற்று நீக்கம் செய்யப்பட்டு பாடசாலைச் செயற்பாடுகள் கரவெட்டி சுகாதார பணிமனையால் வழமைக்கு கொண்டு வரப்பட்டது. (ஞா-60)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2021

**“மரங்களின் மீது கரிசனை கொண்ட கடவுள் அவற்றை வரட்சி, நோய்கள், பனிச்சரிவுகள், ஆயிரமாயிரம் சூறாவளிகள் மற்றும் கடும் வெள்ளப் பெருக்குகளில் இருந்து காப்பாற்றினாலும் முட்டாள்களிடம் இருந்து மட்டும் அவரால் அவற்றைக் காப்பாற்ற முடியவில்லை.”**


**- ஜோன் மூர் (அமெரிக்க இயற்கையியலாளர்)**

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 22 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**வவுனியா பிரதேசத்தில்** கூமாங்குளம் கிருஷ்ணா மெடி கிளினிக், ஈச்சங்குளம், ஈச்சங்குளம் கல்லறை, ஈஸ்வரிபுரம், கல்மடு, கருவேப்பங்குளம், கற்குளம் (சாஸ்திரி கூழாங்குளம்), கிடாச்சூரி, கோதாண்டர் நொச்சிக்குளம், மணிபுரம், மணிபுரம் வீட்டுத் திட்டம், மறக்காறம்பளை (அபிராமி ஆலை), மறவங்குளம், பத்தினியார் மகிழங்குளம், பூம்புகார், சமயபுரம், சாஸ்திரிகூழாங்குளம், சுந்தரபுரம், தரணிக்குளம், வடக்கு பண்ணை, சமயபுரம் வரன் அரிசி ஆலை, நீரவழங்கல்-புதுக்குளம், மறக்காறம்பளை (பயிற்சி நிலையம்), இரணை இலுப்பைக்குளம், ஹபீப் நகரம், காக்கையங்குளம், கங்காணிகுளம், கீரிசுட்டான், கோவில் புளியங்குளம் (மடு), மதீனாநகர் காக்கையங்குளம், முள்ளிக்குளம் திட்டம், பரசங்குளம் (மடு, துணுக்காய் வீதி), சின்ன வலயங்கட்டு, விளாத்திக் குளம் (உம்.என்) ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படும்.

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



❖ தம்மைத் தாமே உயர்த்துவோர் தாழ்த்தப்பெறுவர். தம்மைத்தாமே தாழ்த்துவோர் உயர்த்தப் பெறுவர்.

❖ “சிறுபிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள். அவர்களைத் தடுக்காதீர்கள். ஏனெனில், இறையாட்சி இத்தகையோருக்கே உரியது.

❖ உமக்குள்ள யாவற்றையும் விற்று ஏழைகளுக்குக் கொடும். அப்போது விண்ணகத்தில் நீர் செல்வராய் இருப்பீர்.

❖ செல்வர் ஒருவர் இறையாட்சிக்கு உட்படுவதைவிட ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எளிது”

❖ உமது நம்பிக்கை உம்மை நலமாக்கிற்று

❖ “ஆண்டவர் பெயரால் அரசராய் வருகிறவர் போற்றப் பெறுக! விண்ணகத்தில் அமைதியும் மாட்சியும் உண்டாகுக!”

# இலங்கை கடற்பரப்பிற்குள் மீன்பிடிக்கும் மீனவர்கள் மீது சட்ட நடவடிக்கை

## ராமேஸ்வரம் மீன்வளத்துறை எச்சரிக்கை


(முறிகண்டி)

எல்லை தாண்டி இலங்கை கடற்பரப்பிற்குள் மீன்பிடிக்கும் மீனவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என ராமேஸ்வரம் மீன்வளத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்த நிலையில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடமாட்டோம் என ராமேஸ்வரம் மீனவர்கள் உறுதி அளித்துள்ளனர்.

ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்தில் சுமார் 800க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். சமீபகாலமாக தடை செய்யப்பட்ட வலைகளை பயன்படுத்தி மீனவர்கள் மீன் பிடிப்பதால் கடல் வளம் குறைந்து வருகிறது. அதே போல் எல்லை தாண்டி மீனவர்கள் மீன்பிடிப்பதால் இலங்கை இந்திய மீனவர்கள் இடையே பிரச்சினை ஏற்படுகிறது. எனவே, இவ்வாறான பிரச்சினைகளை தடுக்கும் வகையில் நேற்று மீனவர்கள் மற்றும் மீன்வளத்துறையினர், மெரைன் பொலிஸார் உள்ளிட்ட அதிகாரிகள் மட்டத்திலான ஆலோசனை கூட்டம் ஒன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அதிகாரிகள் எல்லை தாண்டி மீன் பிடிக்கும் மீனவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், தடை செய்யப்பட்ட மீன்பிடி முறையினை பயன்படுத்தி மீன் பிடிக்கும் மீன்பிடி படகுகளை பறிமுதல் செய்யப்படும் என எச்சரித்ததுடன், கடற்கரையிலிருந்து 5 நாட்டிகலுக்குள் கரையோரம் மீன்பிடிக்கும் விசைப்படகுகள் மீது வழக்கு பதிவு செய்யப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும், இலங்கை இந்திய மீனவர்கள் பிரச்சினையை தீர்க்க இலங்கை அரசுடன் இந்திய அரசு உடனடியாக பேசி நடுக்கடலில் பிரச்சினையின்றி மீனவர்கள் மீன் பிடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். எனவும் மீனவர்களும் கோரிக்கை விடுத்தனர். (4-100)




"மஞ்சள் கோட்டில் மாணவரை பாதுகாப்போம்" எனும் தொனிப்பொருளில் வவுனியா முதல் வட்டுக்கோட்டை வரை விழிப்புணர்வு செயற்திட்டம் நேற்று ஆரம்பமானது.

(படம்-சப்தசங்கரி)

# மன்னார் சௌத்பார் கடற்கரையில் கரை ஒதுங்கிய மர்மப் பொருள்



(மன்னார்)

மன்னார்-சௌத்பார் இராணுவ முகாமிற்கு பின் பகுதியில் உள்ள கடற்கரை பகுதியில் நேற்று காலை மர்மப் பொருள் ஒன்று க்ரை ஒதுக்கியது.

குறித்த மர்மப்பொருள் தொடர்பாக அப்பகுதி கடற்படையினர் மன்னார் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினருக்கு தகவல் வழங்கிய நிலையில் உடனடியாக அப்பகுதிக்கு பொலிஸார் மற்றும் அதிரடிப்படையினர் வருகை தந்தனர்.

குறித்த மர்ம பொருளானது பல்வேறு மின் சுற்றுக்களுடன் காணப்பட்ட நிலையில் அதிரடிப்படையினர் குறித்த மர்மப் பொதியை மீட்டு சோதனை செய்தனர்.

எனினும் குறித்த மர்மப் பொதியில் ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய எவ்வித பொருட்களும் இல்லை என தெரியவந்ததுடன் குறித்த மர்ம பொருள் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-285)




கிராமப்புற மக்களின் வாழ் க்கைத்தர த்தை உயர் மட்டத்திற்கு கொண்டு செல்லும் நோக் கில் அபான்ஸ் மற்றும் KFHI நிறுவனாங்க ளால் ஆரம்பிக்கப் பட்ட LG கிராம த்தைக் கட்டியெழுப்பும் பிரமுகர் நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக வவுனியா தரணிக்குளம் கிராம அபிவிருத்திச் சங்க கட்டடத்தில் உருவாக்கப்பட்ட குடிநீர்த்திட்டம் கடந்த 16 ஆம் திகதி மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டது. (படம்- சதீஸ்)

## இரத்ததான முகாம்

(குப்பிழான்)

யாழ்.மாவட்டத்தில் தற்போது நிலவும் இரத்தத் தட்டுப்பாட்டினைக் கருத்திற் கொண்டு இணுவில் ஸ்ரீ ராம் ஜிம் நிலையத்தினரின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை-09 மணி முதல் கே.கே.எஸ் வீதி இணுவிலில் அமைந்துள்ள மேற்படி மண்டபத்தில் இடம்பெறும்.

குறித்த இரத்ததான முகாமில் குருதிக் கொடையாளர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (4-18)

# மரம் முறிந்து வீழ்ந்ததில் மின் வடங்கள் சேதம்



(யாழ்ப்பாணம்)

வலி. மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட தொல்புரம் பகுதியில் உள்ள வீதியில் மரம் நேற்று முன்தினம் முறிந்து விழுந்துள்ளது. இதனால் போக்குவரத்து தடைப்பட்டிருந்ததுடன் மின்சார இணைப்பும் சேதமடைந்திருந்தது.

இதனையடுத்து வலி. மேற்கு - சுழிபுரம் பிரதேச சபைக்கு தகவல் வழங்கப்பட்டது. வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்த பிரதேச சபையின் ஊழியர்கள் மரத்தினை வெட்டி அவ்விடத்திலிருந்து அதனை அப்புறப்படுத்தினர். இதன்போது மின்சார சபையினரும் அவ்விடத்திற்கு வருகைதந்து மின்னிணைப்பினை சரிசெய்தனர். (4-104)

# வீதியை புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை

(கரணவாய்)

பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்குட்பட்ட பொலிகண்டி சல்லியவத்தை வீதி பல வருடங்களாக திருத்தப்படாத நிலை காணப்படுகின்றது. பிரதேச சபையிலும், அரசியல்வாதிகளிடமும் மக்கள் பல தடவை முறைப்பாடு செய்தும் குறித்த வீதியை திருத்துவதற்கான எந்த ஒழுங்கு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. குறித்த வீதியால் பயணம் செய்பவர்கள் பெரும் அசோகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் உடனடியாக இவ் வீதியை திருத்துவதற்கான ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (4-60)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 340 | 350 | 250 | 320 |
| உருளைக்கிழங்கு | 200 | 190 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 250 | 200 | 140 | 250 |
| தக்காளி | 350 | 400 | 400 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 60 | 50 |
| கோவா | 200 | 250 | 240 | 250 |
| கரட் | 180 | 350 | 320 | 400 |
| பூசணி | 60 | 70 | 60 | 60 |
| புடோல் | 240 | 240 | 200 | 200 |
| வாழைக்காய் | 60 | 50 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 190 | 200 | 240 |
| பெரிய வெங்காயம் | 200 | 170 | 160 | 150 |
| பாகற்காய் | 550 | 550 | 500 | 800 |
| வெண்டிக்காய் | 240 | 240 | 200 | 240 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 130 | 160 |
| பயற்றங்காய் | 500 | 600 | 240 | 400 |
| லீக்ஸ் | 250 | 300 | 300 | 440 |
| பீற்றூட் | 120 | 90 | 80 | 120 |
| கறிமிளகாய் | 600 | 480 | 500 | 400 |
| முருங்கைக்காய் | 400 | 500 | 500 | 450 |
| போஞ்சி | 380 | 380 | 400 | 400 |
| கத்தரிதம்புள்ள | 300 | 300 | - | 300 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | - | 100 |
| தேசிக்காய் | 400 | 400 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 70 | 70-100 |
| இராசவள்ளி | 250 | 280 | 200 | 250 |
| வெங்காயப்பூ | -- | -- | - | 400 |
| முள்ளங்கி | 140 | 150 | 200 | 200 |
| பொன்னாங்காணி | 50 | 50 | 60 | 40 |
| வல்லாரை | 20 | 200 | 20 | 30 |
| ஈரப்பலா | -- | -- | 70 | 100 |

## மரணம் - 22...

அரசாங்கத் தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்மைய நாட்டில் பதிவான கோவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 14,108 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை கொரோனாத் தொற்று உறுதியான மேலும் 725 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதற்கமைய, நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 555,929 ஆக அதிகரித்துள்ளது. இவர்களில் 15,468 பேர் சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஞா)

## இதயங்களில்...

ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை அரசு இறந்தவர்களின் ஆத்மாக்களை நினைவுகூருவதைத் தடை செய்வது போர்க்களத்தைவிட தமிழ்பேசும் மக்கள் நெஞ்சில் ரணகளத்தை எரிய விடுவதாகவே இருக்கிறது.

மனிதகுலத்தின் பாரம்பரிய மாண்புகளையும் அரசு அழித்தொழிக்கிறது. இலங்கையில் கடந்த 70ஆண்டுகளுக்கு மேலான வரலாற்றுக் காலத்தில் மக்களும் தமிழ் நிலமும் இனக் கலவரங்களாலும் இன விடுதலைக்கான போர்க்களத்திலும் இலட்சக்கணக்கான உயிர்கள் பலி கொடுக்கப்பட்டு ஆறாத ரணகளத்தில் மூழ்கிக் கிடக்கும் மனிதகுல வரலாற்றில் கறைபடிந்து கிடக்கும் நிலைமையை அனுபவித்து வருகிறோம் என்றுள்ளது. (ஞா-299)

## தீயில் எரிந்த...

திகதி கணவருடன் முரண்பட்டுக்கொண்டு தனக்குத்தானே மண்ணெண்ணெய் ஊற்றி இறக்கப் போவதாக கணவனை வெருட்டியுள்ளார்.

இதன்போது கணவன் பீடி புகைப்பதற்காக வைத்திருந்த லைற்றர் மூலம் மனைவியைக் கொளுத்தியதாக மரண விசாரணையில் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் படுகாயமடைந்த குறித்த குடும்பப்பெண் யாழ்.போதனாவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

இவரது மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ஞா)

## சாவகச்சேரி...

சாவகச்சேரி நீதிமன்றம் 21 நபர்களுக்கு தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

குறித்த தடை உத்தரவு நேற்று முன்தினம் வழங்கப்பட்டுள்ளதாக சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் எம்.ஏ. சுமந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், சிவஞானம் சிறீதரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், சி.வி.விக்னேஸ்வரன் உட்பட்ட அரசியல் பிரமுகர்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் உட்பட்ட 21பேருக்கு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் இன்று தொடக்கம் எதிர்வரும் 28ஆம் திகதி வரை நினைவேந்தல் நிகழ்வுகள் எதனையும் முன்னெடுக்க முடியாது என்று உத்தரவிடப்பட்டுள்ளது. (ஞா)

## மன்னாரில்...

வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது வோட்டர் ஜெல் (Water Gel) எனும் வெடிபொருட்கள் 7,990 கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

998 கிலோ 750 கிராம் நிறையுடைய வெடிபொருட்களே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

54 மற்றும் 57 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (ஞா)

## கிளாலியில்...

தினரைக் காப்பாற்றியுள்ளதுடன் சந்தேக நபர்கள் ஏழு பேர் பளைப் பொலிஸாரால் தேடப்பட்டு வருவதாக தெரியவந்துள்ளது.

நேற்று அதிகாலை 2 மணியளவில் கோடரிகள், வாள்கள் உட்பட கூரிய ஆயுதங்களுடன் வீடு ஒன்றுக்குள் நுழைந்த பத்துக்கும் அதிகமானோர் வீட்டின் கதவு, ஜன்னல் என்பவற்றை கொத்தி உடைத்து உள்ளே நுழைந்திருக்கின்றனர்.

இதன்போது அந்த வீட்டில் இருந்த குடும்பஸ்தர் உடனடியாக தனது பிள்ளைகளையும் மனைவியையும் அறை ஒன்றுக்குள் வைத்துப் பூட்டிவிட்டு வீட்டில் இருந்த கைக் கத்தியின் துணையுடன் உள்நுழைந்தவர்களை எதிர்த்துப் போராடியதாகவும் சமையலறையில் இருந்த மிளகாய்ப் பொடியை எடுத்து அங்கு வந்தவர்கள் மீது வீசியதாகவும் அதன்பின்னரே தாக்குதல் நடத்த வந்தவர்கள் அங்கிருந்து தப்பி ஓடியதாகவும் தெரியவந்துள்ளது.

இதேவேளை தாக்குதல் நடத்தியவர்களை கைது செய்வதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஞா)

## கோவிட்டால்...

உறுதி செய்யப்பட்டுள்ளது.

உயிரிழந்த குறித்த நபரின் பிசிஆர் மாதிரிகள் யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோதே தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ஞா)

## நாட்டில் மீண்டும்...

என்பதே அரசாங்கத்திற்கு இருக்கும் பாரிய பிரச்சினையாகும். இரத்தக்கறையை மீண்டும் பார்க்கும் மனநிலையை உருவாக்கவே இவர்கள் முயற்சிக்கின்றனர் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி குமாரி கவிரத்ன சபையில் தனது ஆவேசத்தை வெளிப்படுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை, அரசாங்கத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார். (ஞா)

## வட...

ரர் துயிலும் இல்லங்களுக்கு செல்லும் வீதிகள் மற்றும் சந்திப் பகுதிகளிலும் வீதித் தடைகள் போடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை வடக்கு மாகாணத்திலுள்ள பெரும்பாலான நீதிமன்றங்கள் மாவீரர் நினைவு தினத்துக்கு தடைவிதித்துள்ளன. (ஞா)

## அரசி...

செயலாளரான அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தில் இருப்பதா? அல்லது வெளியேறுவதா? என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரம் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அம்பாந்தோட்டை மாவட்ட அதிகார சபைக் கூட்டத்தில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ஞா)

## பொரு...

கூறியுள்ளார்.

வரவு-செலவுத் திட்டம்மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ஞா)


### மணமகள் தேவை

1983 இல் பிறந்த கொழும்பைச் சேர்ந்த BA படித்து சுயதொழில் செய்யும் மணமகனுக்கு 7 இல் செவ்வாய் தோஷம் அற்றது. பொருந்தக்கூடிய அழகிய படித்த மணமகளை எதிர்பார்க்கின்றோம். (உள்நாடு, வெளிநாடு)

075 669 6801
011 259 8824
(C-1533)

### சொர்க்கம் திருமண சேவை

கனடாவில் வாழும் 34 வயது செவ்வாய் குற்றமற்ற சித்திரை நட்சத்திர விவாகரத்து மணமகனுக்கு மணமகளையும், கனடாவில் வாழும் 38 வயது செவ்வாய் குற்றமற்ற அனுஷ நட்சத்திர விவாகரத்து மணமகளுக்கு மணமகனையும், கனடாவில் வாழும் 30 வயது செவ்வாய் குற்றமற்ற பூராட நட்சத்திர மணமகளுக்கு பட்டதாரி மணமகனையும் இலங்கையில் தேடுகின்றோம். (8707)

0014166661855
021 222 1515, 077 650 5097

### ஜெயக்குமார் திருமண சேவை

1984, 1982, 1993 இல் பிறந்த கனடா, அவுஸ்திரேலியா, ஐரோப்பாவிலுள்ள மணமகன்களுக்கு படித்த மணமகள்மார் தேவை.
1991 சூரியன் + செவ்வாய், லண்டனிலுள்ள மணமகளுக்கு பல்கலைக்கழகத்தில் டிகிரி முடித்த மணமகன் தேவை. இலங்கையிலுள்ள மணமகனுக்கு மணமகள் தேவை. (8704)

Jeyakumar GERMANY : 0094764752219
(viber, IMO, Whatsapp)
Jeyakumar GERMANY : 077 636 6397



### தன நிதானய

திகதி - 2021.11.20
சீட்டிழுப்பு இலக்கம் - 622
Z 37 63 65 78
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
NATIONAL LOTTERIES BOARD
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 456 9416

### கொவிசெத

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 20.11.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2887
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 03 23 58 78
தேசிய லொத்தர் சபை

### மஹஜன சம்பத

திகதி 2021/11/20
சீட்டிழுப்பு இலக்கம் 4592
ஆங்கில எழுத்து R
வெல்லப்பட்ட இலக்கங்கள் 0 4 5 7 1 9
தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்

திகதி 20/11/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0940
வெற்றி எழுத்து H
சுப்பர் இலக்க 2
வெற்றி இலக்கங்கள் 2 4 20 45

### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி 20/11/2021
சீட்டிழுப்பு இலக்கம் 1168
வெற்றி இலக்கங்கள்
மகரம் 6 5 5 3 8 1
தேசிய லொத்தர் சபை



### சசிரி (SASIRI)

சீட்டிழுப்பு வாரம் 103
சீட்டிழுப்பு திகதி 20.11.2021
சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 07 | 21 | 41
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,496,280/-
அபிவிருத்தி லொத்தர் சபை
நீலம், செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் முறையே புதன்கிழமை மற்றும் சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### அத கோடிபதி (ADA KOTIPATHI)

கிழமை: சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1395
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 20.11.2021
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,768,300
வெற்றி இலக்கங்கள் 10 21 54 73
ஆங்கில எழுத்து P
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### சனிதா (Shanida)

கிழமை: சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3730
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 20.11.2021
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,623,320
வெற்றி இலக்கங்கள் 09 23 24 74
ஆங்கில எழுத்து J
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம்
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1569
சீட்டிழுப்பு திகதி 20.11.2021
நிறம் நீலம்
தினம் சனி
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
M 02 14 21 68
அடுத்த சுப்பர் ஜக்பொட் :- 70,950,534/=
அபிவிருத்தி லொத்தர் சபை

### ராசி அதிர்ஷ்டம்

சுப்பர் ஜக்பொட் ரூ. 2,180,905/=
திகதி 20.11.2021
வெற்றி வாரம் 3281
வர்ணம் இளநீலம்
வெற்றி இலக்கங்கள் 13 35 40 52 துலாம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 8,910,720/=
அபிவிருத்தி லொத்தர் சபை

### සංවර්ධන වාසනාව

அபிவிருத்தி அதிர்ஷ்டம்
திகதி : 2021-11-20
வெற்றி வாரம் : 461 | வர்ணம் : சிவப்பு
சுப்பர் ஜக்பொட் ரூ. 10,882,756/-
ஆங்கில எழுத்து Z
வெற்றி இலக்கங்கள் 66 38 30
விசேட எண் 4
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,589,480/-
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 10,989,156/-
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## வேலையாட்கள் தேவை

கிளிநொச்சியில் அமைந்துள்ள நகைக் கடை ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை. நகைக் கடை அனுபவமுள்ளதுடன் கிளிநொச்சி மாவட்டத்தில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

சம்பளம் - 15,000/= - 35,000/=

இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம்.

(8709)

**077 213 4344**

## காணிகள், கடைகள் விற்பனைக்கு

யாழ். நகரப் பகுதிகளில் காணிகள் விற்பனைக்கு உண்டு.

- ஸ்ரான்லி Road இல் 1 1/2 பரப்பு.
- யாழ். நகரப் பகுதியில் 5 1/2 பரப்பு.
- திருநெல்வேலியில் 2 கடை.
- யாழ். சத்திரச் சந்தியில் 3 பரப்பு.

(8712)

Viber **077 522 1132 | 076 534 6562**

## பணிப்பெண் தேவை

கொழும்பு - 06, வெள்ளவத்தையில் சிறிய குடும்பம் ஒன்றைப் பராமரிக்க வீட்டில் தங்கிநின்று பணிபுரிய பணிப்பெண் தேவை.

(8719)

☎ **-077 345 7136**

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் சுன்னாகம் சந்தி அருகாமையில் புன்னாலைக்கட்டுவன் வீதியில் 7 ½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

1 ½ பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.

(சுன்னாகம் பஸ் நிலையத்திலிருந்து 500M தூரம்)

(8714)

தொடர்பு

**077 623 4204**

**077 288 0152, 076 890 9259**

## சதாபொன்ஸ்

### கல்வி நிலையம்

மாலி சந்தி, அல்வாய்

O/L துரித மீட்டல் வகுப்புக்கள் 22.11.2021 திங்கள் காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

புதிய சுகாதார விதிமுறைக்கு அமைய மட்டுப்படுத்தப்பட்ட தொகையினருடன் வகுப்புக்கள் நடத்தப்படும். (C-3063)

அனுமதி இன்று முதல்

தொடர்புகளுக்கு: 077 309 5176, 077 925 0105, 021 226 3206

## காணி விற்பனைக்கு

துன்னாலை கலிகை வீதியில் இருபக்க வீதி முகப்புடன் 3 பரப்பு சதுரக் காணி விற்பனைக்கு உண்டு.

(C-1532)

**077 023 7189**

## வேலையாட்கள் தேவை

சைவ உணவகம் ஒன்றிற்கு கீழ்வரும் வேலையாட்கள் தேவை. மூன்று நேர உணவு, தங்குமிட வசதி, நிரந்தர சம்பளத்துடன் வன்னி மாவட்டத்தவர்கள் விரும்பத்தக்கது.

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கவும்.

- ☐ உணவு பரிமாறுபவர்கள்
- ☐ குசினி வேலையாட்கள்
- ☐ குசினி உதவியாளர்கள்
- ☐ இடியப்பம், பிட்டு, தோசை போடுபவர்கள்
- ☐ ரீ மேக்கர்
- ☐ மரக்கறி வெட்டுபவர்
- ☐ முகாமையாளர்
- ☐ பார்சல் கட்டுபவர்கள்
- ☐ அலுவலக உதவியாளர்
- ☐ வேறு இதர வேலைகளுக்கும்

(தங்கி நின்று உணவுப் பண்டங்கள் தயார் செய்து தருபவர்கள்.

(8693)

இல. 36,38 பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

**077 791 7753/021 222 2373**

## Vacancy

Designer, Pharmacist, Cleaner, Chef, Sales (Free Reg. Vacancies)

**DEWMAS**

(8697)

**077 773 3368**

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம், மயிலிட்டி, B.C றோட் சாந்த சந்தி அருகாமையில் மெயின் றோட்டுடன் 8 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.

தொடர்பு:

**076 755 8606**

**077 015 0353**

(8715)

## பணிப்பெண் தேவை

யாழ். நகரப் பகுதியில் உள்ள வீடொன்றிற்கு பணிப்பெண் தேவை.

தொடர்பு (8716)

**076 126 6682**

## பணிப்பெண் தேவை

மண்கும்பானில் அமைந்துள்ள வீடொன்றில் தங்கி நின்று வீட்டு வேலைகள் செய்வதற்கு 40 வயதிற்கு மேற்பட்ட பணிப் பெண் தேவை.

தொடர்பு (8710)

**077 607 9619**

# மரண அறிவித்தல்



## புஷ்பகாந்தம் பொன்னம்பலம்

கிளிநொச்சி உருத்திரபுரம் 10ஆம் வாய்க்காலைப் பிறப்பிடமாகவும் கதிரைவேற்பிள்ளை வீதி, தம்பசிட்டி பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட புஷ்பகாந்தம் பொன்னம்பலம் அவர்கள் நேற்று முன்தினம் (19.11.2021) இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபாபதி - அஞ்சனாச்சிதேவி தம்பதிகளின் அன்புப் புதல்வியும் வேலாயுதம் - பொன்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பொன்னம்பலம் (ஓய்வுபெற்ற ஆய்வுகூட உதவியாளர் - நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சரஸ்வதி, சூரியமூர்த்தி (ஓய்வுபெற்ற ஆசிரியர் - புற்றளை மகா வித்தியாலயம்), காலஞ்சென்ற சந்திரகுமார், கணேசமூர்த்தி (வீதி அபிவிருத்தி அதிகார சபை - பருத்தித்துறை), கோகுலன் (கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் விக்கினேஸ்வரன், ஞானசக்தி, லதா, வாணி ஆகியோரின் மாமியாரும் முகுந்தன், தர்சிகா, சுகந்தன், மலர்விழி, விமலேசன், புவித்தா, பிரியதர்ஷி, பவித்திரா, கிருஜன், ஜருஜன், கம்சிகன், சங்கீத், துளசிகன், நவகீத் ஆகியோரின் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (21.11.2021) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 7.00 மணியளவில் சுப்பர்மடம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(C-3065)

கதிரைவேற்பிள்ளை வீதி, தம்பசிட்டி, பருத்தித்துறை. **021 226 0139** தகவல் :- குடும்பத்தினர்

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் அமைந்துள்ள புடைவை கடைக்கு வேலையாட்கள் (ஆண், பெண்) உடனடியாகத் தேவை.

(அடிப்படைச் சம்பளம் - 18,000/= அனுபவமுள்ளவர்களுக்கு 20,000/= இற்கு மேல்)

(8711)

**077 919 5439**

## வாடகைக்கு

கொழும்பு - 06, வெள்ளவத்தையில் பெண்களுக்கான தங்குமிடம் வாடகைக்கு உண்டு.

(8718)

☎ **-077 345 7136**

## பஸ் விற்பனைக்கு

ஒரு கைப்பாவனையில் பாவித்த நல்ல நிலையில் உள்ள TATA ரக பஸ் (City Ride) 17 Seat உடன் விற்பனைக்கு உண்டு.

(8717)

☎ **-076 243 0394**

## வேலை வாய்ப்பு

- கனரக, இலகுரக வாகன சாரதிகள் (பொருட்களை ஏற்றி இறக்க கூடிய அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.)
- களஞ்சிய பொறுப்பாளர்கள் (பகுதி நேர வேலையாட்களும் விரும்பத்தக்கது. கணினி அறிவுடையவர்கள், இருபாலாரும்)

தொடர்பு (8713)

**077 480 9019**

## விரைவு பொதிகள் சேவை

### V2 TRAVELS

**UK-975 /=Kg**

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய்
- நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி
- பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி

(C-2919)

**0768226240** DHL

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்

- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.




(C-3043)

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS 49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம். V2 TRAVELS

**0777-068-777**

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603, 021 567 1532

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.11.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை : 30.00

Registered as a Newspaper in Srilanka

வலம்புரியின் வாரமலர்

# சங்குநாதம்

நாதம் 319

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2052 | 21.11.2021 | தொலைபேசி : 021 222 3378

## நாவலர் மீண்டு(ம்) எழுந்தார்



## வெள்ளைக் கோடுகளா? வெறியாட்ட மேடுகளா?



உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். ஈழத்தின் தலைசிறந்த எழுத்தாளர் இணுவையூர் கே.எஸ். ஆனந்தன் அவர்கள் காலமாகி விட்டார். அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்து வோம் எனக்கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

மௌன அஞ்சலி யைத் தொடர்ந்து ஆலடியில் சில நிமிடம் மௌனம் நிலவியது.

அதேநேரத்தில் விதானையார் விசுவலிங்கம் ஆழ்ந்த யோசனையில் அமர்ந்திருந்தார். இதனை அவதானித்த கங்காணி கார்த்திகேயன் நிலை மையைப் புரிந்து கொண்டு விதானையாருக்கு மகன்ர நினைவு வந்திட்டுது போல. மெல்லக் குரல் கொடுத்தார்.

விதானையார் விசுவலிங்கத்தின் மூத்த மகன் மாவீரர். மண்மீட்புப் போரில உயிர்நீத்த தியாகி. இன்று மாவீரர் நினைவேந்தல் வாரம் ஆரம்பமாகின்றது. தன்ர பிள்ளையின்ர நினைவை விதானையார் விசுவலிங்கம் ஆலடியில நினைவு கூருவார்.

என்ன செய்யிறது மாவீரர்களின் நினைவேந்தலுக்கு இந்த நாட்டில தடை விதிக்கினம். ஆனால் மண் மீட்புக்காகப் போய் தன் இன்னுயிரைத் தியாகம் செய்ததாம் பெற்ற பிள்ளையை எந்தத் தாய் தந்தையாவது நினைவுகூராமல் விடுவினமோ. மூப்பர் கூறினார்.

சாத்திரியார்: மூப்பர் சொல்லுறது நூறு வீதம் உண்மை. மாவீரர் என்றும் அவர்கள் விடுதலைப் புலிப்போராளிகள் என்றும் பார்க்கிறவர்களுக்கு மாவீரர்கள் எதற்காகப் போராடினார்கள் என்பதோ அல்லது அவர்களுக்கும் தாய், தந்தை, சகோதரர்கள், உறவுகள் இருக்கினம் என்றோ நினைக்க முடியாத மன நிலையில்தானே இருக்கினம்.

சிறாப்பர்: சாத்திரியார் இப்ப மாவீரர் வாரத்தை மாற்றியமைக்கிற முயற்சிகளும் நடக்குது. இன்னும் கொஞ்சக்காலம் போனால் கத்தோலிக்க மாவீரர், சைவசமயம் சார்ந்த மாவீரர் என்ற பிரிப்பும் நடக்கும் போல.

கங்காணி: ஓ! இப்ப தமிழர் மத்தியில சமய வாதம்தானே முன்னெழுகுது.

சாத்திரியார்: ஆனால் ஒண்டு. மாவீரர் வாரத்தை மாற்றியமைக்கிற அறிக்கையை சைவசமயத் தலைவர்கள் விட்டிருந்தால் எங்கட ஆட்கள் அவையின்ர வேட்டிகளைக் களைந்து கவசனத்தோட ஓட விட்டிருப்பினம். நல்லகாலம் அறிக்கை விட்டது ஆயர்மார் என்பதால எல்லாரும் கப்சிப்.

சிறாப்பர்: நீங்கள் இதைச் சொல்லுறியள். எங்கட பிரக்கிராசி ஒருத்தர் சைவசமயத் தலைவர்கள் எவரும் விடுதலைப் போராட்டத்திற்கு உதவல்ல எண்டும் கத்தோலிக்க மதகுருமார்தான் போராட்டத்திற்கு உதவினவியள் எண்டும் கூறியிருக்கிறார்.

பண்டிதர்: தாங்களும் இருக்கிறம் எண்டதைக் காட்டுறது எண்டால் அப்படித்தானே கதைக்க வேணும்.

விதானையார்: என்ன தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு சைவசமய சிவாச்சாரியர்கள் ஒரு பங்களிப்பும் செய்யல்ல யாமோ. கொழும்பில போய் இருந்திட்டு இடைக்கிடை இங்கவந்து போறவியளுக்கு உதுகள் விளங்காது.

வேலணை முடிப் பிள்ளையார் கோயில் ஐயாவை குண்டுவைத்து இராணுவம் கொன்ற போது இந்தப் பிரக்கிராசி எங்க போனவராம்.

ஸ்ரீபதிசர்மா இரகுபதி சர்மா இப்பவும் வெலிக்கடைச் சிறையில அடைபட்டுக் கிடக்கிறார். உந்த பிரக்கிராசியார் இரகுபதி சர்மாவை எப்பயாவது போய்ப் பார்த்திருப்பாரோ.

வாத்தியார்: சரி... சரி... சைவசமயத்தின்ர எதிரிகள் வேற எங்கயும் இல்லை. எங்களிட்டத்தான் அவையள் இருக்கினம். அதற்காக விடுதலைப் போராட்டத்தில தங்களின்ர இன்னுயிரைத் தியாகம் செய்த கத்தோலிக்க மதகுருமாரை நாங்கள் ஒருபோதும் மறக்கமுடியாது. அதே போல எத்தனையோ சிவாச்சாரியர்கள் விடுதலைப் போராட்டத்திற்கு தங்கள் இன்னுயிரை அர்ப்பணித்திருக்கினம். இந்தத் தியாகங்களைத் தெரியாமல் ஒரு பொறுப்பற்ற முறையில பிரக்கிராசியார் பேசியிருக்கிறார். என்ன செய்யிறது. ஒரு வயலில எல்லாம் நெல்லாக இருக்காது. கோழிச் சூடன், குதிரைவாலன் என நெல்லுப்போல காட்சியளித்து நெற்பயிரை நாசம் செய்யிற களைகளும் வயலிலதான் இருக்கும். நாங்கள் தான் மிகவும் அவதானமாக இருக்கவேணும்.

வாத்தியார் இவ்வாறு கூறியதும் ஆலடியில் சில நிமிடம் மௌனம் நிலவியது.

மௌனத்தைக் கலைக்க சிறாப்பர் கனகசபை குரல் கொடுத்தார்.

சிறாப்பர்: வாத்தியார் சொன்னது போல எங்கட இனத்திற்கும் சமயத்திற்கும் ஈனம் எங்கட ஆட்கள் என்பதுதான் உண்மை. கடந்த சில நாட்களுக்கு முன்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில அனைத்துலக தமிழியல் மாநாடு நடந்தது. அதில ஆய்வுக் கட்டுரை சமர்ப்பிக்கின்ற நிகழ்வில ஆய்வாளர் ஒருவர், கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்த தமிழ்க்குடி என்று தனது கட்டுரையில வாசிச்சவர்.

ஆனால் அதை ஏற்க முடியாது எண்டு விரிவுரையாளர்கள் சிலர் சீறிப்பாய்ந்தவியளாம்.

பண்டிதர்: ஏனாம் சீறினவியள்.

சிறாப்பர்: கல்லும் மண்ணும் தோன்றுவதற்கு முதல் எப்படி தமிழ்க்குடி தோன்றியிருக்க முடியும் என்ற விஞ்ஞான அறிவு கூடினதாலதான் சீறினவியள்.

பண்டிதர்: கடவுளே! கடவுளே! கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்த தமிழ்க்குடி என்பது தமிழின் பழைமையை- தமிழினத்தின் தொன்மையை எடுத்துக் காட்டக் கையாண்ட நயம். இதைப்புரிந்து கொள்ளாமல்...

வாத்தியார்: யாழ்ப்பாணத்தில மலையில்லை என்று குறையில்லை. எங்கட உழைப்பாளிகளின் தோள்புயம் மலை போல இருக்குது எண்டு மகாகவி சொன்ன வரல்லோ. அதுபோலத்தான் இதுவும்.

இவ்வாறு வாத்தியார் கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணி யும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.



**கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தே தமிழ்க் குடி தோன்றவில்லையாம்**

ஆதித்தன்

# வெள்ளைக் கோடுகளா வெறியாட்ட மேடுகளா?

அபிமன்யு
கிளி.குமார்

## நடந்தது என்ன?

**"உயர் கல்வி கற்கும் கனவோடு வந்த மதுசாளினியை வெள்ளைக் கோட்டில் வைத்து வெறியாட்டம் ஆடினரோ இல்லையோ இதற்கு நீதி சொல்லடி சிவசக்தி?"**

"பிள்ளை உனக்குப் பிடிச்ச நூடில்ஸ் முட்டையில பிரட்டி வைச்சிருக்கிறன் சாப்பிட்டுப் போவனன?". "இல்லையம்மா நான் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்திற்கு போய் A/L அட்மிசன் எடுத்துக் கொண்டு டக்கெண்டு வந்திடுவன். வந்து சாப்பிடுறன்." வெறும் 17 வயதேயான மது சாளினியின் இறுதி வார்த்தைகள் இது.

ஆம், கடந்த 15 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.15 மணியளவில் கிளி.மத்திய மகாவித்தியாலயத்திற்கு முன்பிருந்த பாதசாரிக் கடவையில் ஏற்பட்ட விபத்தில் இறந்து போன மதுசாளினி தனது தாய்க்கு கூறிய வார்த்தைகளே இவை.

மதுசாளினி ஒன்றும் பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவரல்ல. நாவலர் பண்ணை, ஊற்றுப்புலம் கிளிநொச்சி என்ற சிறு கிராமத்தில் பிறந்து எப்படியாவது வாழ்க்கையில் முன்னுக்கு வந்துவிட வேண்டும் என்ற கனவுகளுடன் வாழ்ந்த ஒரு மொட்டு மலர முன்னமே உதிர்த்தப்பட்டுவிட்டது.

அன்று மாலை மழை சிறிதாக தூறிக் கொண்டிருந்தது. ஊற்றுப்புலம் நாவலர் பண்ணை நோக்கி செல்லத் தொடங்கினோம்.

வயல்களில் மழை நீர் நிரம்பி வழிந்து கொண்டிருந்தன. வெட்டப்படாத பற்றைகள் ஆங்காங்கே வீதியை ஆக்கிரமித்திருந்தன. வீதியோரத் தில் கட்டப்பட்டிருந்த தோர ணங்கள் அங்கொன்று இங்கொ ன்றாய் அறுந்து சிதறிக் கிடந்தன.

கண்ணீர் அஞ்சலி பதாகைகளில் மழைநீர் பட்டு விழிநீராய் வழிந்து கொண்டிருந்தன.

எதிரே வந்த ஒருவரிடம் மதுசாளினியின் வீடு... என்றதுமே அதோ அதுதான் என்று அடையாளம் காட்டினார்.

வாசலை அடைந்து உள்ளே சென்றோம். வீடு முழுவதும் நிஷப்தம் நிலவியது.

பத்து மாதம் சுமந்து பெத்த தாய் இடிந்துபோய் இருந்தாள். அழுவதற்கும் பேசுவதற்கும் அவரிடம் தெம்பு இல்லை என்பதை அவரது முகம் உணர்த்தியது.

தன் கஷ்டம் தீர்ப்பாள் என நம்பியிருந்த நம்பிக்கை தகர்ந்த சோகத்தில் தந்தை கல்லாய் அமர்ந்திருந்தார்.

தன்னுடன் கூட இருந்து தனக்குப் பாடம் சொல்லித் தந்த தமக்கையின் உயிரற்ற உடலைக் கண்டு ஏங்கிய ஏக்கம் தீராமல் வாடி இருந்தாள் மதுசாளியினியின் தங்கை பவிசாளினி.

எம்மை அறிமுகம் செய்ததும் அருகில் வந்து கைகளைப் பற்றிய தந்தை (இராமலிங்கம் திருவாசகம்) பட்டபாட்டை அவர் கைகள் உணர்த்தி நின்றன.

ஆம், அவரது கைகள் அவ்வளவு மரத்துப் போய் இருந்தன. ஓரத்தில் அவர் விறகு வெட்டச் செல்லும் பழைய துவிச்சக்கர வண்டியும் கோடரியும் அதற்குச் சாட்சியாச் சரிந்து கிடந்தது.

"என்ர பிள்ளையை அநியாயமாக சாக்காட்டிப் போட்டாங்கள் தம்பி" என்றவருக்கு அதன்பின் வார்த்தைகள் வரவில்லை. கண்களில் நீர் குளமாகியது.

கதிரையில் அமர்ந்து கொண்டோம். சிறிது நேர அமைதிக்குப் பின் தாய் இராஜேஸ்வரி பேசத் தொடங்கினாள். காலை 7 மணிக்கெல்லாம் வெளிக்கிட்டுட்டாள். அம்மா நான் A/L அட்மிசன் எடுக்க கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்திற்கு போகப் போறன் எண்டாள் சந்தோசமா.

" சரி பிள்ளை நூடில்ஸ் செய்தனான். முட்டை போட்டுக் கிளறி இருக்கிறன். சாப்பிட்டுப் போ எண்டன்".

"இல்லை அம்மா நான் போய் அட்மிசன் எடுத்துக் கொண்டு டக்கெண்டு வந்திடுவன் வந்து சாப்பிடுறன்" எண்டு சொல்லிப் போட்டு போன பிள்ளை பிணமாய்த்தான் வீட்டுக்கு வந்தாள் என மார்பில் அடித்துக் கொண்டார்.

உதிரத்தைப் பாலாய்க் கொடுத்த தாய்க்கு தன் பிள்ளை பசியுடன் போய் இறந்து விட்டாளே என்ற எண்ணம் எப்பேர்ப்பட்ட வலியைத் தரும் என்பதை எண்ணிக் கூடப் பார்க்க முடியவில்லை.



"பிள்ளை நல்ல கெட்டிக்காரி. ஊற்றுப்புலம் பள்ளிக்கூடத்தில் O/L வரைக்கும் படிச்சவள். ரவுணுக்க இருக்கிற பெரிய பள்ளிக்கூடத்திலதான் A/L படிப்பன். எங்கட வீட்டின்ர கஷ்டத்தைத் தீர்ப்பன். அப்பாவை கஷ்டப்பட விடாமல் இருத்தி வைத்து சாப்பாடு குடுப்பன் என அடிக்கடி சொல்லுவாள்" என்று கூறிய தந்தைக்கு அதற்கு மேல் கூற வார்த்தைகள் வரவில்லை. கண்களில் வழிந்த கண்ணீரை துடைத்தெறிந்து தனது விரக்தியைத் தீர்த்துக் கொண்டார்.

மீண்டும் சிறிது நேர அமைதி... "எனக்கு நாலு பிள்ளையள். மூத்தவன் கலியாணம் முடிச்சிட்டான். அடுத்தவன் ஒரு கடையில நாள் கூலிக்கு வேலை செய்யிறான். அடுத்தது தான் என்ர செல்லம் மதுசாளினி..." என்றவர் அதற்கு மேல் பேச இயக்கமின்றி அப்படியே அமைதியானார்.

கடைசிப் பிள்ளை 6 ஆம் ஆண்டு படிக்கிறாள் என தாய் தொடர்ந்தார்... "அவளை கடைசிவரை ரவுணுக்கு படிக்க அனுப்பமாட்டன்.

என்ர பிள்ளையை இழந்த மாதிரி இனி ஒரு இழப்பை எங்களாலை தாங்க முடியாது" என்றபடியே மரத்துப் போய் இருந்தார். "எங்கட குடும்பத்தின்ர ஒளி விளக்கு அணைச்சிட்டுது. அது அணைஞ்ச பிறகு கனபேர் வந்து எங்களுக்கு உதவி செய்யிறம் எண்டு சொல்லுகினம்.

இந்த உதவியை கொஞ்சம் முன்னமே செய்திருந்தால் எங்கட பிஞ்சுக் குழந்தையை நாங்கள் இழந்திருக்க மாட்டம்" என்ற தந்தை ஒரு பெருமூச்சை விட்டபடி "என்னாலையும் இப்ப இயலுதில்லைத் தம்பி. வயது 56 ஆச்சுது. கஷ்டமான வேலை செய்ய முடியுதில்லை. இனி அடுத்தவளைப் படிப்பி க்க வேணும். அதுக்கு எத் தினை லோட் விறகு வெட்ட வேணுமோ?" என்றவரின் வார்த்தைகள் தழும்பி நின்றன.

மீண்டும் பெரிய ஒரு அமைதி. அதை உடைப்பதாய் "ஒண்டுக்கும் யோசியாதையுங்கோ. எல்லாம் விதி, கடவுளை நம் புங்கோ" என்றார் எமது அணியின் ஒருவர்.

சரி ஐயா நாங்கள் வெளிக்கிடுறம் என்று விடை பெற்று வெளியேறினோம். மது சாளினி இல் லாத அந்த வீட்டின் வெறுமையை எம்மாலும் உணர முடிந்தது. வெளியே வந்ததும் ஒரு வயோதிபர் எம்மை எதிர் பார்த்துக் காத்திருந்தார்.

"தம்பி இங்கை பஸ்கள் ஓடுறது இல்லை. பஸ் எடுக்குறது எண்டா ஊற்றுப்புலம் சந்திக்குப் போக வேணும். இங்க இருந்து இரண்டு கிலோமீற்றர் தூரம் நடந்துதான் போக வேணும். பஸ் அனுப்புறதுக்கு ஏதும் எழுதி உதவி செய்யுங்கோ" என்றார்.

நாமும் சரி என தலை அசைத்துவிட்டு அங்கிருந்து புறப்பட்டோம். வானம் அப்போதும் மதுசாளினியின் இழப்புக்காய் கண்ணீர் விட்டபடியே இருந்தது.

விபத்து நடந்த அன்றைய 15 ஆம் திகதி மூன்று மாணவிகள் ஊற்றுப்புலத்தில் இருந்து கிளிநொச்சிக்கு புறப்படனர். காலை 8.15 மணியளவில் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்திற்கு எதிரில் இருந்த பாதாரிக் கடவையை (வெள்ளைக்கோடு) கடக்க முற்படுகின்றனர்.

(10 பக்கம் பார்க்கவும்...)

# தமிழ் இராச்சியத்தின் தோற்றம் பற்றிய முன்ன
# மீள்வாசிப்பிற்கு உட்படுத்தும் அரிய தமிழ்க் கல்வெட்டு

புகை படர்ந்திருக்கும் இலங்கைத் தமிழரின் ஆதிகால, இடைக்கால வரலாற்றுக்குப் புது வெளிச்சமூட்டி வருவதில் தொல்லியற் கண்டுபிடிப்புக்களுக்கு முக்கிய இடமுண்டு. அக்கண்டு பிடிப்புக்களில் கல்வெட்டுக்கள் நம்பகரமான முக்கிய சான்றுகளாகப் பார்க்கப்படுகின்றன. அவை இலக்கியங்களைப் போல் விரிவான வரலாற்றுச் செய்தி களைத் தராவிட்டாலும் அவை வரலாற்றுச் சம்பவங்கள் நடந்த சமகாலத்திலேயே பெரும்பாலும் எழுதப்பட்டிருப் பதனால் அவற்றில் இருந்து அறியப்படும் வரலாற்றுச் செய்திகள் நம்பகரமானதாகவே பார்க்கப்படுகின்றன. இவை ஒரு நாட்டில் வாழும் பல இன மக்கள் பற்றிய பாரம்பரிய வரலாற்று நம்பிக்கைகளை மீளாய்வு செய்வ திலும் முக்கிய பங்கு வகிக்கின்றன. இதற்கு திருகோண மலை மாவட்டத்தில் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள கல்வெட்டையும் உதாரணமாகக் குறிப்பிடலாம். முதலில்





இக்கல்வெட்டுப் பற்றிய செய்தி திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ் என்பவ ரால் வைத்திய கலாநிதி த.ஜீவராஜ்வுக்கு தெரியப்படுத் தப்பட்டதன் மூலம் அதுபற்றிய தகவல் எமக்கும் பரிமாறப் பட்டது.

அவர்கள் அனுப்பிய புகைப்படத்தைப் பார்த்து இக்கல்வெட்டின் முக்கியத்துவத்தைத் தெரிந்து கொண்ட நாம் அக்கல்வெட்டை ஆய்வு செய்வதற்கு தொல்லியற் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியைப் பெற்று யாழ்ப்பாணப் பிராந்திய தொல்லியல் திணைக்கள ஆய்வு உத்தியோகத்தர்களான பா.கபிலன், வி.மணி மாறன் மற்றும் முன்னாள் தொல்லியல் விரிவுரையாளர் கிரிதரன் ஆகியோருட்ன் 30.01.2021 அன்று திருகோ ணமலை சென்றிருந்தோம். இந்நிலையில் திருகோண மலை மாவட்ட வரலாற்றுச் சின்னங்களைக் கண்டறிந்து பாதுகாப்பதில் அதிக அக்கறையுடன் செயற்பட்டுவரும் வைத்திய கலாநிதி த.ஜீவராஜ்டன் வைத்திய கலாநிதி அ.ஸதீஸ்குமார், கிராம உத்தியோகத்தர் நா.சந்திர சேகரம் மற்றும் கோமரன்கடவல பிரதேச செயலக உத்தியோகத்தர் நா.ஜெகராஜ் ஆகியோரும் கல்வெட்டைப் படியெடுக்கும் பணியில் ஆர்வத்துடன் இணைந்து பணியாற்றியமை எமக்கு மனமகிழ்வைத் தந்ததுடன், அச்சமற்ற சூழ்நிலையில் இக்கல்வெட்டைப் படியெடுக்கவும் வாய்ப்பாக இருந்தது.

இக்கல்வெட்டு. திருகோணமலை நகரில் இருந்து ஏறத்தாழ 50 கி.மீ. தொலைவில் திருகோணமலை மாவட்டத்தில் தனி நிர்வாகப் பிரிவாக உள்ள கோமரன் கடவல பிரதேசத்தில் உள்ள முக்கிய வீதியுடன் இணைந் திருக்கும் காட்டுப்பகுதியில் காணப்படுகின்றது. முன்னர் இப்பிரதேசம் கட்டுக்குளப்பற்று நிர்வாகப் பிரிவாக இருந்த போது இந்த இடம் குமரன்கடவை எனவும் அழைக் கப்பட்டு வந்ததாகக் கூறப்படுகின்றது.

இங்குள்ள காட்டுப் பகுதியில் கல்வெட்டுடன் அதன் சமகாலத்திற்குரிய அழிவடைந்த சிவாலயமும், அதன் சுற்றாடலில் அழிவடைந்த கட்டட அத்திவாரங்களும் காணப்படுகின்றன. அவற்றுள், அழிவடைந்த சிவாலயம் அதே நிலையில் தொல்லியல் திணைக்களத்தால் பாதுகாக் கப்பட்டிருக்கின்றது. இவ்வாலயத்திற்கு மிக அருகிலுள்ள சிறு மலையிலேயே கல்வெட்டும் காணப்படுகின்றது. இம்மலையின் மேல் பகுதியில் திருவாசி போன்ற வட்டமும், அதனுடன் இணைந்த ஆவுடையாருடன் கூடிய சிவலிங் கமும் செதுக்கப்பட்டுள்ளன. சிவலிங்கத்திற்கு மேலிருக்கும் வட்டம் சக்தி வழிபாட்டு மரபுக்குரிய சக்கரமாக இருக்க லாம் எனப் பேராசிரியர் பொ.இரகுபதி குறிப்பிடுகின்றார். இக்குறியீடுகளுக்கு கீழே 22 வரிகளில் தமிழ்க் கல்வெட்டுப் பொறிக்கப்பட்டுள்ளது. முதல் இரு வரிகளும், ஏனைய வற்றில் சில சொற்களும் சமஸ்கிருத கிரந்தத்தில் இருக்கின்றன. கல்வெட்டின் வலப்பக்கத்தில் உள்ள பல எழுத்துப் பொறிப்புக்கள் மலையின் மேற்பகுதியில் இருந்து கீழ்நோக்கி வழிந்தோடும் நீரினால் சிதைவடைந்தும் தெளிவற்றும் காணப்படுகின்றன.


இடப்பக்க எழுத்துப் பொறிப்புக்கள் தெளிவாகக் காணப்பட்டதால் கல்வெட்டைப் படியெடுத்தவர்கள் ஆர்வ மிகுதியால் பல சொற்களைப் படித்தனர். ஆயினும் கல்வெட்டின் ஒரு பாகம் தெளிவற்றுக் காணப்பட்டதால் அது கூறும் வரலாற்றின் முழுமையான உள்ளடக்கத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை. இதனால் தென்னாசியா வின் முதன்மைக் கல்வெட்டு அறிஞரும், எனது கலாநிதிப் பட்ட ஆய்வு மேற்பார்வையாளருமான பேராசிரியர் வை.சுப்பராயலுக்கும், தமிழக தொல்லியல் துறையின் முன்னாள் மூத்த கல்வெட்டறிஞரான கலாநிதி சு.இராஜ கோபாலுக்கும் இக்கல்வெட்டுப் படிகளின் புகைப்படங்களை அனுப்பி வைத்தேன். அவர்கள் இருவரும் ஒருவார காலமாக கடும் முயற்சி செய்து கல்வெட்டின் பெரும் பகுதியை வாசித்து அதன் வாசகத்தை தற்போது எமக்கு அனுப்பி வைத்துள்ளனர். அதன் வாசகம் பின்வருமாறு:

1)... ... க்ஷகே ஸ்ரீவிம்(ங்கோ3) நெள ம்ருகே3 விம்ச0தி ப4.

2)... ...ச0க்தி ப்ரதிஷ்டா2ம் கரோத் க்ருதி: ஸ்வஸ்தி ஸ்ரீ ...

3) [த்திகள்?] [ஸ்ரீ குலோ]த்துங்கசோழக் காலிங் கராயநேன் ஈழ[ம

4) ண்டலமான மும்முடி]சோழமண்டலமெறிந்தும் கங்கராஜ காலிங்க வி-



5) ஜயவாகு தே3வற்கு வீராபி4ஷேகம் பண்ணுவித்து அநந்தரம் அஷ்ட-

6) [நேமி பூசை கால]ங்களில் ஆதி3க்ஷேத்ரமாய் ஸ்வயம்பு4வுமாந திருக்கோ-

7) [யிலைஸஸ]யுடைய நாயநாரை தெ3ண்டன் பண்ணி இன்னாய-

8) நாற்கு ச0[கதி] ப்ரதிஷ்டையில்லாமையில் திருக்காமக்கோட்ட நா

9) ச்சியாரை எழுந்தருளிவித்துத் திருப்ரதிஷ்டை பண்ணுவித்து நமக்கு [ப்

10) ராப்தமாய்] வருகிற காலிங்கராயப் பற்றில் மாநாமத்[து] நாட்டில் ல-

11) ச்சிகா[தி]புரம் இதுக்குள் நாலூர் வேச்சர்களுள்ளிட்ட நில-

12) மும் . . .றிதாயாளமு . . .ட்டும் இதில் மேநோக்கிய

13) மரமும் கீநோக்கிய கிணறும் பேருடரை நீக்கி குடிமக்களுள்பட

14) இந்நா[ச்சியார்க்கு திருபப்]படிமாற்றுக்கும் மண்டபக் கொற்று-

15) க்கும்சாந்த்3ராதி3த்தவரையும் செல்லக் கடவதாக ஹஸ்தோதக3கம் ப-

16) ண்ணிக் குடுத்தேன்இ ... லுள்ளாரழிவு படாமல்

17) ...ண்ண...ட்ட..ப் பெறுக்கிவுண்டார்கள் [ஆ]ய்

18) நடத்தவும் இதுக்கு . . . . ண்டாகில் காக்கையும் நாயும்

18) மாக . .. டையார் பி... கெங்கைக் கரையிலாயிரங்

19) குரால் பசுவைக் கொன்றா[ர்பாவங்] கொண்டார்கள் ஆயிரம் ப்3ரா-

20. ஹ்மணரைக் கொன்றார் பாவ[ங் கொண்]டார்கள் மேலொரு ...

21. மாற்றம் விலங்குரைப்பார் ... காலிங்கராயரின்[சொல்படி] ...

22. த்தியஞ் செய்வார் செய்வித்தார் ||...

கி.பி.13 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சேர்ந்த இக்கல் வெட்டுப் பற்றிய தமிழக அறிஞர்களின் வாசிப்பிலிருந்து இலங்கைத் தமிழர் வரலாறு பற்றி இதுவரை அறியப்படாதிருந்த புதிய பல வரலாற்று உண்மைகள் தெரிய வந்துள்ளன. அவை சோழர் ஆட்சியிலிருந்து ஐரோப்பியர் காலம்வரை தமிழர் பிராந்தியங்களின் ஆட்சியுரிமை, நிர்வாக ஒழுங்கு என்பன தனிப் போக்குடன் வளர்ந்தமையைக் கோடிட்டுக் காட்டுவதாக உள்ளன.


மேலும் யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றகாலப் பின்னணி, அது தோன்றிய காலம், தோற்றுவித்த வம்சங்கள் தொடர்பான முன்னைய வரலாற்றுப் பார்வையை மீளாய்வு செய்வதிலும் தெளிவுபடுத்துவதிலும் இக்கல்வெட்டு அதிக முக்கியத்துவம் பெறுகின்றது. இக்கல்வெட்டுப் படியெடுத்த காலப்பகுதியிலேயே இக்கல்வெட்டின் புகைப்படங்களை எனது ஆசிரியர்களான பேராசிரியர் கா.இந்திரபாலா, பேராசிரியர் சி.பத்மநாதன், பேராசிரியர் பொ.இரகுபதி ஆகியோருக்கு அனுப்பி அவர்களின் கருத்துக்களைப் பெற்றிருந்தேன். பேராசிரியர் இரகுபதியால் கல்வெட்டின் சில பாகங்கள் வாசிக்கப்பட்டு அதற்குரிய பொருள் விளக்கத்தையும் அவர் அவ்வப்போது எனக்கு தெரியப்படுத்தி யிருந்தார். இந்நிலையில் தமிழக அறிஞர்களால் பெருமளவு வாசித்து முடிக்கப்பட்ட கல்வெட்டு வாசகத்திற்கு மேற்கூறிய அனைவருமே வழங்கிய கருத்துக்கள், விளக்கங்கள் என்பன இலங்கைத் தமிழர் வரலாற்றிற்குப் புதிய செய்திகளைச் சொல்வதாக உள்ளன.

தென்னிந்தியாவில் நீண்டகால வரலாறு கொண்டிருந்த சோழ அரசு தஞ்சாவூரைத் தலைநகராகக் கொண்டு பத்தாம் நூற்றாண் டிலிருந்து ஒரு பேரரசாக எழுச்சியடைந்த போது அவ்வரசின் செல்வாக்கால் சமகால இலங்கை வரலாற்றிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டன. இதனால் தமிழ் நாட்டு அரச வம்சங்களை வெற்றி கொண்டதன் பின்னர் சோழர் இலங்கைக்கு எதிராகவும் படையெடுத்து வந்தனர். இது முதலாம் பராந்தக சோழன் காலத்தில் ஆரம்பித்துப் பின்னர் இராஜராஜசோழன் காலத்தில் கி.பி. 993 இல் இலங்கையின் வடபகுதி வெற்றி கொள்ளப்பட்டது.

கி.பி. 1012 இல் முதலாம் இராஜேந்திர சோழன் காலத்தில் இலங்கை முழுவதும் வெற்றி கொள்ளப்பட்டு புதிய தலைநகரம் ஜனநாதபுரம் என்ற பெயருடன் பொலநறுவைக்கு மாற்றப்பட்டதாக சோழர்காலச் சான்றுகளால் அறிகின்றோம். சோழரின் 77 ஆண்டுகால நேரடி ஆட்சியில் அவர்களது நிர்வாக முறையே பின்பற்றப்பட்டது. இதன்படி இலங்கை மும்முடிச் சோழ மண்டலம் என்ற பெயரைப் பெற்றதுடன் வளநாடு, நாடு, ஊர் போன்ற நிர்வாக அலகுகளும் இங்கு பின்பற்றப்பட்டன. திருகோண மலையில் மட்டுமே ஐந்து வளநாடுகள் இருந்துள்ளன. அத்துடன் சோழரின் அரசியல், இராணுவ, நிர்வாக நடவடிக்கைகளின் முக்கிய மையமாக திருகோணமலை இருந்ததை அவர்களின் ஆட்சிக்கால ஆதாரங்களும் உறுதிப்படுத்துகின்றன.

பொலநறுவையைத் தலைநகரமாகக் கொண்ட சோழரின் ஆட்சி கி.பி.1070 இல் வீழ்ச்சியடைந்தாலும் சோழரின் ஆதிக்கம், நிர்வாக முறை, பண்பாடு என்பன தமிழர் பிராந்தியங்களில் தொடர்ந்திருக்கலாம் எனக் கருத முடிகின்றது. இதை உறுதிப் படுத்தும் புதிய சான்றாகவே கோமரன்கடவலக் கல்வெட்டுக் காணப்படுகின்றது. பொலநறுவையில் சிங்கள மன்னர்களின் ஆட்சி ஏற்பட்டு ஏறத்தாழ 125 ஆண்டுகளின் பின்னரும் தமிழர் பிராந்தியங்களில் மும்முடிச் சோழ மண்டலம் என்ற நிர்வாகப் பெயரும் தமிழ் நிர்வாக முறையும் இருந்தன என்ற புதிய செய்தியை இக்கல்வெட்டுத் தருகின்றது.

கல்வெட்டுப் பொறிக்கப்பட்ட காலத்தில் இப்பகுதியில், சோழர் ஆட்சிக்குப் பொறுப்பாக மூன்றாம் குலோத்துங்க சோழனது படைத்தளபதிகளுள் ஒருவனான அல்லது அரச பிரதிநிதியான குலோத்துங்க சோழக் காலிங்கராயன் இருந்துள்ளான் என்ற புதிய செய்தியும் தெரிய வருகின்றது. மேலும் இவனே கங்கரா ஜகாலிங்க விஜயபாகுவிற்கு (கலிங்கமாகனுக்கு) பட்டாபிஷேகம் செய்தான் என்ற அதி முக்கிய புதிய வரலாற்றுச் செய்தியும் இக்கல்வெட்டிலேயே முதல் முறையாகச் சொல்லப்பட்டுள்ளது.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் குழு அமெரிக்கா விஜயம். தமிழருக்கு நன்மை பயக்குமா வியாசரே?

**சுகிர்தன் சுன்னாகம்**

**நான் நண்பர்களை நம்பவா? அல்லது குடும்பத்தை நம்பவா? வியாசரே பதில் சொல்லுங்கள்?**

உன் நண்பனைப் பற்றிக்கூறு. நான் உன்னைப் பற்றிக் கூறுகிறேன் என்றொரு பொன்மொழியுண்டு. அதில் உங்களுடைய நண்பர்களைப் பற்றிய உங்கள் வாக்கு மூலம் எப்பேற்பட்டது என்பதை முதலில் சோதிக்க வேண்டும்.

ஒருவரிடம் துரோகம் செய்த நண்பர்கள் பட்டியல் எப்போதும் இருக்கும்.

ஆனால் தனக்கு தனது குடும்பம் துரோகம் செய்துவிட்டது என்ற பட்டியல் யாரிடமும் இருக்காது. முடிவை உங்கள் கைகளிலேயே விட்டு விடுகிறேனே.

**நிதி யாழ்ப்பாணம்**

**மீண்டும் தலைதூக்கத் தொடங்கி விட்டதே கொரோனா என்ன செய்யப் போகிறோம் நாம்?**

கொரோனா இப்போதைக்கு அழியும் என நாம் நினைக்க வேண்டாம். ஏனென்றால் அது பல புதிய திரிபுகளை உருவாக்கி மனித குலத்தை தீவிரமாகத் தாக்கத் தொடங்கி விட்டது.

இயற்கைக்குப் பயந்து பயபக்தியுடன் நடக்காததன் விளைவுகளே இவை.

விஞ்ஞானத்தின் வளர்ச்சி எப்பேற்பட்டது என்பதை நிரூபிக்க முற்பட்டதன் விளைவு இன்று இயற்கையினால் மனிதகுலம் அழிந்து கொண்டிருக்கின்றது.

**இதழினி திருநாவலூர்**

**உயர்ந்த மனிதன் எவ்வாறு செயற்படுவான் வியாசரே?**

கோடீஸ்வரரின் வீட்டில் வேலை செய்யும் ஒரு ஏழை தனது வேலையைச் செய்து கொண்டிருக்கிறான்.

அந்த வீட்டிற்குள் இருந்து அலறல் சத்தம். திகைத்து எழுந்தவர் சுற்றும் முற்றும் பார்க்கிறார். யாரும் இல்லை. மீண்டும் அலறல் சத்தம்.

எது நடந்தாலும் நடக்கட்டும் என நினைத்தவர் உள்ளே ஓடிப் போகிறார்.

உள்ளே ஒரு நாகபாம்பு வீட்டு எஜமானின் பிள்ளையை குறிவைத்துக் கொண்டிருக்கின்றது. பாய்ந்து ஓடி பிள்ளையை காப்பாற்றி விடுகிறார்.

அலறல் சத்தம் கேட்டு ஓடி வந்த எஜமான் அந்த ஏழையின் கையில் தன் பிள்ளை இருப்பதைக் கண்டு ஆத்திரமடைகின்றான். அவரின் கன்னத்தில் அறைகிறார்.

அந்த ஏழை எதுவும் பேசாது நகர்ந்து செல்கிறான். உள்ளே போன எஜமான் நாகபாம்பினைக் கண்டு திகைத்து நிற்கின்றார்.




அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
**021 567 1532**
என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்

**தாரு வதிரி**

**தாய், தந்தையை மதிக்காமல் செயற்படும் பிள்ளைகளின் நிலை எப்படிப்பட்டது வியாசரே?**

இன்று நான் தாய் தந்தையரை மதிக்கவில்லை. இப்போது நான் பெற்றவருக்கு மகனாய் இருக்கிறேன்.

நாளை என் பிள்ளை என்னை மதிக்காமல் விடும் போது நான் பெற்றோராக இருப்பேன்.

அப்போதே அதன் வலி புரியும்.

சிறுவயதில் தந்தை உன்னைப் பள்ளிக்கூடம் கூட்டிச் செல்லும் போது நீ தந்தையின் கைப்பிடியை விடாமல் அழுதிருப்பாய்.

அதே உன் தந்தை வயதானாதும் நீ அவரை முதியோர் இல்லத்தில் விட்டுச் செல்வாயாயின் அவர் மனம் படும் பாட்டை உணர்ந்து கொள்.

இதுவே வாழ்க்கை. தாய் தந்தையை மதிப்பதே நல்ல பிள்ளைகளுக்கு அழகு.

**சுதன் குப்பிழான்**

**மாவீரர் நாள் அனுஷ்டிப்பிற்கு வழங்கப் பட்ட தடைபற்றி?**

எங்கு அடக்குமுறை பிரயோகிக்கப்படுகிறதோ அங்கு வெடித்தெழுதல் நிகழ்ந்தே தீரும்.

இதையே ஆட்சியாளர்கள் தற்போது செய்து வருகின்றனர். இது விடுதலைப் புலிகளை மீள் உருவாக்கம் செய்ய என்ற எண்ணக் கருவை முதலில் நிறுத்த வேண்டும். நாட்டுக்காக போராடி மடிந்தவர்களின் தாய், தந்தை, உறவினர் இந்த மண்ணில் தான் இருக்கின்றனர்.

அவர்களை அடக்கி ஒடுக்க வேண்டிய தேவை ஏதும் இல்லையே.



மாவீரர் நாள் அனுஷ்டிப்பிற்கு வழங்கப் பட்ட தடைபற்றி?

**சேந்து மந்துவில்**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் குழு அமெரிக்கா விஜயம். தமிழருக்கு நன்மை பயக்குமா வியாசரே?**

தம்பி சேந்து மேற்குப் பக்கம் சூரியன் உதிக்கும் என்று யாரும் உங்களிடம் கூறினால் நம்புவீர்களா என்ன.

உடனே கோபம் வந்து நான்கு கெட்ட வார்த்தையை உமிழ்ந்து தள்ளிவிடுவீர்களே. இதுவும் அதே போலத்தான்.

தமிழினத்துக்குத் தீர்வைப் பெற்றுத் தரக்கூடிய பொன்னான காலங்களை விட்டு விட்டு இப்போது அமெரிக்காவுக்குப் போய் பயன் என்ன. கடுப்புத்தான் வருகிறது.

**தமிழ் யாழ்ப்பாணம்**

**ஆட்சியாளர்களை தேரர்களே தூற்றத் தொடங்கி விட்டனரே. இதன் முடிவு எங்கு போய் முடியும்?**

இந்த ஆட்சியை தமிழினம் கொண்டு வர வில்லை.

இதற்கு தமிழினம் உதவி செய்யவும் இல்லை.

மூன்றில் இரண்டு எனும் பெரும்பான்மையுடன் நாம் ஆட்சியமைக்க சிறுபான்மையின் உதவி ஏதும் தேவையில்லை என இறுமாப்புக்காட்டி ஆட்சி அமைத்தவர்கள். அது அவர்களுடைய பிரச்சினை நாம் வீணாய் ரென்சன் ஆகாமல் வேடிக்கை பார்ப்போமே.

அதுகூட ஒருவகையில் சுகம் தானே.

**சிவன் வதிரி**

**தமிழும் தமிழினமும் அழிந்து கொண்டு வருகிறதே. என்ன செய்ய?**

என்ன செய்வது. நான் எனது ஊரில் எனது அம்மாவின் அருகில்தான் இருப்பேன்.

இரண்டு பிள்ளைகளுக்கு மேல் பெற மாட்டேன்.

நல்ல வேலை... சொத்துச் சேர்த்து பின்னர் இரண்டையும் படிக்க வைத்து வேலைக்கு அனுப்பி அவர்களையும் சொத்துச் சேர்க்கச் செய்வேன்.

இது தான் எமது சிந்தனை. ஆனால் பேரினவாதம் தன் வீடு, தன் சொந்தம், தன் ஊர் என்று பாராது தனது குடிப்பரம்பலை குடியேற்றத் திட்டங்களினூடே விஸ்தரித்துக் கொண்டே இருக்கின்றது.

குடியேற்றத்திற்கு நம்மில் யார் தயார் என்று சொல்லுங்கள் பார்ப்போம்.

## தமிழும் அவளும்



நிலவு பூத்த சிறு மலர்
நினைவு தந்த புது மலர்
கனவு சுமந்த இனியவள்
காலம் ஈர்ந்த குலமகன்
கயல்விழி காட்டும் கண்ணழகாள்
கன்னக்குழி விழும் புன்னகையாள்
வண்ணத்தமிழ் வனப்பழகாள்
வஞ்சம் தெரியாத வடிவழகாள்
அஞ்சும் போதில் அணைத்திடுவாள்
அகவை ஐந்தில் கால் பதிக்கும்
என் அன்பிற்கினிய மழலையாள்

க.நாகராசா, சண்டிலிப்பாய்.

## கனலின் கருவாய் எழுவாய்

இல்லை என்று நீ சொல்லும் போதில்
நீ இருப்பதை உணர்வாய் தம்பி- உன்
இருப்பினில் ஆற்றல்கள் இருப்பதெல்லாம்
உயர் செயல் திறனை தான் நம்பி

வல்லமை தந்த அன்னை இயற்கை
வாரி வழங்குவதெல்லாம்- நாம்
அல்லல்கள் நீங்க உழைப்பதற்கே இந்த
உண்மையை உணர்ந்தே உயர்வாய்

வெற்றி என்னும் கனியினை பறிக்கும்
வீரியம் உன்னை தழுவும்- மொட்டு
மலராய் மலர்ந்து காயாகி ஒருநாள்
கனியாக மாற்றம் நிகழும்- இந்த

இயற்கையின் நியம நிகழ்வினை பார்த்து
இதயத்தைப் பக்குவப்படுத்து- என்றும்
இரவு பகல் பாரா உழைப்பினில் மூழ்கு
இல்லை என்பதை விடுத்து

சத்தியம் தர்ம நீதிகள் சொன்ன
உத்தமர் கூற்றை அறிவாய்-மன
துணிவின் துணையின்
நல் அறிவின் வழியே
கடமைகள் ஆயிரம் புரிவாய்

ஆனையூர்க் கவிராயர்

## இயற்கையும் இறைவனும்



முப்பது நாளில் வானில் முழுநிலவு தவழ்கின்றது
பரிதியின் பரிவினாலே இங்கு பகலிரவு திகழ்கின்றது
எப்போதும் எதுவரினும் அங்கு தப்பாமலே ஒழுங்கு உண்டு
கண்ணுக்கும் கருவிக்கும் காட்சியாகா நுண்மங்கள் பல்கிப் பெருகி
மண்ணுலகில் உயிர்கள் மடிவதுண்டு ஆழிப்பேரலைகளும் ஆர்ப்பரித்தே
அழிவுகள் பலவும் செய்வதுண்டு அறிவையிழந்து ஆணவம் தலைக்கேறிய
அரசியலாரும் மனிதரை அழிப்பதுண்டு கடவுள் என்பது இல்லாத பொருள்
கருத்தழிந்து போய் கருத்தியலும் கூறிடுவார் காரணகாரியம் எதுவும் கண்டிடாது
கண்டதே காட்சி கொண்டதே கோலமாய் கடவுளையும் இழித்துரைப்பார்
இவர்களின் பார்வையில் அவர்களும் அவர்களின் பார்வையில் இவர்களும்
அதேதான் பைத்தியங்கள் விஞ்ஞானிகளையே அப்படிச் சொன்ன
விந்தையான மாந்தரல்லவா? தென்புலத்தார் தெய்வம் இவற்றையே
தெய்வப் புலவரும் முதலில் வைத்தார் அருவமாய் மறைந்திருந்து ஆட்டுகின்ற
அசாதாரண விடயங்களும் நிறைய உண்டு அற்பமான அணுக்களுக்குள்ளும்
மிக செப்பமான ஓட்டம் உண்டு அண்டங்கள் பல கடந்த அண்டங்கள்
அங்கெல்லாம் நேர்த்தியான நகர்வுகள் காலதேய வர்த்தமானங்கள்
என்பன மனித கணக்குகளுக்குள்ளே அடங்குவதில்லை
இயற்கையான ஒழுங்கு விதிகள் இடையிடையே இடர்கள் புகுந்து
செயற்கையாக மீறும்போது சேர்ந்து வருவது துன்பம் தானே

வாணியழகன், முரசுமோட்டை

## மௌனத்தின் தேடல்- 537



## கொதிக்கும் உள்ளம்

உலகில் நாம் சிறுவர் தினத்தை
எத்தனை முறை உணர்ச்சிபூர்வமாய்
கொண்டாடியும் கண்ட பயனென்ன
சிறுமிகளை இப்படித் தாக்கும் சில ஆணாதிக்கம்
கொண்டவர்களின் கொடுஞ்செயல்
உலகில் இன்னும் குறையவில்லையே
அதைக்கண்டு நம் உள்ளம்
நெருப்பாய்க் கொதிக்குதடா

சுப்பிரமணியம் ஜெயரூபன்
பருத்தித்துறை.

## காமவேட்கை

சின்னஞ்சிறு வயதினிலே
சிட்டுக்குருவியாய் சிறகடித்து பறக்க வேண்டிய நீ
சீர்கெட்ட இப்பூமிதனிலே
பெண்மையாய் வந்துதித்ததனாலோ
காம இச்சையுடன் காலமெல்லாம் காத்திருக்கும்
காமதேவன் கைப்பிடிதனில் சிறைப்பட்டு
சிறகொடிந்த பறவையாய்
சிதைக்கப்பட்டது தான் ஏனோ?

ஆ.பாலமதுஜா
யா/ மெதடிஸ்த பெண்கள்
உயர்தரப் பாடசாலை

## ஒளியும் இருளும்

உண்மை ஒளியில் நடக்கும் நிகழ்வை
வெண்மையான சுவர் பிரதிபலிக்கும்
கருமையான நிழலாக என சாட்சியாக!
பொய்மை இருளில் நடக்கும் நிகழ்வை
பிரதிபலிக்க உண்மை ஒளியை பாய்ச்சி
நிதர்ஷன காட்சி வெளிப்படும்
உண்மை ஒளி அதுவே இயற்கையின் நீதி
பொய்மை இருள் அதுவே செயற்கையின் அநீதி

சி.சுகிர்தமலர்
உரும்பிராய்.

## வன்கொடுமை

அழகான திருமேனி
தணலானதோ பெண்ணே!
அதிகார வர்க்கத்தின்
சிறையானதோ
தளராத பெண் உள்ளம்
சருகானதோ
சதிகாரக் கூட்டத்திற்கு
இரையானதோ
கல்யாணம் நீ செய்து
கலியானதோ
கயவர்கள் உள்ளம்
கல்லானதோ
வடிவான வதனத்தில்
சதிராடுதோ
வகையான வன்கொடுமை
கொலையானதோ

கும்பவாழியன்
உடுப்பிட்டி

## மௌனத்தின் தேடல்- 538



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சாங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## நம்பினேன் உன்னை

நம்பினேன் உன்னை நம்பினேன் நம்பியே வந்தேன் உன்னிடம்
நீயோ வஞ்சகம் செய்கிறாய் மெய் அன்பை மறந்து
எந்நேரமும் கொடுமை செய்கிறாய்
இந்நிலை மாறிட வேண்டாத தெய்வமில்லை
ஆனாலும் மாறவில்லை என் வாழ்க்கைக் கோலம்

தர்ஷிகன், கொக்குவில்

## குடியாதே குடியாதே!


குடியாதே குடியாதே என்று குளறினேன்
குத்துகிறாய் வாயில்
அடியாதே அடியாதே என அலறுகிறேன் நான்
அடியை நிறுத்துகிறாய் இல்லை
என் செய்வேன் இறைவா,

சிவாஞ்சலி, அச்சுவேலி

# நாடற்றவர்களின் கடவுச்சீட்டு

**ஓட்டி அறைக்கு வேகமாக ஓடி வந்த நகுலன், செய்மதித் தொலை பேசியை எடுத்தான். வேகமாக நம்பரை அழுத்தினான். "சிலிண்டர் வெடிச்சு போர்ட்டுக்குள்ள நெருப்பு பிடிச்சுதடா, குருவிய அனுப்பு"**

## வலி சொல்லும் தொடர்... 08




கழுத்து அறுந்த பிறகும், இரண்டொரு தடவை துடித்த கோழியை கொத்தாகப் பிடித்து, வழிந்து கொண்டிருந்த மிகுதி ரத்தத்தை படகின் கரைகளில் பிதுக்கித் தெளித்தான்.

கடலுக்குள் படகு இறங்கியது. இந்த நூற்றாண்டின் துயர் சுமந்த பல்லாயிரக்கணக்கான அகதிப் படகுகளின்எண்ணிக்கையில்மேலும் ஒன்று சேர்ந்தது. உலகின் பேரதிசயம் மிக்க மக்கள் கூட்டமொன்றின் இன்னொரு சாகசப் பயணத்தை, நட்சத்திரங்கள் கணக்கு போட்டு தங்களுக்குள் சிரித்துக்கொண்டன.

சாப்பாட்டுக்கடை முதலாளி நீதனுக்குப் படகில் பெரிதாக அறிமுகம் தேவையாக இருக்கவில்லை. போகூரிலிருந்து ஏறிய பத்து பதினைந்து பேர் அடிக்கடி வந்து நீதனிடம் பேசிப்போனார்கள். கடத்தப்பட்ட செய்தியையும் துருவிப் பார்த்தார் கள்.

நீதன் தனிமையை விரும்பினான். ஓட்டியின் அறைக்குப் பக்கத்திலேயே ஒரு பெட்டியில் அமர்ந்திருந்து கடலைப் பார்த்துக் கொண்டிருந்தான். அனீஸாவும் லியோவும் தூங்கியிருப்பார்களா? என்று கடிகாரத்தைப் பார்த்தான். பிறகு, உள்ளங்கையை நிலவொளியில் பார்த்தான். கடை ஞாபகம் வந்தது. திரும்பவும் கண்கள் நிறைந்தன.

சிறிது நேரத்தில், பன்றி வறுவல் பரிமாறப்பட்டது. படகின் மேல் தளத்தில் சிலர் வாந்தி எடுக்கும் சத்தம் கேட்டது. கரிசனையோடு காத்திருந்து சாப்பிட்ட சிலர், மலசல கூடத்துக்கு செல்வதற்காக வரிசையில் நின்றனர். வரிசை நீள நீள, பிளாஸ்ரிக் வாளியை கடலில் எறிந்து, சிலர் தண்ணீர் அள்ளிக் கொடுத்து, உதவினர்.

எதுவும் சாப்பிடாமல் தனியாக இருந்த நீதனுக்கு, தேநீர் கொடுப்பதற்காக வந்த சிவந்த இளைஞன் தன்னைக் குயிலன் என்று அறிமுகப்படுத்தினான். அருகிலேயே அவனுடைய மனைவி குழந்தையோடு நின்றுகொண்டிருந்தாள். படகுப் பயணத்தில் நம்பிக்கையோடு பேசக்கூடியவர்களாக, அவர்களது சுபாவம் நீதனை ஈர்த்தது.

அவர்களது அருகாமை நீதனுக்குள் அனிஸாவையும் லியோவையும் திரும்பத் திரும்பக் கொண்டு வந்தது. லியோவின் பிறந்தநாள் புகைப்படத்தை எடுத்து குயிலனுக்குக் காண்பித்தான். அவனுடைய மனைவி ஆர்வத்தோடு வாங்கிப் பார்த்தாள். நீதனின் கதை, அவர்கள் இருவருக்கும் அவனோடு சீக்கிரம் நெருக்கமாகிவிட்டதைப் போன்ற உணர்வைக் கொடுத்தது.

"கவலைப்படாதேங்கோ அண்ணா, நீங்கள் போய், அவயள்க் கூப்பிடலாம்." குயிலனின் மனைவி சொன்ன வார்த்தைகள்தான், நீதன் வாழ்வில் இப்போதைக்கு இருக்கக்கூடிய ஒரே நம்பிக்கை.

குயிலனின் குழந்தையைக் கடல் காற்று தீண்டிவிடாமல் பஞ்சு போன்ற ஆடையால் மூடியிருந்தார்கள். இடைவெளிவிட்ட துளைகளினால், அது தன் பிஞ்சுக்கைகளை அசைத்து அசைத்து, காற்றோடு விளையாடியது.

"படகில் ஏறியவுடன் பழக்கமில்லாத ஆட்டத்துக்கு அழத் தொடங்கிய குழந்தை, இப்போது பழகிவிட்டது" என்றான் குயிலன். "ஆமாம்" என்பதுபோல அது தலையசைத்துச் சிரித்தது. பன்றி வறுவல் சாப்பிட்டு பேதி போனவர்கள், படகின் அடியில் சுருண்டு போய்க் கிடந்தார்கள். சிலருக்கு குளுக்கோஸ் கரைத்தும் கொடுத்திருந்தார்கள்.

தூரத்தில் இந்தோனேசிய மீன்பிடி படகுகளில் லாந்தர் வெளிச்சங்கள் கசங்கித் தெரிந்தன. பெரிய சரக்குக் கப்பல்களின் தொலைதூர மின் வெளிச்சங்கள், புள்ளிகளாகத் தோன்றி மறைந்தன.

நேரம் நள்ளிரவைத் தாண்டியிருந்தது. இருளைக் கிழித்துக் கொண்டு, தூரத்தில் வெள்ளி விழுந்ததை நகுலன் கண்டான். கழுத்தறுந்த கோழியின் கண்கள் ஒருகணம் நினைவில் வந்துபோனது. நேரத்தைப் பார்த்தான். 12:20 காண்பித்தது. போத்தலை எடுத்து தண்ணீரால் வாயை கொப்பளித்தான்.

நினைவில் வந்த அகாலத்தை மறப்பதற்குள், படகின் பின் பக்கத்தில் பெரும் சத்தத்தோடு ஏதோ வெடித்துச் சிதறியது. அடர்ந்த இருள், படகைப் பார்த்துக் கைகொட்டிச் சிரித்தது.

படகின் அடியிலிருந்தவர்கள் குளறியடித்துக்கொண்டு எழுந்தார்கள். மேல் தளத்திலிருந்தவர்கள் முன் அணியத்தின் பக்கமாகப் பாய்ந்து பாய்ந்து இறங்கினார்கள்.

வெடித்த நெருப்பு படகின் பின்பக்கமாகக் கிடந்த எண்ணெய் பரல்களில் பற்றத் தொடங்கியது. எல்லோரும் குளறிய சத்தத்தில் படகில் என்ன நடந்தது என்று பலருக்குப் புரியவே இல்லை.

ஓட்டி அறையிலிருந்து வெளியில் பாய்ந்த நகுலன், சிவப்பு நிறத் தீயணைப்பு சிலிண்டரைப் பிடுங்கிக்கொண்டு - எல்லோரையும் விலத்தியபடி - பின்பக்கம் ஓடினான். சுவாலைகளின் மீது பீய்ச்சி அடித்தான். சிலர் நகுலனோடு போய் நின்று, கையில் கிடைத்த வாளியால், கடல் தண்ணீரை அள்ளி நெருப்பில் எறிந்தார்கள்.

தீர்மானம் செய்துவிட்ட தீயின் கங்குகள், எல்லோரையும் பார்த்துச் சிரித்தன. தன் பசியை அறியாதவர்களை எந்தப் பரிவுமின்றி பாய்ந்து துரத்தத் தயாரானது. எறிந்த தண்ணீருக்கு ஓரிரு கணங்கள் பதுங்கிய நெருப்பு, மீண்டும் பேருயரத்துக்கு எழுந்து தன் பயங்கரமான நாக்குகளை வெளித் தள்ளியபடி எரிந்தது. எல்லோரும் அணியத்தின் பக்கமாக ஓடி வந்ததால், படகின் முன் மூலை தாண்டு எழுந்தது. முன்னும் பின்னுமாக படகு ஆடியது. இன்ஜின் சத்தம் விக்கத் தொடங்கியது.

ஒவ்வொரு ஆட்டத்துக்கும் தண்ணீர் பெருமளவுக்கு உள்ளே பாய்ந்தது. பார்த்துக்கொண்டிருக்க படகின் பின்புறமாக இன்னொரு சிலிண்டரும் வெடித்து வானில் பறந்தது. அது போன வேகத்துக்கு படகிலிருந்தவர்கள் பெருங்குரலெடுத்து குளறினார்கள்.


ஓட்டி அறைக்கு வேகமாக ஓடி வந்த நகுலன், செய்மதித் தொலைபேசியை எடுத்தான். வேகமாக நம்பரை அழுத்தினான். "சிலிண்டர் வெடிச்சு போர்ட்டுக்குள்ள நெருப்பு பிடிச்சுதடா, குருவிய அனுப்பு" இன்னும் கொஞ்ச நேரத்தில ஓராவை உடைக்கப்போகுது, கெதியா அனுப்பு"கருகிய படகின் மூச்சு கடலெங்கும் நாறியது.

"மெனக்கெட நேரமில்ல, குருவிய கெதியா அனுப்பு"அருகில் எந்த மீன்பிடிப்படகையும் காணவில்லை. ஆங்காங்கே தெரிந்த சரக்குக் கப்பல்களும் இப்போது படகின் நெருப்பு வெளிச்சத்தில் தெரியவில்லை.

(அடுத்த வாரம் தொடரும்)

# கடல் புறா

## வீட்டுப் புறா! காட்டுப் புறா! கடல்புறா!




உள்ள நிலையை ஒரு விநாடியில் எடைபோட்ட அமீர் சாட்டையால் கையை நெற்றிக்காக இருமுறை உயர்த்தி எதிரேயிருந்த வீரர் தலைவனை இருமுறை வணங்கினான். அவனிடம் தனக்குள்ள பரீட்சயத்தைக் காட்டப் புன்முறுவலொன்றையும் முகத்தில் படரவிட்டுக் கொண்டான்.

அவன் புன்முறுவலை எதிரேயிருந்த காவலர் தலைவனும் கவனித்தானானாலும் அவன் இதழ்களில் பதிலுக்குப் புன்முறுவலேதும் விளையவில்லை. முக்கால் முகத்தைக் கவசத்தால் மூடியிருந்த அந்த வீரன் அமீரைக் கூர்ந்து ஒருமுறை நோக்கிய பின்பு, தன் புரவியை நடத்திக் கொண்டு இருமுறை வண்டியை வலம் வந்தான். தன் வாளின் நுனியால் இரண்டொரு குடங்களைத் தட்டவும் செய்தான். குடங்களிரண்டும் நீர் நிரம்பியிருந்ததால் 'தட்தட்' என்று ஏற்பட்ட சத்தம் பெரும் அமுதமாக அமீரின் இதயத்தில் பாய்ந்தது.

அதற்கு மேல் அபாயம் நீங்கி விட்டதாக நினைத்த அமீர் சற்றுத் தைரியத்துடன் பெருமூச்சும் விட்டான். ஆனால் நீர்க்குடங்களின் சப்தங்களைக் கேட்ட காவலர் தலைவன் திருப்தியடைந்ததாகத் தெரியவில்லை. மீண்டும் ஒருமுறை வண்டியைச் சுற்றி வந்தான்.

இம்முறை பின்புறம் வந்ததும் அங்கு உட்கார்ந்திருந்த இரு அடிமைகளையும் நோக்கிவிட்டு, அவ்விருவரில் ஒருவரை, "யார் நீ?" என்று கேட்டு அடுத்த விநாடி என்ன நடக்குமென்று மற்றவர்கள் யோசிக்கு முன்பே தன் வாளின் நுனியால் ஒருவனது முக்காட்டைச் சரேலெனத் தூக்கினான்.

இளையபல்லவன் ஈட்டி விழிகள் காவலன் கண்களுடன் திடீரெனக் கலந்தன. கலந்த கண்கள் அதிர்ச்சியடைந்தன. அந்த இருவரும் ஒருவரையொருவர் அந்த இடத்தில் எதிர்பார்க்கவேயில்லை.

### சாதனை

பாலூர்ப் பெருந்துறையின் கீழ்க் கோட்டை வாசல் காவலர் தலைவன் உடையில் மறைந்து புரவி மேல் ஆரோகணித்து இராட்சத சொரூபமாய் விளங்கிய மன்னன் பீமனுடைய பெரு விழிகளைக் கண்டதால் கருணாகர பல்லவனும், நீர்க்குடங்கள் நிரம்பிய பின்புற வண்டியில் அடிமை வேடத்தில் இளையபல்லவன் காட்சியளித்ததால் தென் கலிங்கத்து பீமனும் திகைப்பின் எல்லையை ஒரே சமயத்தில் அடைந்தார்களானாலும், அந்தத் திகைப்பு பீமனைவிட கருணாகர பல்லவனுக்கே அதிகமாய் இருந்தது. தன் கைவசமிருந்து பறந்துவிட்ட பறவைகள் தப்பும் ஒரே மார்க்கம் கிழக்குக் கோட்டை வாசல்தான் என்பதைச் சந்தேகமறத் தீர்மானித்துக் கொண்டதாலும், அப்படித் தப்புவதானால் அவர்கள் சந்திரன் உதயமாகு முன்புள்ள இருட்டிலேயே தப்ப வேண்டுமென்பதையும் ஊகித்துக் கொண்டதாலும் காவலரையும் நம்பாமல் எதிரிகள் எப்படி வருவார்களென்பதை எதிர்பார்த்த வண்ணம் காவலர் தலைவன் உடையணிந்து தானே வண்டிகளை எட்டு நாழிகைகள் வரை பரிசோதிப்பதென முடிவு கட்டிக் காவல் புரிந்த தென்கலிங்கத்துக் காவலனுக்கு இளையபல்லவனைக் கண்டதும் அதிர்ச்சி ஏற்பட்டாலும் முன்கூட்டி எதிர்பார்த்த காரணத்தால் அதிர்ச்சி சற்றுக் குறைவாக இருந்தது.

ஆனால் தங்களைப் பிடிக்க பீமன் காவலன் உடையணிந்து காவல் புரியவும் முனைவானென்பதைச் சற்றும் எதிர்பாராத இளையபல்லவன் அவனைத் தன் எதிரே கண்டதும் அளவுக்கு மீறிய வியப்பும் அதிர்ச்சியுமே அடைந்தான்.

அதுமட்டுமல்ல. இரண்டு தடவை வண்டியைச் சுற்றி வரும் வரை பீமனை அமீர் எப்படி அடையாளம் கண்டு கொள்ளாமல் இருந்தான் என்பதும் சட்டென்று புரியாது போகவே அதிர்ச்சி சற்று எல்லை கடந்ததாகவே இருந்தது.

ஆனால் அடுத்த விநாடி பீமன் தலையில் யவனர்களின் உலோகக் கவசத்தை அணிந்திருந்ததையும் அதன் முகப்பு மூடியை முகத்தை முக்கால் வாசி மறைக்கும்படி இழுத்துத் தாழ்த்தியிருந்ததால் நேர்ப்பார்வைக்கு முகத்தின் கீழ்ப்பாகம் மட்டுமே தெரியுமாதலால் யாரும் பீமனைச் சட்டென்று புரிந்துகொள்ள முடியாதென்பதையும் உணர்ந்து கொண்ட இளையபல்லவன், ஆபத்தான அந்தச் சமயத்திலும் அதிர்ச்சி மனத்தைக் கவ்விய அந்த நேரத்திலும், தென்கலிங்கத்து மன்னன் திறனை மனத்துக்குள் பாராட்டவே செய்தான். பீமன் புரவி மேலிருந்து தன்னைக் கீழ்ப்புறம் கவனித்ததாலும் தானும் திடீரெனத் தலையைத் தூக்கியதாலுமே பீமனை யாரெனத் தான் புரிந்துகொள்ள முடிந்ததென்பதைச் சந்தேகமற உணர்ந்த இளையபல்லவன் சரேலெனத் தன் வாளை வெகு வேகமாக உறையிலிருந்து உருவினான்.

அந்தச் சமயத்தில் மட்டும் பீமன் ஆணவத்துக்கு இடம் கொடுக்காமல் நடந்து கொண்டிருந்தால் அடுத்த நாள் உதயத்தை அந்த வண்டியிலிருந்த யாரும் பார்த்திருக்க மாட்டார்கள். ஆனால் இரத்தத்தில் இயற்கையாக ஊறிவிட்ட மமதை பீமனைப் பலமாக நகைக்கச் செய்தது.

முதலில் நகைத்தவன் அத்துடன் நிற்காமல் காவல் பலத்தால் ஏற்பட்ட துணிவாலும் அசட்டையாலும் உடனே நடவடிக்கை துவங்காமல், "அடிமை வேடத்தில் படைத் தலைவரா?" என்று இரைந்து கூறி இடி இடியென இன்னொரு முறையும் நகைத்தான்.

மூன்றாம் முறை அவன் நகைக்கவில்லை. காளைகள் கனவேகத்தில் திடீரென எதிரேயிருந்த குதிரைப் படை வரிசையை நோக்கிப் பாய்ந்தன. அடுத்த விநாடி அந்தக் கோட்டை வாயிலைப் பெரும் குழப்பம் சூழ்ந்து கொண்டது.

சிரிப்பினால் விளைந்த விபரீதங்கள் பல. புராணங்களில் அத்தாட்சி அவற்றுக்கு நிரம்ப உண்டு. அன்று திரௌபதி சிரித்ததால் விளைந்தது மகாபாரதம். இன்று பீமன் சிரித்ததால் விளைந்தது வேறொரு விபரீதம். கலிங்கத்தின் பிற்கால அவல நிலைக்கு அன்றே அடிகோலியது பீமன் சிரிப்பு.

எந்த விநாடியிலும் தாங்கள் வளைக்கப்படலாமென்பதை அறிந்து இந்திரியங்களை ஊசி முனையில் நிறுத்திக்கொண்டிருந்த அமீர் பின்னால் திடீரென ஏற்பட்ட சிரிப்பைக் கேட்டதும் தன் இடையிலிருந்த குறுவாள்களை மின்னல் வேகத்தில் எடுத்து விர்விர் என்று எதிரே வழி மறித்து நின்ற குதிரை வீரர்கள் மீது வீசிவிட்டு அதேசமயத்தில் சாட்டையையும் பளீர் பளீரெனக் காளைகளின் முதுகில் வெகு வேகமாகத் தாக்கினான்.

எண்ணிக்கையின் அதிகத்தாலும் காவலை யாரும் பிளக்க முடியாதென்ற சித்தத்தாலும் பலத்த எச்சரிக்கையிலும் சிறிது அசிரத்தையைக் கலந்து கொண்ட குதிரை வீரர் வரிசை, கண்ணிமைக்கும் வேகத்தில் அமீர் வீசிய குறு வாள்களால் சட்டென்று பிளவு கொடுத்தது. புரவிகளிலிருந்து சட்டென்று நிலத்தில் மூன்று வீரர்கள் விழுவதற்கும் குறுவாளால் தாக்கப்பட்ட புரவியொன்று வீரிட்டுக் குறுக்கே ஓடி வரிசையைக் கலைப்பதற்கும் வண்டிக் காளைகள் திடீரென வாயு வேகத்தில் பறப்பதற்கும் அவகாசம் சரியாக இருக்கவே எதிர் வரிசை மின்னல் வேகத்தில் பிளந்தது.

அப்படிப் புரவிகள் வரிசை பிளந்த அதே விநாடியில், "மடக்குங்கள் வண்டியை" என்று பிரமாண்டமாக எழுந்த பீமன் கூச்சல் அந்தக் கோட்டைப் பிரதேசத்தில் பலமாக எதிரொலி செய்யவே இருபது, முப்பது வீரர்கள் வாள்களுடனும், ஈட்டிகளுடனும் வண்டியின் பின்புறம் கணவேகத்தில் நெருங்கினார்கள்.

வேல்கள் வண்டியை நோக்கிப் பறந்தன. ஆனால் வண்டி, வேல்களைவிட வேகமாகப் பாதையில் பறந்தது. காளைகளைவிடப் புரவிகள் வேகம் வாய்ந்தவைதான். காவல் செய்த புரவிப் படைக்குச் சுதந்திரம் இருந்தால். அவை அந்தக் காளை மாட்டு நீர்க்குட வண்டியைத் துரத்தி கணநேரத்தில் மடக்கியிருக்க முடியும்.

ஆனால் முடியாத ஒரு பெருந்தடை அவர்களுக்கு எதிரே நின்றது. சோழ நாட்டு வீரம் எப்படியிருக்கும் என்பதை அங்கே அன்று கலிங்க வீரர்கள் கண்டார்கள்.

அமீர் மூன்று புரவி வீரர்களைத் திடீரெனத் தன் குறுவாள்களுக்கும் பலி கொடுத்துக் குதிரையொன்றின் வயிற்றிலும் கத்தி எரிந்து குழப்பத்தை விளைவித்துப் புரவிப் படையைப் பிளந்து ஊடுருவியதும் வண்டி கோட்டை வாசலின் உயரத்திலிருந்து கணவேகமாகச் சரிவுப் பாதையில் பாய்ந்தது.

கோட்டை வாசலின் முகப்பிலிருந்து கடற்கரை மணலில் இறங்கிய அந்தப் பாதையின் ஆரம்பம் வந்ததும் சரேலெனக் கீழே குதித்த இளைய பல்லவன் தன் வாளை உருவிக்கொண்டு எதிரே வந்த புரவிப்படையைத் தேக்கினான்.

(தொடரும்...)

# னைய வரலாற்றுப் பார்வையை
# ட்டு திருகோணமலையில் கண்டுபிடிப்பு



பேராசிரியர் ப.புஸ்பரட்ணம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் சுப்பராயலு இக்கல்வெட்டில் (வரிகள் (3-5) வரும் "ஸ்ரீகுலோத்துங்கசோழக் காலிங்கராயநேன் ஈழமண்டலமான மும்முடி சோழமண்டல மெறிந்தும் கங்கராஜ காலிங்க விஜயவாகு தேவற்கு வீராபிஷேகம்" என்ற சொற்றொடரை புதிய செய்தி எனக் குறிப்பிட்டுளார். பேராசிரியர் இந்திரபாலா இத்தொடரில் உள்ள கங்கராஜ காலிங்கவிஜயவாகு என்பவன் 1215 இல் பொலநறுவை அரசை வெற்றி கொண்டு ஆட்சி செய்த கலிங்கமாகன் (மாகன் மாகோன்) என அடையாளப்படுத்து கின்றார். அவன் விஜயபாகு என்ற பெயராலும் அழைக்கப் பட்டான் என்பதற்கு 14 ஆம் நூற்றாண்டில் எழுந்த நிகாயசங் கிரஹய என்ற சிங்கள இலக்கியத்தில் வரும் குறிப்பை முக்கிய ஆதாரமாகக் காட்டியுள்ளார்.

இவற்றிலிருந்து, இலங்கையை வெற்றிகொண்டு பொலநறு வையில் ஆட்சி புரிந்த கலிங்கமாகன், குலோத்துங்கசோழ காலிங்கராயனால் அபிஷேகம் செய்யப்பட்டு ஆட்சியில் அமர்த்தப்பட்டவன் என்ற புதிய ஆதாரம் கிடைத்துள்ளது. இக்கல்வெட்டில் கூறப்படும் குலோத்துங்கசோழக் காலிங்கராயன் மூன்றாம் குலோத்துங்க சோழன் ஆட்சிக்காலத்தில் இலங் கையில் இருந்த சோழப்படைத் தளபதியாக அல்லது சோழ அரசப் பிரதிநிதியாக இருந்திருக்க வேண்டும்.

ஏனெனில் மூன்றாம் குலோத்துங்க சோழனது ஆட்சிக்கா லத்தில் (கி.பி. 1178-1218) அவன் இலங்கை மீது படையெடுத்து சில வெற்றிகளைப் பெற்றதாக அவனது பத்தாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டுக் கூறுகின்றது.. இங்கே கலிங்கமாகன் பொலநறுவை



இராச்சியத்தை கி.பி.1215 இல் வெற்றி கொண்டான் எனக் கூறப்படுகிறது. இதனால் குலோத்துங்கசோழ காலிங்கராயனால் கலிங்கமாகனுக்கு நடத்தப்பட்ட பட்டாபிஷேகம் மூன்றாம் குலோத்துங்க சோழனது ஆட்சியின் இறுதிக் காலப்பகுதியில் நடந்ததெனக் கூற முடியும்.

பொலநறுவை இராசதானியில் நிஸங்கமல்லன் ஆட்சியைத் தொடர்ந்து பல குழப்பங்களும், அயல்நாட்டுப் படையெடுப்புக் களும் ஏற்பட்டதைப் பாளி, சிங்கள இலக்கியங்கள் குறிப்பிடுகின் றன. இந்நிலையில் சோழ, கேரள தமிழ்ப்படை வீரர்களின் உதவியுடன் இலங்கை மீது படையெடுத்து வந்த கலிங்கமாகன் 1215 இல் பொலநறுவை இராசதானியைக் கைப்பற்றி 44 ஆண்டுகள் வரை ஆட்சி செய்தான் என்ற வரலாறு காணப்படு கின்றது. இவனது ஆட்சியில் வெறுப்படைந்த சிங்கள மக்களும், சிங்கள தலைநகரும் தெற்கு நோக்கி இடம்பெயர்ந்தபோது கலிங்கமாகன் தலைமையில் வடக்கே இன்னொரு அரசு தோன்றியதாக சூளவம்சம், ராஜவெலிய முதலான வரலாற்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. ஆயினும் இக்கலிங்கமாகன் யார்? எந்த நாட்டிலிருந்து படையெடுத்து வந்தவன் என்பதையிட்டு இதுவரை அறிஞர்கள் மத்தியில் வேறுபட்ட கருத்துக்களே இருந்துள்ளன. சில அறிஞர்கள் இவனை மலேசியா நாட்டிலுள்ள கலிங்கத்திலிருந்து படையெடுத்தவன் எனவும் கூறியுள்ளனர். இந்நிலையில் தற்போது கிடைத்துள்ள கல்வெட் டில் கலிங்கமாகன் கங்கை வம்சத்துடனும், கலிங்க நாட்டுடனும் தொடர்புடையவன் என்ற புதிய ஆதாரங்கள் கிடைத்துள்ளன. சோழர்கள் தம் திருமண உறவுகளால் கீழைச்சாளுக் கியரது (வேங்கி அரசு) கங்கை வம்சத்துடனும், படையெ டுப்புகள் மூலம் கலிங்க நாட்டுடனும் தொடர்பு கொண்டிருந்தனர் என்பதைக் கலிங்கத்துப்பரணியும், சோழக் கல்வெட்டுக்களும் உறுதிப்படுத்து கின்றன. யாழ்ப்பாணத்தில் அரசமைத்த ஆரியச்சக்கர வர்த்திகளும் கங்கை வம்சத்துடன் தொடர்புடையவர்கள் என அவ்வரசு தொடர் பாக எழுந்த இலக்கியங்கள் கூறுகின்றன. இவ்வாதாரங் களை அடிப்படையாகக் கொண்டு யாழ்ப்பாண அரசின் தோற்றத்தை கலிங்கமாகனுடன் தொடர்புபடுத்தி பேராசிரி யர் இந்திரபாலாவால் எழுதப்பட்ட அரிய கட்டுரை ஒன்று தற்போது எமக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அக்கட்டு ரையை மக்களுக்கும் மாணவர்களுக்கும் பயன்படும் வகையில் இலங்கை ஊடகங்களில் விரைவில் பிரசுரமாக இருப்பது இங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

இக்கல்வெட்டின் 8-10 வரிகளில் வரும் "திருக்காமக் கோட்ட நாச்சியாரை எழுந்தருளிவித்துத் திருப்ரதிஷ்டை பண்ணுவித்து" என்ற சொற்றொடர் இப்பிரதேசத்தில் சக்திக்கென தனிக்கோவில் (காமக்கோட்டம்) அமைக்கப் பட்ட புதிய செய்தியைக் கூறுவதாக உள்ளது. பேராசிரியர் பத்மநாதன் இதுபோன்ற செய்தி இலங்கையில் கிடைத்த பிற தமிழ்க் கல்வெட்டுகளில் இதுவரை காணப்படவில்லை எனக் குறிப்பிடுகின்றார். தமிழகத்தில் இரண்டாம் இராஜராஜ சோழன் காலத்தில் இருந்து சிவன் கோயிலுக்குப் பக்கத்தில் சக்திக்கு தனிக்கோயில் அமைக்கும் மரபு இருந்தமை தெரிகின்றது . அம்மரபு சமகாலத்தில் இலங்கையிலும் பின்பற்றப்பட்டமைக்கு இக்கல்வெட்டு சான்றாகும். கோமரன்கடவல சிவன்கோயில் குலோத்துங்க சோழக் காலிங்கராயன் காலத்திற்கு முன்பே பன்நெடுங்காலமாக இருந்திருக்கின்றது என்பதும் கல்வெட்டில் வரும் ஆதிக்ஷேத்ரம் என்ற சொற்றொடரால் தெரிகின்றது. காலிங்கராயன் ஈழத்தை வெற்றி கொண்டதற்கும் கலிங்கமாகனுக்குப் பட்டம் சூட்டியதற்கும் பிறகு இக்கோயிலுக்கு வந்து வழிபட்டு, சக்திக்காக தனிக்கோயில் எடுப்பித்து, தனக்கு சொந்தமாகக் கிடைத்த நிர்வாகப் பிரிவில் இருந்து சில நிலங்களை நிவந்தமாக கொடுத்தமையை இக்கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. இந்த நிலங்களுக்கும் கோயில் நிர்வாகத்திற்கும் உரித்துடையவர்களாக ஏற்பாடு செய்யப்பட்டவர்கள் காலிங்கராயன் சொற்படி இக்கல் வெட்டை பொறித்திருக்கிறார்கள் என்று தெரிகிறது.

கல்வெட்டின் ஓம்படைக்கிளவியில் குலோத்துங்க சோழக் காலிங்கராயனின் இந்த ஏற்பாடுகளுக்குப் பங்கம் செய்பவர்கள் கங்கைக் கரையில் ஆயிரம் குரால் (கபிலை) பசுக்களைக் கொன்ற பாவத்திற்கும், ஆயிரம் பிராமணர் களைக் கொன்ற பாவத்திற்கும் உட்பட்டு நாயாகவும் காகமாகவும் பிறப்பார்கள் எனக் குறிப்பிட்டு அவற்றின் உருவங்களும் கல்வெட்டுப் பொறிப்புக்கு கீழே கோட்டுரு வமாக வரையப்பட்டுள்ளன.

இக்கல்வெட்டால் அறியப்படும் முக்கிய வரலாற்றுச் செய்திகளோடு, அவற்றில் இடம்பெற்றுள்ள சில பெயர்கள், சொற்கள் தொடர்பாக அறிஞர்கள் கூறும் கருத்துக்களும் விளக்கங்களும் தமிழர் வரலாறு பற்றிய ஆய்வில் முக்கியத் துவம் வாய்ந்தனவாகக் காணப்படுகின்றன. முதலில் "ஸ்வயம்புவுமாந திருக்கோ (ணமலை) யுடைய நாய நாரை" என படிக்கப்பட்டதை பேராசிரியர் இரகுபதி "ஸ்வயம்புவுமாந திருக்கோயிலுடைய நாயநாரை" எனப் படித்திருப்பதை பேராசிரியர் சுப்பராயலு பொருத்தமான தென எடுத்துக்கொண்டுள்ளார். இச்சிவாலயத்தில் காணப்படும் சிவலிங்கத்தின் அமைப்பு ஸ்வயம்பு என்ற சொல்லுக்குப் பொருத்தமாக இருப்பதனால் இக்கல்வெட்டு இந்தக்கோயிலையே குறிப்பிடுகின்றது என்பது பேராசிரியர் இரகுபதியின் விளக்கமாகும். மேலும் அவர் கல்வெட்டில் வரும் இடப்பெயரை "லச்சிகாமபுரம்" என வாசித்து அது இப்பிரதேசத்திற்கு உட்பட்ட ஒரு இடத்தின் பெயர் எனக் குறிப்பிடுகின்றார். இதில் வரும் வேச்சார் நிலம் என்பது குளத்தோடு ஒட்டிய பயிர் நிலம் என்ற பொருளில் சிங்களக் கல்வெட்டுக்களில் வரும் வேசர (வாவி சார்ந்த) என்ற சொல் லுடன் தொடர்புடையது என்பதும் அவரது கருத்தா கும். பேராசிரியர் சுப்பராயலு கல்வெட்டில் வரும் "மாநாமத் துநாடு" என்ற பெயர் இங்குள்ள பரந்த பிரதேசத்தை குறித்த இடமாக இருக்கலாம் எனக் கருதுகின்றார். இக்கூற்றை பொருத்தமாக கருதும் பேராசிரியர் பத்மநாதன் இதற்குப் பெரியகுளம் கல்வெட்டில் வரும் இதையொத்த பெயரை ஆதாரமாகக் காட்டுகின்றார். இக்கல்வெட்டில் "பற்று" என்ற நிர்வாகப் பிரிவு பற்றிக் கூறப்பட்டுள்ளது. இப்பெயர் சோழர் ஆட்சியில் வளநாடு என்ற நிர்வாகப் பிரிவிற்குச் சமமாகப் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும் எனப் பேராசிரியர் பத்மநாதன் கருதுகின்றார். பற்று என்ற தமிழ்ச் சொல்



சிங்களத்தில் பத்து" என அழைக்கப்படுகின்றது. இச் சொற்கள் தற்காலத்திலும் இலங்கையின் பல பாகங்களி லும் நிர்வாக அலகுச் சொற்களாகப் பயன்படுத்தப்படு கின்றன.


இக்கல்வெட்டைப் படியெடுத்த போது கடும் மழையாக இருந்ததாலும், பிற்பகல் மூன்று மணிக்குப் பின்னர் இங்குள்ள காட்டில் யானைகளின் நடமாட்டம் அதிகமாக



இருக்கும் எனக் கூறப்பட்டதாலும் குறுகிய நேரத்திற்குள் இக்கல்வெட்டைக் படியெடுக்க வேண்டியிருந்தது. ஆயி னும் மீண்டும் இக்கல்வெட்டைப் படியெடுக்கவேண்டியிருப் பதால் மேலும் பல புதிய தகவல்கள் வெளிவரக்கூடும். இவ்விடத்தில் இக்கல்வெட்டைப் படிப்பதற்கும், அதன் வரலாற்று முக்கியத்துவத்தை வெளிக்கொணரவும் உதவிய என் ஆசிரியர்களுக்கும், எனது தொல்லியல் பட்டதாரி மாணவர்களுக்கும், ஆய்விடத்தை அடையாளப் படுத்திக் காட்டியதுடன் எம்முடன் இணைந்து பணியாற் றிய திருகோணமலை நண்பர்களுக்கும் என் நன்றிகள்.

# காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : உயர்ந்த மனிதன்
இயற்றியவர் : வாலி
இசை : எம்.எஸ்.விஸ்வநாதன்
பாடியவர்கள் : ரி.எம்.சௌந்தரராஜன், பி.சுசீலா



என் கேள்விக்கென்ன பதில்
என் கேள்விக்கென்ன பதில்
உன் பார்வைக்கென்ன பொருள்
மணமாலைக்கென்ன வழி
உன் மௌனம் என்ன மொழி
என் கேள்விக்கென்ன பதில்

பூவையர் உள்ளத்தில்
இந்த மௌனம் சம்மதமே
பூவையர் உள்ளத்தில்
இந்த மௌனம் சம்மதமே
சம்மதம் என்றே தான்
அந்த ஜாடையும் சொல்லிடுமே
சம்மதம் என்றே தான்
அந்த ஜாடையும் சொல்லிடுமே
வரவேண்டும் நல்ல துணை
தரவேண்டும் வாழ்வு தனை
நிலையாகும் உறவு முறை
பெறவேண்டும் இறுதிவரை
என் கேள்விக்கென்ன பதில்

புன்னகை அள்ளி வர
நடை போடும் பொன்மயிலே
புன்னகை அள்ளி வர
நடை போடும் பொன்மயிலே
அன்பெனும் பள்ளியிலே
புது மாணவியானவளே
அன்பெனும் பள்ளியிலே
புது மாணவியானவளே
விழி தானே சொல்லி தரும்
மனம் தானே எழுதி வரும்
ஒரு நாளில் பழகி விடும்
உடல் தானே துள்ளி விழும்
என் கேள்விக்கென்ன பதில்

அனுபவம் உண்டானால்
இந்த ரகசியம் புரியாதோ
பெண்மையின் சன்னதியில்
வந்து பார்த்தால் தெரியாதோ
அலை போலே குழலசைய
சிலை போல நடை பயில
வலை ஓசை இசை கொடுக்க
வருவேனே இணைந்திருக்க

என் கேள்விக்கென்ன பதில்
என் கேள்விக்கென்ன பதில்
உன் பார்வைக்கென்ன பொருள்
மணமாலை கொண்டு வரும்
திருநாளும் என்று வரும்

# வெள்ளைக்.....

(மூன்றாம் பக்கத் தொடர்ச்சி)

மாணவிகளைக் கண்ட பட்டா ரக வாகனம் மாணவிகள் செல்வதற்காக நிறுத்தப்படுகிறது. அதன் பின் வந்த மின்சார சபையின் ஒப்பந்த அடிப்படையிலான வாகனமும் நிறுத்தப்படுகிறது.

ஆனாலும் அதன் பின் அசுர வேகத்தில் வந்த இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்து கணப்பொழுதில் அந்த இரு வாகனங்களையும் மோதி வீதியைக் கடந்த மாணவிகள் மீது மோதுகிறது. இவை அருகிலிருந்த சி.சி.ரி.வி. காட்சிகளில் தெளிவாகப் புலப்படுகிறது.

மதுசாளினி சம்பவ இடத்திலேயே இறந்து போனார். மற்றொரு மாணவி படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இன்னொருவர் உயிர்ச் சேதம் இன்றி தப்பித்து விட்டார்.

இங்கு எங்கு பிழை உண்டு என்பதை நாம் ஒவ்வொருவரும் கவனிக்க வேண்டும்.

ஒருவேளை இவ்விடத்தில் அல்லது அதற்கு முன்னதாக போக்குவரத்து பொலிஸார் நின்றிருந்தால் இந்தக் கொடும் விபத்து நடந்திருக்காதோ என்னவோ?

சாரதிகள் வீதி விதிமுறைகளைப் பின்பற்றி செயற்பட வேண்டும். அதிலும் அரச சேவை சாரதிகள் இன்னும் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

பொலிஸார் தவறு நடப்பதைத் தடுக்கும் செயற்பாட்டை விட்டு விட்டு தவறு நடந்த பின் குற்றம் கண்டுபிடித்து ``பைன்'' எழுதி பயன் என்ன?

குச்சொழுங்கைகளுக்குள்ளும் வளைவுகளிலும் மறைந்து நின்று விதி மீறுபவர்களைப் பிடிப்பதற்குப் பதில் வெளிப்படையாய் வீதியின் வெளியே நின்றால், விதி மீறல்கள் நடக்காமல் இருக்க வாய்ப்பிருக்கிறது. இதை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனிக்க வேண்டும்.

“பிறக்கும் போது ஏழையாய் பிறப்பது உன் தவறல்ல. ஆனால் இறக்கும் போது ஏழையாய் சாவது தான் உன் தவறு என்ற உலக கோடீஸ்வரர் பில் கேட்ஸின் வார்த்தைகளை தன்னிறுத்தி தன் குடும்பத்தை மீட்க நினைத்த மதுசாளினியை அநியாயமாகக் கொன்றுவிட்டது வீதி விபத்து எனும் விதி. இதில் யாரை நொந்து கொள்வது.

(முற்றும்)

# அவமானத்தை உரமாக்கிய ஆட்ட நாயகன்

நியூசிலாந்தை வீழ்த்தி முதல் முறையாக இருபது-20 உலகக்கோப்பையை வென்றிருக்கிறது அவுஸ்திரேலிய அணி. அந்த அணி கோப்பை வெல்வதற்கு மிக முக்கிய காரணமாய் விளங்கி, தொடரின் நாயகனாக உருவெடுத்திருக்கிறார் வோர்னர். ஒரு மாதத்துக்கு முன்பு சன்ரைசர்ஸ் நிர்வாகத்தால் புறக்கணிக்கப்பட்ட அதே டேவிட் வோர்னர்தான்!

ஐ.பி.எல்.சீசனின் டொப் ஸ்கோரருக்குக் கொடுக்கப்படும் ஆரஞ்சு கோப்பை மூன்று முறை வென்ற ஒரே வீரர் வோர்னர்தான். இத்தொடரில் அதிக ரன்கள் அடித்திருக்கும் வெளிநாட்டு வீரரும் அவர்தான். தொடர்ந்து 6 சீசன்கள் 500+ ரன்கள் குவித்து ஐ.பி.எல் தொடரின் ஆகச்சிறந்த பட்டர்களுள் ஒருவராக உருவெடுத்திருக்கிறார். ஆனால், அவரை கப்டன் பதவியிலிருந்து விலக்கி, அணியிலிருந்தும் தூக்கியது சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணி.

எந்த ஒரு வீரரும் விமர்சனத்துக்கு அப்பாற்பட்டவர் இல்லை. அணிக்கு செட் ஆகவில்லையென்றால் நிச்சயம் வெளியேற்றலாம். ஆனால், அதை எப்படிச் செய்கிறார்கள் என்பதும் முக்கியம். அவரால்தான் அணி தோற்கிறது என்ற பிம்பம் ஏற்படும் வகையில் இருந்தது வோர்னரை சன்ரைசர்ஸ் கையாண்ட விதம். எதுவுமே சொல்லாமல் அவரை விலக்கியதோடு, கிரவுண்டுக்கும் கூட வரவேண்டாம் என்றிருக்கிறார்கள்.

சன்ரைசர்ஸ் ஒருபுறம் அவரைப் புரட்டிப் போட்டுக்கொண்டிருக்க, அவரது எண்களை வைத்து ஆய்வு செய்ய ஆரம்பித்தனர் கிரிக்கெட் ஆர்வலர்கள். வோர்னரின் மோசமான ஸ்டிரைக் ரேட் விமர்சனத்துக்குள்ளானது.

அவர் ஃபார்மிலேயே இல்லை என்பதை உறுதிப்படுத்தி, சன்ரைசர்ஸின் முடிவுக்கு நியாயம் சேர்த்தார்கள். கிரிக்கெட் உலகம், டேவிட் வோர்னர் எனும் அசாகய சூரனை தன் முதல் பக்கத்திலிருந்து அழித்தது.

வோர்னருக்கு இதுவொன்றும் புதிதில்லை. மூன்று ஆண்டுகளுக்கு முன் சேண்ட்பேப்பர்





பிரச்சினையில் சிக்கி ஓராண்டு தடை பெற்று கிரிக்கெட்டிலிருந்தே விலக வேண்டிய நிலைக்கும் தள்ளப்பட்டார்.

அன்று ஒட்டுமொத்த உலகமும் அவரைத் திட்டித் தீர்த்தது. ஏமாற்றுக்காரன் என்று முத்திரை குத்தியது. தன் தவறை உணர்ந்து கண்ணீர் சிந்திய வோர்னர், அந்த இருண்ட பக்கத்திலிருந்து மீண்டு வெளியே வந்தார். அதேபோல் தான் யார் என்பதை நிரூபித்திருக்கிறார் வோர்னர். இந்த உலகக் கோப்பையிலும் இவர் தான் இரண்டாவது டொப் ஸ்கோரர்.

அரையிறுதியில் 49 ரன்கள் எடுத்திருந்தவர், பந்து பட்டில் படாத போதும் வெளியேறி அதிர்ச்சியளித்தார்.

இறுதிப் போட்டியிலும் நிலைத்து நின்று விளையாடி அவுஸ்திரேலியாவுக்குக் கோப்பையை உறுதி செய்தார். தன்னை எத்தனை முறை வெளியேற்றினாலும் தன்னால் உச்சம் தொட முடியும் என்பதை உலக அரங்கில் மீண்டும் ஒருமுறை நிரூபித்திருக்கிறார்.

ஒரு தொடரின் செயற்பாட்டுக்காக ஒரு சம்பியன் பிளேயரை உதாசீனப்படுத்துவது மாபெரும் குற்றம். சென்னை சுப்பர் கிங்ஸ், மும்பை இந்தியன்ஸ் போன்ற அணிகள் தொடர்ந்து வெல்வதற்குக் காரணம், முக்கிய வீரர்களுக்குக் கொடுக்கும் அந்த மரியாதைதான். டோனி, ரோஹித் போன்றவர்களுக்குக் கொடுக்கப்படும் மரியாதை வோர்னருக்கும் கிடைத்திருக்க வேண்டும். அதைத்தான் இந்த உலகக் கோப்பையில் உரக்கச் சொல்லியிருக்கிறார் டேவிட் வோர்னர்.

# பைசா நகர் சாய்ந்த கோபுரம் (இத்தாலி)

அதன்படி சில ஆண்டுகள் கட்டடப்பணிகள் நிறுத்தப்பட்டன. கோபுரம் மேலும் சாயாமல் இருக்க சில ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டு மீண்டும் கட்டுமானப் பணிகள் 1260 இல் வில்லியம் இன்ஸ்பர்க் தலைமையில் தொடங்கின.

அப்பொழுதிலிருந்தே தொடர்ந்து அதன் சாய்வுத் தன்மையைத் தடுக்க பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டன. இத்தாலியின் சர்வாதிகாரி முசோலினி காலத்தில்கூட அதன் ஒரு பகுதியாக கோபுரத்தைச் சுற்றிலும் துளைகள் போடப்பட்டு அதன் வழியே சீமெந்து கலவைகள் ஊற்றப்பட்டன. ஆனால் அந்த முயற்சி பெரிதாக பலன் எதையும் தரவில்லை.

*1990* இல் யுனெஸ்கோ, பைசா கோபுரத்தை புராதனச் சின்னமாக அறிவித்ததிலிருந்து கூடுதல் கவனமும் நிதி ஆதாரங்களும் கிடைத்தன. *1990* இல் அதன் சாய்வுக் கோணம் அதிகரித்ததன் காரணமாக பைசா கோபுரம் பார்வையாளர்கள் வருவதற்கான அனுமதியை தற்காலிகமாக நிறுத்தி விட்டு கோபுரத்தின் சாய்வுத் தன்மையை குறைப்பதற்காகக் குழு ஒன்றை இத்தாலிய அரசு நியமித்தது.

ஜான் பர்லாண்ட் என்கிற மண்ணியல் பொறியாளரின் தலைமையில் 14 பேர் கொண்ட குழு கோபுரத்தை நிமிர்த்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்தது. ஜான் பர்லாண்ட் லண்டனில் உள்ள இம்பீரியல் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றிய அனுபவமிக்க புவியியல் மற்றும் கட்டடக்கலை நிபுணர்.

அவர்கள் முதலில் கோபுரத்தைச் சுற்றிலும் இரும்புக் கம்பிகளையும் வடங்களையும் துளைகளிட்டு செலுத்தினர். ஆனால் அந்த முயற்சி எதிர் விளைவையே தந்தது. இளகிய தன்மை கொண்ட மண் இன்னமும் பலமிழந்தது. மேலும் எடை அதிகரித்ததன் காரணமாக கோபுரம் இன்னும் அதிகமாக சாய்ந்தது. உடனே அந்தப் பணிகள் நிறுத்தப்பட்டு குழுவின் அவசரக் கூட்டம் கூட்டப்பட்டது.

அந்தக் கூட்டத்தில் இதற்கு முன்னர் சாய்ந்த கோபுரங்களை நிமிர்த்தும் பணியில் ஈடுபட்டு அதில் வெற்றி கண்ட சம்பவங்கள் விவாதிக்கப்பட்டன.

1832 ஆம் ஆண்டு இங்கிலாந்திலுள்ள நான்ஸ்விச் நகரில் இருக்கும் புனித சாட்ஸ் தேவாலயம் இப்படி சாய்ந்து கொண்டிருந்த போது விக்டோரியா மாகாணத்தின் தலைசிறந்த பொறியாளர் ஜேம்ஸ் ட்ரூப்ஷா மேற்கண்ட உத்திகளைப் பின்பற்றலாம் என முடிவு செய்யப்பட்டது.

(தொடரும்)



இந்தியாவில் கூட சாய்ந்த கோபுரம் ஒன்றுள்ளது. ஒடிசா மாநிலத்தில் சாம்பல்பூரில் இருந்து 23 கி.மீ.தொலைவில் மஹா நதிக்கரையில் அமைந்திருக்கும் ஹ்யூமா எனும் கிராமத்திலுள்ள சிவன் கோவில் கோபுரம் சாய்ந்த நிலையில் தான் காணப்படுகிறது.

கங்கா வம்சி பேரரசின் மூன்றாவது மன்னர் அனங்கபிமா தேவா என்பவரால் கட்டப்பட்டது. பின்னர் சவுகான் வம்சத்து ஐந்தாவது அரசன் பலியார் சிங் என்பவரால் புதுப்பிக்கப்பட்டது.

கேரள மாநிலம் கோட்டயத்தில் இருக்கும் எட்டுமானூர் மகாதேவர் ஆலயத்தின் தூண்கள் கூட சாய்ந்த நிலையில் காணப்படுகின்றனவாம்.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2453

### பவிதன்

செய்தி : மாணவர்கள் அனைவரும் மாஸ்க் அணிந்து பள்ளிச் சீருடையுடன் உற்சாகமாக பேருந்தில் புறப்பட்டனர்




மாணவர்கள் : நீ பார்த்த நாங்க உற்சாகமா ஸ்கூலுக்குப் போறதை நீ பாத்த

### ஆர்த்திகா



முருகனே என்னை ஒரு தடவைதான் கொலை பண்ணாரு




நீங்க ஒவ்வொரு வருசமும் மழை என்டும் பார்க்காம கொல்லுறீங்களேடா

### ரஜிகரன்

10 ஆவது பெயிலானதும் 6 மாசம் தையல் கிளாஸ் போக வேண்டியது




கல்யாண பத்திரிகையில பெயருக்கு கீழ பேஷன் டிசைனர்னு போட்டுக்க வேண்டியது

### ஜெயந்தி




### அமிர்தா

நமக்கு எல்லாம் யாரு ஆண்கள் தினம் கொண்டாடப் போறா



நாமே கொண்டாடிக்கிட்டாத்தான் உண்டு

### வரதன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

266

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## சிந்தனைக்கு...

**இரட்டிப்பு ஆபத்திலிருந்து மீள்வது எப்படி?**

பயப்பட வேண்டிய விடயங்களுக்கு பயம் இன்றி இருந்து கொள்வது ஆபத்தானது என்றும் அதே சமயம் பயம் கொள்ளத் தேவையற்ற விடயங்களுக்கு பயந்து கொண்டே இருப்பதும் ஆபத்தானது என்றும் நம்முன்னோர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

நாம் அன்றாட வாழ்வில் பயம் கொள்ளத் தேவையற்ற பலவற்றிற்கு பயந்து வாழ்ந்து கொண்



டிருக்கின்றோம். பால் குடிக்க பயம், தயிர் சாப்பிடப் பயம், தவசிமுருங்கை சாப்பிடப்பயம், இரவிலே இலை வகை உண்ணப் பயம், சில உயிர்க்காப்பு மருந்துகளை உள்ளெடுக்கப் பயம், இறால் சாப்பிடப் பயம், அகத்தி மரத்தை வீட்டில் வளர்க்கப் பயம், முட்டை சாப்பிடப் பயம், முட்டு வருத்தத்தால் கஷ்டப் படினும் பம் பாவிக்கப் பயம் இவ்வாறாக பயப்படத் தேவை அற்ற பலவற்றிக்கு நாம் பயந்து பயந்து வாழ்வதன் காரணம் என்ன?

அதேவேளை பயப்பட வேண்டிய பலவற்றிக்கு பயம் இன்றி வாழ்ந்து பல ஆபத்துக்களை தேடிக் கொள்கிறோமே? இதனை எவ்வாறு விளங்கிக் கொள்வது? உடல் பருத்திருந்தும் உல்லாசமாய் உலாவி வருகிறோம். சந்தோசமாக சோடா குடிக்கிறோம். எதுவித பயமுமின்றி உடற்பயிற்சி செய்யாதிருக்கிறோம்.

உடற்பயிற்சி செய்ய நேரமில்லை என்று விளக்கமும் கொடுக்கின்றோம். தினமும் தொலைக்காட்சிக்கு முன்னால் மணிக்கணக்காக உட்கார்ந்து இருந்து மகிழ்கிறோம். இரசாயனம் சேர்க்கப்பட்ட மென்பானங்களை அருந்துவதில் பெருமை கொள்கிறோம். சினிமா கதாநாயகர்கள் பாணியில் குடித்து புகைத்து கும்மாளம் அடித்து கதாநாயகர்களாய் உலாவருகிறோம். வாகனம் ஓடுவதில் "திறமையை" காட்ட முயல்கிறோம். இவ்வாறாக பயம் கொள்ள வேண்டிய பல விடயங்களை பயமின்றிச் செய்யத் துணிந்ததன் காரணம் என்ன?

இந்த இரட்டிப்பு ஆபத்திலி ருந்து மீள்வது எப்படி?


### தெளிவு பெறுவோம்

கஷ்டங்கள் வரும் பொழுது கடவுளின் ஞாபகம் சேர்ந்து வருகிறது. கவலைகளும் கஷ்டங்களும் தொடர்ந்தால் கடவுளிடம் மனமுருகி வேண்டியவையும் கிடையாது போனால் கோபம் கூட வருகிறது.

கேட்டும் கிடைக்காத போது கடவுள் நம்பிக்கையும் கேள்விக் குறி ஆகிவிடுகிறது. கேட்டுப் பெற்றுக் கொள்வதற்கும் எம்மைக் காப்பதற்கும் மட்டும் தான் கடவுள் இருக்கிறரா?சரி கேட்பவற்றை எல்லாம் கொடுக்கும் கடவுள் இருக்கிறார் என்று வைத்துக்கொள்வோம்.

நாம் எல்லாவற்றையும் கேட்க எல்லாமே கிடைக்குமானால் இன்னொருவனுக்கு ஒன்றுமே கிடைக்காமல் போகாதா? இது நியாயமாகுமா? இதையும் மீறி எல்லோருக்கும் எல்லாமே கிடைத்து விடின் பூவுலகம் எவ்வாறு இயங்க முடியும். ஒன்றின் இழப்பிலே இன்னொன்று கிடைப்பதும் தோல்விகளும் வெற்றிகளும் மாறி மாறி ஏற்படுவதும் எதிர்பார்ப்பவற்றிலே சில கிடைக்காமல் போவதும் எதிர்பாராமலேயே சில கிடைக்கப் பெறுவதும் சர்வநிச்சயமானது.

கடவுளிடம் எம்மை சரியான பாதையில் வழிநடத்துமாறு கேட்போம். எமது மனோபலத்தையும் எதையும் தாங்கி சமாளிக்கும் மன உறுதியையும் வளர்த்து விடக் கேட்போம். எமது சந்தோசங்களையும் முன்னேற்றங்களையும் கடவுளிடம் பகிர்ந்து கொள்வோம். எமது கவலைகளையும் பிரச்சினைகளையும் அவரிடம் முறை யிட்டு ஆறுதலும் தெளிவும் பெறுவோம்.



எல்லாம் வல்ல இறைவன் உலகை சரியான பாதையில் வழிநடத்துவார்.

**பெரியவர்களும் பெற்றோர்களும் ஒரு சகலகலா வல்லவர்களா?**

வளரும் குழந்தைகளின் மனதிலே பெரியவர்களும் பெற்றோர்களும் ஒரு சகலகலா வல்லவர்கள் என்ற மனப்பதிவே இருந்து கொண்டிருக்கும். தம்மை எந்தக் கஷ்டத்திலிருந்தும் பாதுகாப்பார்கள், தாம் விரும்புவதை செய்து தருவார்கள், சரியான பாதையிலே நடத்துவார்கள், நிலாவைக் கூடக் கையில் பிடிக்கும் வல்லமை உள்ளவர்கள், அவர்கள் செய்வதெல்லாம் நல்ல விடயங்களாகத்தான் இருக்கும் என்றெல்லாம் நம்பிக்கொள்வார்கள்.

இவ்வாறான ஒரு நிலையில் இந்தக் குழந்தைகளுக்கு முன்னால் பெரியவர்கள் சின்னத்தனமாக நடந்து கொள்ளும் பொழுதும் தம்மிடையே சண்டை செய்யும் பொழுதும், அழும் பொழுதும், தமது இயலாமையை வெளிப்படுத்தும் பொழுதும், தீய நடவடிக்கைகளில் ஈடுபடும் பொழுதும் குழந்தைகளின் மன ஓட்டம் குழப்பமடையும்.

இவர்களால் தம்மை பாதுகாக்க முடியுமா? என்ற பாதுகாப்பற்ற தன்மை தோன்றும். அந்த சிறிய மனங்களிலே தீய விடயங்கள் ஆழப்பதியும். இது அவர்களின் எதிர்கால வளர்ச்சிக்கும் ஆளுமை விருத்திக்கும் பெரும் பாதகமாக அமையும். எனவே சிறுவர் முன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற விடயம் பற்றி சிந்திப்பது பயன்தரும்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்